பள்ளிக் கல்வித் துறை

# தமிழ் நாடு
# மாநில கல்விக் கொள்கை- 2025

# பள்ளிக் கல்வி

புதிய பார்வையில் கல்வி:

உள்ளடங்கிய, சமத்துவ மற்றும் எதிர்கால ஆயத்தம்



தமிழ்நாடு அரசு

# தமிழ் நாடு
# மாநில கல்விக் கொள்கை- 2025
# பள்ளிக் கல்வி

பள்ளிக் கல்வித் துறை

# உள்ளடக்கம்


| வ. எண் | இயல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| - | தமிழ்நாடு மாநில கல்விக்கொள்கை - வரைவுச் சுருக்கம் | 1 |
| 1 | தமிழ்நாடு பள்ளிக்கல்வியின் தற்போதைய நிலை, சூழல், தொலைநோக்கு | 5 |
| 2 | சமத்துவம், உள்ளடக்கிய கல்வி மற்றும் சமூக நீதி | 14 |
| 3 | அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு | 19 |
| 4 | கலைத்திட்டம், கற்பித்தல் மறுசீரமைப்பு மற்றும் மொழிக்கொள்கை | 24 |
| 5 | 21ஆம் நூற்றாண்டின் திறன்கள் மற்றும் எண்மக் கல்வியறிவு | 39 |
| 6 | மதிப்பீட்டுச் சீர்த்திருத்தங்கள் | 48 |
| 7 | ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு | 54 |
| 8 | பாதுகாப்பான, உள்ளடங்கியப் பள்ளிகள் மற்றும் முழுமையான குழந்தை மேம்பாடு | 61 |
| 9 | எதிர்கால பள்ளிகளுக்கான நெகிழ்வுத்தன்மை மற்றும் நிலையானஉள்கட்டமைப்பு | 66 |
| 10 | சமூகப் பங்கேற்பு மற்றும் பரவலாக்கப்பட்ட நிருவாகம் | 71 |

# தமிழ்நாடு மாநில கல்விக்கொள்கை - 2025
# பள்ளிக் கல்வி

**வரைவுச் சுருக்கம்**

கல்வியில் சமூக சமத்துவத்திற்காக ஆழமாக வேரூன்றிய மாநிலத்தின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் எதிர்காலத்தை நோக்கிய ஒரு துணிச்சலான முன்னெடுப்பாகவும் தமிழ்நாடு மாநில கல்விக்கொள்கை 2025 வடிவமைக்கப்பட்டுள்ளது. விரிவான ஆலோசனைகள் மற்றும் உள்ளார்ந்த பகுப்பாய்வு மூலம் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கொள்கை, தமிழ்நாட்டின் தனித்துவமான பண்பாடு, மொழி மற்றும் சமூக மரபு ஆகியவற்றை உள்ளடக்கி, முற்போக்குடைய ஒரு விரிவான குழந்தை மையப் பார்வையைக் கொண்டதாக அமைந்துள்ளது. இந்தக் கொள்கையின் ஒவ்வொரு இயலும் மறுகட்டமைப்புக்கும் புதுப்பித்தலுக்குமான வழிமுறையை கவனமுடன் முன்வைக்கிறது. மேலும், இது ஒரு எழுச்சிமிக்க, சமத்துவமான மற்றும் எதிர்காலத்திற்குத் தயார்படுத்தும் கல்விமுறைக்கான ஒரு திட்ட வரைவை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**1.தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வியின் சூழல், தொலைநோக்குப் பார்வை மற்றும் தற்போதைய நிலை**

இந்த இயலில் தொழில்நுட்ப அணுகல் வேறுபாடுகள், கொரோனா பெருந்தொற்றுக்குப் பிந்தைய கற்றல் இடைவெளிகள் மற்றும் எதிர்காலத்திற்குத் தயார்படுத்தும் திறன்களின் தேவைகள் போன்ற புதிய சவால்களைக் கருத்தில் கொண்டு கல்வியில் தமிழ்நாட்டின் வரலாற்றுச் சாதனைகளான அனைவரையும் பள்ளியில் சேர்த்தல், பள்ளியில் இடைநிற்றல் விகிதத்தைக் குறைத்தல், வலுவான நலத்திட்டங்கள் ஆகியவற்றை மறுசீரமைப்பதை இக்கொள்கை உறுதி செய்கிறது. உள்ளடங்கிய சமச்சீரான மற்றும் மீட்புத்தன்மையுள்ள ஒரு கல்விமுறை மூலம் ஒவ்வொரு குழந்தையின் திறனையும் வளர்ப்பது என்ற ஒரு கட்டாயத் தொலைநோக்குப் பார்வையை இது வெளிப்படுத்துகிறது. சமூக மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப அவ்வப்போது உருவாகும் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாக விளங்கக்கூடிய ஒரு அறிவார்ந்த செயல்திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது.

**2.சமவாய்ப்பு, உள்ளடக்குதல் மற்றும் சமூகநீதி**

சாதி, பாலினம், புவியியல் அமைவிடம் மற்றும் திறமை ஆகியவற்றில் கல்விக்கான சமத்துவத்தை உறுதி செய்வதற்கு தமிழ்நாட்டின் சமூகநீதி மரபில் வேரூன்றிய, வலுவான செயல்திட்டத்தை இந்த இயல் கோடிட்டுக் காட்டுகிறது. இது பட்டியலினத்தவர், பழங்குடியினர், சிறுபான்மையினர், சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகள் (CWSN) மற்றும் முதல் தலைமுறை கற்போர் உள்ளிட்டவர்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதைக் கருத்தில் கொண்டுள்ளது. கற்றல் செயல்முறைகளிலிருந்து எந்தக் குழந்தையும் விடுபடாமலிருப்பதை உறுதி செய்ய, உதவித்தொகைகள், விடுதி வசதிகள், தடைகளற்ற உள்கட்டமைப்பு வசதிகள் முதல் உள்ளடங்கிய கல்விக்கான கலைத்திட்டம் மற்றும் தகைசால் தணிக்கை வரை இலக்கு நிர்ணயிக்கப்பட்ட உத்திகளை இந்த இயல் விவரிக்கிறது.



**3.அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு (BLN)**

வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கு அடிப்படைத் திறன்கள் அவசியம் என்பதை உணர்த்தும் வண்ணம் இந்த இயல் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை (BLN) மாநிலத்தின் மிக முக்கியமான கல்வி முன்னுரிமையாக நிலைநிறுத்துகிறது. மூன்றாம் வகுப்பின் நிறைவில் ஒவ்வொரு குழந்தையும் வாசித்தல் மற்றும் கணிதத் திறனை அடைவதை உறுதிசெய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட திட்டமே எண்ணும் எழுத்தும் திட்டம் ஆகும். வயதுக்கேற்ற மதிப்பீடுகள், குறைதீர் கற்பித்தல், விளையாட்டு அடிப்படையிலான கற்றல் மற்றும் சமூக ஈடுபாடுகள் ஆகியவற்றின் மூலம் - குறிப்பாக கிராமப்புற, பழங்குடியின மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் - ஆரம்பகால கற்றல் குறைபாட்டினை நீக்குவதற்கான ஒரு காலக்கெடுவுடன் கூடிய வழிமுறைகளை இந்த இயல் வழங்குகிறது.

**4.கலைத்திட்டம், கல்வியியல் சீர்திருத்தம் மற்றும் மொழிக் கொள்கை**

தொழில்நுட்பம் மற்றும் உலகமயமாக்கல் காரணமாக விரைவாக மாறிவரும் உலகில், பள்ளிக் கலைத்திட்டத்தை இந்த இயல் அனுபவப்பூர்வமாகவும், வினவுதல் அடிப்படையிலும், திறன் சார்ந்ததாகவும் மறு கட்டமைப்பு செய்கிறது. இது மனப்பாடம் செய்வதைக் குறைப்பது, சமூக- மனவெழுச்சி சார்ந்த கற்றலை வலுப்படுத்துதல், தமிழ்நாட்டின் கலாச்சார, பாரம்பரியத்தைப் பாடத்திட்டத்தில் ஒருங்கிணைப்பது போன்றவற்றைப் பரிந்துரைக்கிறது. கலை, விளையாட்டு மற்றும் செயல் திட்டம் அடிப்படையிலான கற்றல் போன்ற பன்முகக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் குறிப்பிடப்படுகின்றன. தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம் அனுமதிக்கும் பன்மொழிக்கல்வி, சமச்சீரான இருமொழிக் கொள்கை, கருத்தியல் தெளிவு மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியை ஊக்குவிக்க, குழவிப்பருவ - தாய்மொழி வழிக்கற்பித்தல் ஆகியவற்றை இந்த இயல் கோடிட்டுக் காட்டுகிறது.

**5. 21 ஆம் நூற்றாண்டின் திறன்கள், எதிர்காலத் திறன்கள் மற்றும் எண்மக் கல்வியறிவு**

கணினி யுகத்தில் தொழில்திறன் மற்றும் குடிமைப் பண்புகளை மாணவர்களிடம் வளர்க்கும் விதமாக எதிர்காலத் திட்டங்களைக் கட்டமைப்பதற்கான கூர் சிந்தனைத் திறன், படைப்பாற்றல் திறன், நிதியியல்சார் கல்வியறிவு, எண்மத் திறன், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் உலகளாவிய குடிமையுரிமை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் விதமாக இந்த இயல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது குறியீட்டு முறை, எந்திரனியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றிற்கான TN-SPARK திட்டத்தை முன்னிலைப்படுத்துகிறது. மேலும், கல்வித் தொலைக்காட்சி மற்றும் மணற்கேணி செயலி போன்ற நேரடி மற்றும் இணையவழிக் கற்றல் (blended learning) முறையினை விரிவுபடுத்துகிறது. இந்த இயல் 21ஆம் நூற்றாண்டின் அத்தியாவசியக் கற்றல் கூறுகளாக, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களுக்கு இடையேயான தொழில்நுட்ப அணுகல் வேறுபாடுகள், காலநிலைசார் கல்வியறிவு, தொழில் முனைவு மற்றும் குடிமைப் பொறுப்புகள் ஆகியவற்றைக் குறிப்பாகக் கோடிட்டுக் காட்டுகிறது.





**6.மதிப்பீட்டுச் சீர்திருத்தங்கள்**

மதிப்பீடு, தண்டனைக்குரியதாக இல்லாமல், கற்றலுக்கு ஆதரவாகவும், குறையறிதலுக்காகவும் இருத்தல் வேண்டும் என்பதை இந்த இயல் வலியுறுத்துகிறது. இது மதிப்பீட்டில் தற்போது பெரும்பங்கு வகிக்கும் நினைவாற்றல் சார்ந்த தேர்வுகளிலிருந்து விடுபட்டு தொடர்ச்சியான வளரறி மற்றும் திறன் சார்ந்த மதிப்பீட்டு முறைக்கு முன்னேறுவதற்கான தீவிர மாற்றத்திற்கு வழிவகுக்கிறது. செயல்திட்டம், ஒப்பார் குழு மதிப்பீடு மற்றும் சுயமதிப்பீடு போன்ற நுட்பங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இந்த இயல், 1-8 வகுப்புகளில் தேக்கம் என்பதை மறுக்கும் கொள்கைக்கு தமிழ்நாட்டின் பொறுப்புறுதியை மீளவும் வலியுறுத்துவதோடு, இணைப்புப்பயிற்சிகள், கற்றல் விளைவுகளின் கண்காணிப்பு, பாதிப்பிற்கு உள்ளாகக் கூடியவர்கள் மற்றும் முதல் தலைமுறைக் கற்போருக்கான தனித்துவமான ஆதரவு ஆகியவற்றைக் கொண்ட ஒரு முறைமையை அறிமுகப்படுத்துகிறது.

**7.ஆசிரியர் திறன் மேம்பாடு மற்றும் பணிசார் மேம்பாடு**

கல்விச் சீர்திருத்தங்கள் அவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்தும் ஆசிரியர்களைப் பொறுத்தே இருக்கும் என்பதை இந்த இயல் வலியுறுத்துகிறது. பணிமுன் பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சித் திட்டங்களை வலுப்படுத்துவதற்குப் பயிற்சிப் பார்வை எண்மத் தளம், ஒப்பார்குழு கண்காணிப்பு, சிறு சிறு கட்டங்கள் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான தலைமைப்பண்பு மேம்பாடு ஆகியவற்றை முன்வைக்கிறது. உள்ளடங்கிய கல்வி, எண்மக் கற்பித்தல், மற்றும் சமுதாய மனவெழுச்சிக் கற்றல் ஆகியவற்றின் திறன்களை வளர்ப்பதற்காக சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. பழங்குடியின, மலைப்பாங்கான மற்றும் பின்தங்கிய பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, சூழல்சார் பயிற்சியும் பள்ளி அளவிலான சவால்களைச் சந்திப்பதற்கான கூடுதல் உதவியும் அளிக்கப்படவுள்ளது.

**8.பாதுகாப்பு, உள்ளடங்கிய பள்ளிகள் மற்றும் முழுமையான குழந்தை மேம்பாடு**

பள்ளி என்பது கற்றுக்கொள்வதற்கான ஓர் இடம் மட்டுமல்லாமல் அது, தனிப்பட்ட திறன்களை வளர்ப்பதற்கான இடமுமாகும். இந்த இயல் உடல் ரீதியான பாதுகாப்பு, மனநல வளர்ச்சி மற்றும் சமூகம்சார் உள்ளடங்கிய பள்ளிகளை உருவாக்குவதற்கான ஒரு விரிவான பார்வையை முன்வைக்கிறது. இது குழந்தைகளின் உரிமைகள், பாலின விழிப்புணர்வு, மனநலம், உடல் தகுதி, கலைகள் மற்றும் வாழ்க்கைத் திறன்களை பள்ளிச்சூழலுடன் ஒருங்கிணைக்கிறது. முன்னோடித் திட்டங்களான மகிழ் முற்றம் (மாணவர் மன்றம்), ஆலோசனை உதவி மையங்கள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் உடல்நலம் சார்ந்த முன்னெடுப்புகள் போன்றவை குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் முழுமையான வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனால், மாணவர்கள் நம்பிக்கை உடையவர்களாகவும் மற்றவர்களிடம் பரிவு காட்டுபவர்களாகவும் வளர முடியும்.



**9.எதிர்காலப் பள்ளிகளுக்கான நெகிழ்வுத்தன்மை மற்றும் நிலையான உள்கட்டமைப்பு**

எதிர்காலத்திற்கு ஏற்ற கல்வி முறைக்குரிய உள்கட்டமைப்புகள் தேவை. திறன்மிகு வகுப்பறைகள், தடையற்ற அணுகுதல், அறிவியல் மற்றும் கணினி ஆய்வகங்கள் மற்றும் எண்மக் கருவிகள் மூலம் பள்ளிகளை நவீனமயமாக்கும் மாநிலத்தின் திட்டத்தை இந்த இயல் விவரிக்கிறது. பசுமை வளாகங்கள், மழைநீர் சேகரிப்பு மற்றும் சூரியசக்தி போன்ற நிலைத்தன்மைக்கான அம்சங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாதிரிப் பள்ளிகள் மற்றும் வெற்றிப் பள்ளிகள் போன்ற முன்னெடுப்புகள் தகைசால் மையங்களாக அமைக்கப்பட்டு, மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த திட்டமிடல் மூலம் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் அவற்றின் சிறந்த நடைமுறைகளைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**10. சமூக ஈடுபாடு மற்றும் நிருவாகப் பரவலாக்கம்**

பள்ளிகள் எவ்வாறு உண்மையான சமுதாய நிறுவனங்களாக மாற முடியும்? இதற்குப் பெற்றோர்கள், முன்னாள் மாணவர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் உள்ளூர் சமுதாயம் ஆகியவை பள்ளியுடன் இணைந்து செயல்படும் ஒரு 'கீழிருந்து மேல்' செல்லும் வடிவிலான பள்ளி நிருவாக அமைப்பைப் பரிந்துரைப்பதன் மூலம் இந்த இயல் பதிலளிக்கிறது. பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (SMC) பெருநிறுவன சமூகப் பொறுப்புக் (CSR) கூட்டாண்மைகள், முன்னாள் மாணவர் வலையமைப்புகள் ஆகியவை நம்ம ஸ்கூல், நம்ம ஊரு பள்ளி எனும் முன்முயற்சியின் முக்கிய அங்கங்களாகத் திகழ்கின்றன. இந்த இயல் உள்ளூர் அளவிலான திட்டமிடல், வெளிப்படையான கண்காணிப்பு, அதிகாரம் பெற்ற கல்விசார் பொறுப்பாளர்கள் ஆகியவற்றின் மூலம் பள்ளிகள் தங்கள் சமூகங்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிப்பதையும் அதற்கேற்பச் செயல்படுவதையும் உறுதிசெய்கிறது.

**முடிவுரை**

மாநிலம் முழுவதிலும் பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்கான தெளிவான, உள்ளடங்கிய மற்றும் எதிர்காலம் சார்ந்த வழிகாட்டுதலை தமிழ்நாடு மாநில கல்விக்கொள்கை 2025 வழங்குகிறது. சமத்துவம், சமூக நீதி மற்றும் பண்பாட்டுப் பெருமிதம் ஆகிய கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்டுள்ள இக்கல்விக்கொள்கை அடிப்படைக் கற்றல், கலைத்திட்டம், கற்பித்தல் முறைகள், ஆசிரியர் மேம்பாடு, மதிப்பீடு, எண்ம ஒருங்கிணைப்பு, உள்கட்டமைப்பு மற்றும் சமுதாயப் பங்கேற்பு ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான சீர்திருத்தங்களைக் கோடிட்டுக்காட்டுகிறது. கற்போர் ஒவ்வொருவரின் முழு திறனையும் வளர்க்கும் பாதுகாப்பான மற்றும் எழுச்சியுறு இடங்களாகப் பள்ளிகளை மாற்றத் திட்டமிடுகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் கண்ணியத்துடன் கற்றுக்கொள்ளவும், தன்னம்பிக்கையுடன் வளரவும், விரைந்த மாறுதலுக்கு உள்ளாவதும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதுமான உலகில் வளம்பெறவும் தேவையான கல்வியை உறுதி செய்யும் அர்ப்பணிப்பே தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கையின் இதயமாக அமைந்துள்ளது.



# இயல் 1: தமிழகப் பள்ளிக்கல்வியின் தற்போதைய நிலை, சூழல், தொலைநோக்கு

**1.1 முகவுரை**

இந்தியாவின் கல்வி வரலாற்றில் தமிழ்நாடு, நீண்ட காலமாகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டின் கல்விக் கொள்கைகள், நலம் சார்ந்த திட்டங்கள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கல்விக்கான பொறுப்புணர்வு முதலிய முன்னெடுப்புகளால், சமூக நீதிக்கும் பொருளாதாரச் சுதந்திரத்திற்கும் இட்டுச்செல்வது கல்வியே என்பதை உணர்ந்து, தமிழ்நாடு அதற்குத் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. அனைவருக்கும் கல்வி, பாலின இடைவெளியைச் சமன்செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் ஆகியவற்றின்வழி, கல்வியைப் பெறுவதில் தமிழ்நாடு கடந்த பல ஆண்டுகளாகப் பல்வேறு சாதனைகள் புரிந்துள்ளது.

அண்மைக் காலங்களில், உலகளாவிய மற்றும் தேசிய கல்விச் சூழ்நிலைகள் விரைவாக மாறிவருகின்றன. வேகமாக மாறிவரும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், சமூகப் பொருளாதார அமைப்புகள், புதிய வேலைவாய்ப்புகள் மற்றும் கொரோனா பெருந்தொற்று (COVID-19) போன்ற எதிர்பாராத நெருக்கடிகள் பள்ளிக் கல்விக்கான அறைகூவல்களாகவும், வாய்ப்புகளாகவும் அமைகின்றன. இவற்றை எதிர்கொள்ளும் வகையில் தமிழ்நாடு, கடந்தகாலச் சாதனைகளை வலுப்படுத்துவதோடு, எதிர்காலத் தேவைகளைத் திறம்பட எதிர்கொள்ளும்வண்ணம் மாறிவரும் சூழலுக்கும் எதிர்காலத்துக்குமான கல்விக் கொள்கையை உருவாக்கியுள்ளது.

பெரும் சவால்கள் நிறைந்த உலகில் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையும் தன் அறிவு, படைப்பாற்றல், மனிதநேயம் மற்றும் நெகிழ்வுத்தன்மை ஆகியவற்றை வளர்த்துக்கொள்ளும் வகையில் பயனுள்ள, ஆற்றல்மிக்க, எதிர்காலத்திற்கு ஆயத்தப்படுத்தும் கல்வியை உறுதிப்படுத்தும் வகையில் முழுமையான மற்றும் ஏற்றுக்கொள்ளும் வழிமுறைகளை இந்தக் கல்விக் கொள்கை கொண்டுள்ளது.

**1.2 தொலைநோக்கு**

“ஒவ்வொரு குழந்தையும் தன் தனித்திறமையை வளர்த்துக் கொள்ளும் வகையில் உள்ளடக்கிய, சமச்சீரான, நிலைத்தன்மையுடைய, எதிர்காலக் கல்விமுறைக்கான பள்ளிக் கல்வி அமைப்பைத் தமிழ்நாடு உருவாக்குவதன் மூலம் முழுமையான வளர்ச்சியையும் சமூக நீதியையும் உறுதி செய்கிறது. ஒவ்வொரு குழந்தையும் தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபில் வேரூன்றி 21ஆம் நூற்றாண்டின் திறன்களையும் மதிப்பீடுகளையும் பெற்று மனிதநேயமும், தன்னம்பிக்கையும் உள்ள பொறுப்பான குடிமக்களாக வளர்வதை இந்தக் கல்வி அமைப்பு இலக்காகக் கொள்கிறது.”



சமூக சமத்துவம், கல்வியில் நிபுணத்துவம் மற்றும் முழுமையான வளர்ச்சி ஆகியவற்றின்மீது தமிழ்நாட்டின் நீடித்த அர்ப்பணிப்பை இந்தத் தொலைநோக்கு வெளிக்காட்டுகிறது. கல்வி என்பது வாழ்வாதாரத்துக்கான கருவி மட்டுமல்ல; வாழ்நாள் முழுவதும் வலிமையும், பொறுப்பும் உள்ள குடிமக்களாக வளர்வதற்கான செயல்முறையும் ஆகும் என்பதை இது மிக ஆழமாக வலியுறுத்துகிறது.

**1.3 மாநில கல்விக் கொள்கைக்கான தேவை**

பள்ளிக்கல்வியில் தமிழ்நாட்டின் நிலையான முன்னேற்றம் வலுவான அடித்தளத்தை உருவாக்கியுள்ளது. எனினும், வளர்ந்து வரும் சமூக, பொருளாதார நிலைமைக்கேற்ப முன்னுரிமைகளும் அணுகுமுறைகளும் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டியுள்ளன.

மாநிலக் கல்விக் கொள்கை மாறுதலுக்குரிய மற்றும் வளர்ந்து வரும் ஓர் உயிர்ப்புள்ள ஆவணமாக இருத்தல் வேண்டும். இக்கொள்கை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பொருத்தப்பாடு உடையதாக மேம்படுத்தப்பட வேண்டும். மாறிவரும் சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, கல்விசார் பொறுப்பாளர்கள் வழங்கும் பின்னூட்டங்களின் அடிப்படையில், இக்கொள்கையின் ஒரு கூறாகிய எதிர்காலக் கல்விமுறை ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

**வளர்ந்து வரும் சமூகத் தேவைகள்:**

21ஆம் நூற்றாண்டில் வேலையின் தன்மை, வாழ்வாதாரம், குடிமக்களின் பொறுப்புகள் முதலியன வேகமாக மாறிவருகின்றன. எதிர்கால வாய்ப்புகள் மற்றும் அறைகூவல்களைத் திறம்பட எதிர்கொள்ள படைப்பாற்றல், ஒத்துழைப்பு, சிக்கல்களைத் தீர்க்கும் திறன், மின்னியல்சார் கல்வியறிவு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு உள்ளிட்ட திறன்களை மாணவர்கள் பெற்றிருத்தல் அவசியமாகும்.

**மக்கள்தொகை மாறுபாடுகள்:**

மாநிலத்திற்குள் ஏற்படும் நகரமயமாக்கல், இடம்பெயர்வு மற்றும் மக்கள்தொகை மாறுபாடுகள் ஆகியன அளவிடக்கூடியதும் உள்ளூர் அடிப்படையில் தீர்வுகாணக் கூடியதுமான கல்வி அமைப்புகளை எதிர்பார்க்கிறது. கல்வித் திட்டமிடலானது வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புறங்கள், சில இடங்களில் குறைந்து வரும் கிராமப்புற மக்கள்தொகை மற்றும் தொடர்ந்து அதிகரித்து வரும் கற்போரின் பின்புல வேறுபாடுகள் ஆகியவற்றால் ஏற்படும் கல்வித் தேவைகளை நிறைவு செய்வதாக இருக்கவேண்டும்.

**தொடர்ச்சியான சமத்துவமின்மை:**

கல்வியில் ஒட்டுமொத்த முன்னேற்றம் இருந்தபோதிலும், விளிம்பு நிலைச் சமூகங்கள், கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்கள், முதல் தலைமுறை கற்போர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரிடையே கற்றலில் ஏற்றத்தாழ்வு நீடிக்கிறது. அதனைக் களைவதிலும், சமமான கல்வி வாய்ப்புகளை உறுதி செய்வதிலும் கவனம் செலுத்தும் கல்விக் கொள்கை அவசியமாகிறது.





**தொழில்நுட்ப முன்னேற்றங்கள்:**

மின்னியமயமாக்கல் (digitalization) புதிய கற்றல் கருவிகள், இணைய வளங்கள் மற்றும் தனிப்பட்ட முறையில் கற்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆகிய வாய்ப்புகளை வழங்குகிறது. மேலும், இது தொழில்நுட்பத்தைக் கையாள நம்பகமான வாய்ப்பில்லாத நிலையில் உள்ளவர்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இதனைக் களைய அனைவருக்கும் சமமான தொழில்நுட்ப வாய்ப்புகளை உறுதி செய்வது உடனடித் தேவையாகும்.

**உலகமயமாக்கல் மற்றும் நிலைத்தன்மைக்கான அறைகூவல்கள்:**

இனி உலகளாவிய குடியுரிமை, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்க்கை ஆகியவை மாணவர்களின் விருப்பத் தேர்வுக்குரியவை அல்ல. ஆனால், அத்தியாவசியமானவை. கல்விசார் அடைவுகளுடன் இந்தத் திறன்களை ஒருங்கிணைக்கும் வகையில் கல்வியமைப்பு அமைய வேண்டும்.

**கொரோனா பெருந்தொற்றுக்குப் பிந்தைய கற்றல் இடைவெளிகள்:**

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் பள்ளிகள் நீண்டநாள்களாக மூடப்பட்டிருந்ததால், தொடர்கற்றல் பாதிக்கப்பட்டு, ஏற்கெனவே கற்றலில் இருந்த ஏற்றத்தாழ்வு மேலும் அதிகரித்தது. எனவே, குறைதீர்க் கற்பித்தல் மற்றும் விரைவுபடுத்தப்பட்ட கற்றல் முன்னெடுப்புகள் வாயிலாக இக்கற்றல் இடைவெளிகளைக் குறைப்பது நீண்டகாலக் கல்விச் சமத்துவத்திற்கும் தரத்திற்கும் மிக முக்கியமானதாகும்.

### 1.4 தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி அமைப்பு – ஒரு பார்வை

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை, இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவில், மிகவும் பரவலாக்கப்பட்ட பள்ளிக் கல்வி அமைப்பைக் கொண்டுள்ளது. இத்துறை முன்பருவக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை பல்வேறு நிலைகளைக் கொண்டுள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் மேற்பார்வை செய்கிறது.

மார்ச் 2024இன்படி, பள்ளிக் கல்வித்துறை 58,800க்கும் மேற்பட்ட பள்ளிகளையும் 1.16 கோடி மாணவர்களையும் கிட்டத்தட்ட 3 இலட்சம் ஆசிரியர்களையும் கொண்டுள்ளது. பள்ளிகளில் கல்விசார் செயல்பாடுகளைக் திறம்படக் கண்காணிக்கவும் ஆதரவளிக்கவும் மாநிலம் முதல் மாவட்டம், ஒன்றியம் மற்றும் குறுவள மையம் வரை பரவலாக்கப்பட்ட நிருவாக அமைப்பு உள்ளது. பள்ளிக் கல்வியின் தரத்தினை மேம்படுத்தவும் உள்ளடங்கிய கல்வியை வழங்கவும் உள்கட்டமைப்பு மேம்பாடு, கலைத்திட்டச் சீரமைப்புகள், ஆசிரியர் பணிநியமனம் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, மாணவர் நலத்திட்டங்கள் மற்றும் மின்னியப் பாடப்பொருளுக்கான முன்னெடுப்புகள் ஆகியவற்றையும் பள்ளிக் கல்வித்துறை மேற்கொள்கிறது.



### 1.5 கல்வி குறிகாட்டிகள் மற்றும் தற்போதைய நிலை:

### 1.5.1 சேர்க்கை மற்றும் தக்கவைத்தல்

தமிழ்நாடு அனைத்து நிலைகளிலும் மாணவர் சேர்க்கையில் தொடர்ந்து உச்ச அளவினைப் பதிவு செய்துள்ளது. மொத்த சேர்க்கை விகிதம் (GER) தொடக்கநிலை, உயர் தொடக்கநிலை மற்றும் இடைநிலை ஆகியவற்றில் 95 விழுக்காட்டிற்கும் மேல் உள்ளது. இது பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரும் கல்வி பெறுவதை உறுதி செய்கின்றது. உயர்தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கைக்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் வாயிலாக உயர்தொடக்க நிலையில் 102.6 விழுக்காடு சிறப்பான நிலையை எட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நிகர சேர்க்கை விகிதம் (NER), மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தைவிட (GER) சற்று குறைவாக இருந்தாலும், குறிப்பாகத் தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலைகளில் சேர்க்கை விகிதம் 85 விழுக்காட்டைவிட அதிகமாக இருப்பது நம்பிக்கையளிப்பதாக உள்ளது. காலை உணவு மற்றும் மதிய உணவுத் திட்டங்கள், பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள் போன்ற வெற்றிகரமான நலத்திட்டங்களால் தொடக்க, உயர் தொடக்க நிலைகளில் இடைநிற்றல் குறைந்து தக்கவைப்பு விகிதம் 97 விழுக்காட்டைவிட அதிகமாக உள்ளது.

### 1.5.2 இடைநிற்றல் மற்றும் மாறுதல் விகிதங்கள்

தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் குழந்தை மைய முன்னெடுப்புகளால் தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலைகளில் இடைநிற்றல் இல்லாத நிலையைத் தமிழ்நாடு திறம்படத் தக்கவைத்துள்ளது. இருப்பினும், இடைநிலைக் கல்வியில் இடைநிற்றல் விகிதம் 7.7 விழுக்காடாக இருப்பது தீவிரமான கல்வி மற்றும் தொழில் வழிகாட்டுதலுக்கான தேவையை எடுத்துக்காட்டுகிறது.

தொடக்க மற்றும் உயர்தொடக்க நிலைகளில் தேக்கமில்லா மாணவர் தேர்ச்சி காரணமாகத் தேர்ச்சி விழுக்காடு 100 ஆக உள்ளது. அதே நேரத்தில் இடைநிலை மற்றும் மேல்நிலைகளில் மாணவர் தேர்ச்சி விகிதம், அதிகபட்சமாக முறையே 95.6 விழுக்காடு மற்றும் 92.3 விழுக்காடாக உள்ளன. இடைநிலைக் கல்வியில் 95.6 விழுக்காடு தேர்ச்சி பெற்ற போதிலும்,மேல்நிலையில் 85.9 விழுக்காடு மாணவர்களே கல்வியைத் தொடர்கின்றனர். இது இடைநிலைக் கல்விக்குப் பின்பு தொழில் மற்றும் பட்டயக் கல்விக்கான மாணவர்களின் ஆர்வத்தைக் காட்டுவதாக உள்ளது.

### 1.6 கல்வியில் பின்தங்கிய வட்டாரங்கள் (EEB)

சிறப்பு கவனம் அளிக்கும் வகையில் பெண்கல்வியில் பின்தங்கிய மற்றும் பாலின இடைவெளி அதிகம் உள்ள வட்டாரங்கள் அடையாளம் காணப்படும். இவ்வட்டாரங்களில் கூடுதல் உள்கட்டமைப்பு, பெண் குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி உதவித்தொகை,





குறைதீர்க் கற்பித்தல், விழிப்புணர்வு நிகழ்வுகள் ஆகியவற்றின் வாயிலாகப் பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கவும் மற்றும் இடைநிற்றலைத் தவிர்க்கவும் அரசு இலக்கு நோக்கிய செயல்பாடுகளைத் திட்டமிட்டுள்ளது. இவ்வட்டாரங்களின் மேம்பாட்டிற்கான உத்திகளில் கவனம் செலுத்தும்விதமாக எதிர்காலக் கொள்கை சார்ந்த கல்வி முன்னெடுப்புகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### 1.7 முதன்மைத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள்

#### 1.7.1 அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு (BLN)

எண்ணும் எழுத்தும் இயக்கத்தின் (2022-2025) நோக்கம் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை மாணவர்கள் அனைவரும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்கள் பெறுதலை உறுதிசெய்தல் ஆகும். செயல்பாட்டின் வழி நிலைவாரியான கற்றல், தொடர் மதிப்பீடு, மாணவர் பயிற்சி ஏடுகள், செயலி வாயிலான மதிப்பீடு ஆகியவற்றின் மூலம் மாணவர்களின் கற்றல் இடைவெளியைக் கண்டறிந்து அதற்கான கல்வி இடைவினைச் செயல்பாடுகளை வழங்குகிறது.

இல்லம் தேடிக் கல்வித் திட்டம்(2021-2022) என்பது கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் தொடக்க, உயர்தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இழப்புகளைக் குறைக்க, 2 இலட்சத்திற்கும் அதிகமான தன்னார்வலர்களைக் கொண்டு மாணவர்களின் வீட்டிற்கு அருகில் தொடங்கப்பட்ட மிகவும் வெற்றிகரமான திட்டமாகும்.

#### 1.7.2 உள்கட்டமைப்பு மேம்பாடு

**மாதிரிப் பள்ளிகள்**

அனைத்து மாவட்டங்களிலும் நவீன உள்கட்டமைப்பு மற்றும் முழுமையான வசதிகளுடன் தரமான உயர்கல்வியை வழங்க மாதிரிப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த உண்டு-உறைவிடப் பள்ளிகள், 9 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் முதல்தர உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்குச் சிறப்புப் பயிற்சிகளையும் திறன்மேம்பாட்டுப் பயிற்சிகளையும் வழங்குவதில் கவனம் செலுத்துகின்றன. மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 2024-25 வரை 38 மாதிரிப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வகை மாதிரிப் பள்ளிகளின் வெற்றிகரமான செயல்பாடுகளைப் பிற அரசுப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துவதற்கு வட்டார மற்றும் மாவட்ட வளக்குழுக்கள் வாயிலாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வெற்றிப் பள்ளிகள் – புகழ்பெற்ற நிறுவனங்களை இலக்காகக் கொண்ட எழுச்சிமிகு கல்வி**

**வெற்றிப் பள்ளிகள்** என்பது, ஓர் வட்டாரத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படும் அரசுப் பள்ளியைத் தேர்ந்தெடுத்து, மாதிரிப் பள்ளிகளைப் போன்ற அனைத்து வசதிகளையும் வழங்குவதற்காகத் தொடங்கப்பட்ட மாநில அரசின் முன்னெடுப்பாகும்.



இதன் மூலம் மாணவர்கள் உயர் தரவரிசையில் உள்ள முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து கல்வி பெறமுடியும்.

அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் பள்ளிகள் அடையாளம் காணப்பட்டு வெற்றிப் பள்ளிகளாக மேம்படுத்தப்படும். இந்தப் பள்ளிகளைக் கண்காணிக்கவும் உதவி செய்யவும் ஒவ்வொரு மாவட்டமும் வட்டார அளவிலான ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளது. ஒப்பார் குழுக் கற்றல் மற்றும் அறிவுப் பகிர்வை ஊக்குவிக்கும் இவ்வெற்றிப் பள்ளிகள் அருகிலுள்ள பள்ளிகளுக்குப் பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வழங்கும் மையங்களாகவும் செயல்படும்.

தரமான, சமமான மற்றும் உள்ளடக்கிய கல்வியை வழங்குவதற்கான தமிழகத்தின் உறுதிப்பாட்டை மாதிரிப் பள்ளிகள் மற்றும் வெற்றிப் பள்ளிகள் வெளிப்படுத்துகின்றன. இவை கல்விப்புதுமை மற்றும் தகைசால் மையங்களாக மாற ஆயத்தமாகி வருவதோடு பள்ளிக் கல்வியின் தரத்தை மாநிலம் முழுவதும் ஒட்டுமொத்தமாக உயர்த்தப் பங்காற்றுகின்றன.

கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் அறிவியல் மற்றும் கணிதக் கல்வியை மேம்படுத்த 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட **வானவில் மன்றம்,** 100 நடமாடும் ஆய்வகங்களை நிறுவியுள்ளது. இந்த நடமாடும் ஆய்வகங்கள் 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அன்றாட வாழ்வில் அறிவியலின் பங்கு மற்றும் ஆராய்ச்சி அடிப்படையிலான கற்றல் அனுபவங்களை வழங்குகின்றன.

கூடுதலாக, நவீனக் கற்றல் கருவிகளை அனைவரும் எளிதாக அடைவதை உறுதி செய்யும் வகையில் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு, மின்னியல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகங்களின் எண்ணிக்கை மாநிலம் முழுவதும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.7.3 நலம் மற்றும் உதவித் திட்டங்கள்

2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட **முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்,** அரசுப் பள்ளிகளில் உள்ள தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்தான காலை உணவை வழங்குகிறது. இத்திட்டம் மாணவர்களின் பசியைப் போக்குவதோடு கற்றலில் கவனத்தையும் உரிய நேரத்தில் பள்ளிக்கு வருவதையும் வருகைப் பதிவையும் மேம்படுத்தியுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குப் **பாடப்புத்தகங்கள், சீருடைகள்** மற்றும் பிற வசதிகளை அரசு தொடர்ந்து வழங்குகிறது. குழந்தைகள் கல்வி பெறுவதற்கு நிதி நெருக்கடிகள் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக, தொலைதூரப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் **போக்குவரத்து வசதிகள்** வழங்கப்பட்டு வருகின்றன.





மேலும், **தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டம்** போன்ற முயற்சிகள் உயர்கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாதாந்திர நிதி உதவியை வழங்குகின்றன. புதுமைப்பெண் திட்டம், இளமைப் பருவத் திருமண விகிதங்களைக் குறைப்பதோடு கல்வி மூலம் பெண்களின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கிறது.

### 1.7.4 தொழிலுக்கான ஆயத்தநிலை மற்றும் உலகளாவிய அனுபவம்

**நான் முதல்வன் திட்டம்** என்பது ஒன்பதாம் வகுப்பு முதல் மாணவர்கள் தங்களின் தனித்திறன்களை அடையாளம் காண்பதற்கும் தொழில் சார்ந்த திட்டமிடுதலுக்கும் வழிகாட்டுதல் பெற வழங்கப்படும் திறன் மேம்பாட்டு முன்னெடுப்பாகும்.

கிராமப்புற மாணவர்களுக்கு உலகளாவிய அனுபவங்கள் மற்றும் எண்மத் திறன்களை வழங்குவதற்காக, உயர்கல்வி நிறுவனங்களைப் பார்வையிடவுடம் சர்வதேச கல்விச் சுற்றுலாக்களுக்கும் தமிழ்நாடு அரசு வாய்ப்பளித்துள்ளது. பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு, ரோபாட்டிக்ஸ் மற்றும் (AI) கணினி அறிவியல் கல்விக்கான இணையதளக் கருவிகள் பற்றி அறிந்து கொள்வதற்காக TN SPARK திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், முன்னணி தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களில் சேரும் மாணவர்களுக்கு முதல் பயணக் கட்டணம் மற்றும் கல்விக்கட்டணங்களை அரசே வழங்குகிறது. இதன் மூலம் சமூக, பொருளாதார வகையில் பின்தங்கிய மாணவர்களுக்குச் சமமான வாய்ப்புகளை உறுதி செய்கிறது.

### 1.7.5 மாணவர் பாதுகாப்பு, ஈடுபாடு மற்றும் நலவாழ்வு

மகிழ் முற்றம் என்பது குழு உருவாக்கம், ஒத்துழைப்பு, தலைமைத்துவம் மற்றும் சமூக ஒருங்கிணைப்பை வளர்ப்பதற்கான அமைப்பாகும். கலைத் திருவிழா, தேசிய மாணவர் படை (NCC), நாட்டு நலப்பணித் திட்டம் (NSS), சாரண, சாரணியர் இயக்கம், சுற்றுச்சூழல் மன்றம், அறிவியல் மன்றம், இலக்கிய மன்றம் மற்றும் விளையாட்டு போன்ற செயல்பாடுகள் மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு அடிகோலுகின்றன.

### 1.7.6 கண்காணித்தல் மற்றும் தரத்தை உறுதி செய்தல்

பள்ளிப் பார்வை (செயலி) என்பது வகுப்பறையை உற்றுநோக்கவும், கற்றல் விளைவுகள், உள்கட்டமைப்பு, நிருவாகம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பள்ளிகளின் கூறுகளைக் கண்காணிக்கவும் மற்றும் தரத்தை உறுதி செய்யவும் உதவும் செயலியாகும். இந்தச் செயலி, துறையின் அனைத்து அலுவலர்களாலும் பயன்படுத்தப்படுகிறது.

மாணவர்களுக்குக் கல்வி, தொழில் மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகள் குறித்து ஆலோசனை மற்றும் உடனடி உதவி வழங்கவும், குறைகளைத் தீர்க்கவும் 24x7 மாணவர் உதவி எண் (14417) செயல்பட்டு வருகிறது.



**1.8 நிதி ஒதுக்கீடு மற்றும் பாதுகாப்பு (2024-25)**

2024-25 தமிழ்நாடு வரவுசெலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்விக்காக ரூ.44,042 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கல்வித் துறைகளுக்குள் மிகப்பெரும் நிதி ஒதுக்கீடு ஆகும். இது தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வியை வலுப்படுத்துவதில் மாநிலம் அளித்துள்ள முன்னிரிமையை எடுத்துக்காட்டுகிறது.

**முக்கிய சிறப்பம்சங்கள்:**

பள்ளிக் கல்வி வரவுசெலவுத் திட்டம் 2024-25: ரூ. 44,042 கோடி
மொத்த மாநிலச் செலவினங்களில் பங்கு: 13.7%

கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பள்ளிகளில் சமமான கல்வி வாய்ப்பு மற்றும் உள்கட்டமைப்பை அனைவருக்கும் உறுதிசெய்யும் வகையில், தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு மாணவருக்கான மிக உயர்ந்த செலவின விகிதங்களில் ஒன்றைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் (SS) வட்டார அரசு வழங்கவேண்டிய நிதியைப் பெறுவதில் சவால்கள் இருந்தபோதிலும், தமிழ்நாடு அரசு தனது சொந்தப் பங்களிப்பின் மூலம் குறிப்பிடத்தக்க திட்டங்கள் தொடர்ந்து செயல்படுவதை உறுதி செய்துள்ளது.

பள்ளிக் கல்விக்கான 2024-25 வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு விரிவான உள்கட்டமைப்பு மேம்பாடு, எண்ம வளங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் முழுமையான கற்றல் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

| உட்கூறு | வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு (ரூ கோடியில்) |
|---|---|
| பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாடு | **1,000** |
| திறன் வகுப்பறைகள் மற்றும் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் | **160** |
| கல்வித் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் எண்ம வளங்கள் மேம்பாடு | **56** |
| 2676 பள்ளிகளில் திறன் வகுப்பறைகள் | **65** |
| ஒருங்கிணைந்த கல்வி (மாநிலப் பங்கு மற்றும் சம்பளங்கள்) | **4150** |
| பாடநூல்கள், சீருடைகள், இலவசப் பேருந்துப் பயணச்சீட்டு, சிறப்பு ஊக்கத்தொகைகள் | வருடாந்திர வழங்கல் |
| நம்ம ஊரு நம்ம பள்ளி திட்டம் (பெருநிறுவனங்களுக்குரிய சமூகப் பொறுப்புகள், முன்னாள் மாணவர்கள், சமூகப் பங்களிப்பு) | தொகுப்பு நிதி மாதிரி செயலில் உள்ளது (Active, Pooled funding model) |





**குறிப்பிடத்தக்க திட்டங்கள்**

- பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்: புதிய வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பறைகளுக்கு ரூ.1,000 கோடி ஒதுக்கீடு.
- வெற்றிப் பள்ளிகள் / தகைசால் பள்ளிகள்: அதிக செயல்திறன் கொண்ட அரசுப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு நவீனமயமாக்கல் மற்றும் எண்மக் கற்றலுக்கான தொடர்ச்சியான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு.
- எண்மக் கற்றல் உள்கட்டமைப்பு: திறன் வகுப்பறைகளை நிறுவுவதற்கு ரூ.65 கோடி: 2,000 கணினி ஆய்வகங்களை மேம்படுத்துவதற்கு ரூ.160 கோடி.



# இயல் 2: சமத்துவம், உள்ளடக்கிய கல்வி மற்றும் சமூக நீதி

**அறிமுகம்**

பாலினம், சமூக பொருளாதார நிலை, சாதி, மதம், திறன் மற்றும் புவியியல் அமைப்பு ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாமல், ஒவ்வொரு குழந்தையும் தரமான பள்ளிக் கல்வியைப் பெறுவதற்கும் தங்களின் முழுத்திறனை உணர்வதற்கும் உரிய வாய்ப்பையும் சமச்சீரான, உள்ளடக்கிய மற்றும் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட கல்விமுறை உறுதி செய்கிறது. தமிழ்நாடு அதன் சமூக வளர்ச்சி மற்றும் நலம் சார்ந்த கொள்கைகள் வாயிலாகப் பாரம்பரியமாகக் கடைப்பிடித்து வரும் தன்மதிப்பு, சமூகப் பங்கேற்பு மற்றும் சமூக நீதியை வளர்ப்பதற்கான ஒரு வழிமுறையாக, நீண்ட காலமாக உள்ளடக்கிய கல்வியை முதன்மையாக வழங்கி வருகிறது.

தமிழ்நாடு மாணவர் சேர்க்கைக்கான வாய்ப்புகள், பாலினச் சமத்துவம் மற்றும் தக்கவைத்தல் ஆகிய நடைமுறைகளில் குறிப்பிடத்தக்க பலனடைந்துள்ளது. இருப்பினும், கற்றலில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், விளிம்புநிலைக் குழுக்களின் முழு பங்கேற்பை உறுதிசெய்தல் மற்றும் சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கான (CWSN) உள்கட்டமைப்பு மற்றும் மனப்பான்மை சார்ந்த தடைகளை நீக்குதல் ஆகியவற்றில் புதிய, தொடர்ச்சியான அறைகூவல்கள் உள்ளன. இலக்கு நோக்கிய சூழலுக்கேற்ற கற்றல் இடைவினைகள், உள்கட்டமைப்பு மேம்பாடு, முறையான சீர்திருத்தங்கள் மற்றும் வலுப்படுத்தப்பட்ட கண்காணிப்பு வழிமுறைகள் ஆகியவற்றின் வாயிலாக சமத்துவம், உள்ளடக்கிய தன்மை மற்றும் சமூக நீதியை மேம்படுத்தும் தமிழ்நாட்டின் முழுமையான வழிமுறைகளை இந்த இயல் கோடிட்டுக் காட்டுகிறது.

**தற்போதைய நிலை**

தமிழ்நாடு, பள்ளிக் கல்வியின் அனைத்து நிலைகளிலும் உச்சபட்ச ஒட்டுமொத்தச் சேர்க்கை விகிதத்தை(GER)யும் பாலினச் சமத்துவக் குறியீட்டையும் தொடர்ந்து தக்கவைத்து வருகிறது. சீருடைகள், பாடப்புத்தகங்கள், மிதிவண்டிகள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டம் போன்ற தமிழ்நாட்டிற்கே உரிய சிறப்புமிகு நலத்திட்டங்களை வழங்குதல் வாயிலாக, குறிப்பாக விளிம்புநிலைச் சமூகங்களைச் சேர்ந்த சிறுமிகள் மற்றும் குழந்தைகள் சேர்க்கை, வருகைப் பதிவு மற்றும் தக்கவைப்பு விகிதங்களைக் கணிசமாக மேம்படுத்தியுள்ளது.

ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்களையும் சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகள், முதல் தலைமுறைக் கற்போருக்கு உதவும் பிற திட்டங்களையும் உள்ளடக்கிய கல்வி முயற்சிகளையும் அரசு தீவிரமாகச் செயல்படுத்தியுள்ளது. இருப்பினும், பட்டியலினத்தவர் (SC), பழங்குடியினர் (ST), சிறுபான்மையினர், சிறப்புத் தேவைகள்





உள்ள குழந்தைகள் மற்றும் புவியியல் அமைப்பு காரணமாகத் தனிமைப்படுத்தப்பட்டோர், பொருளாதார நிலையில் பின்தங்கியோரின் குழந்தைகள் ஆகியோரிடையே கற்றல் விளைவுகள், முன்னேற்ற வீதம் மற்றும் உயர்கல்விக்கான வாய்ப்புகளைப் பெறுதல் ஆகியவற்றில் ஏற்றத்தாழ்வுகள் தொடர்கின்றன.

**கவனம் ஈர்க்கும் அறைகூவல்கள்**

- சில குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ள பட்டியலினத்தவர், பழங்குடியினர், சிறுபான்மையினர் ஆகியோரிடையே காணப்படும் ஒட்டுமொத்தச் சேர்க்கை விகிதம், இடைநிற்றல் விகிதம் மற்றும் கற்றல் விளைவுகள் ஆகியவற்றில் ஏற்றத்தாழ்வுகள் தொடர்கின்றன.
- உள்கட்டமைப்பு, மனப்பான்மை, மற்றும் கலைத்திட்டம் போன்றவற்றால் ஏற்படும் தடைகள், மாற்றுத் திறனுடைய குழந்தைகள் பள்ளிக் கல்வியில் முழுமையாகப் பங்கேற்பதற்கு உகந்ததாக இல்லாமை.
- முதல் தலைமுறைக் கற்போர், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள கற்போர், குறிப்பாக, நகர மற்றும் தொலைதூரக் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளிடையே கற்றல் இடைவெளி உள்ளது.
- பல்வேறு பின்னணியிலிருந்து வரும் மாணவர்களைக் கையாளுவதற்கு உரிய வகுப்பறை முன்தயாரிப்பு இன்மை.

குறிப்பிட்ட பகுதிகளில் பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினரின் ஒட்டுமொத்த மாணவர் சேர்க்கை விகிதம் அதிகரித்து, இடைநிற்றல் விகிதமும் கற்றல் விளைவுகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளும் குறைந்துள்ளன. உதவித்தொகைகள், விடுதி வசதிகள், மதிய உணவு மற்றும் மேல்நிலைவரை கட்டணமில்லாக் கல்வி போன்ற தமிழ்நாடு அரசின் ஈடுபாட்டுடன் கூடிய நலத்திட்டங்களால் இந்தப் பின்தங்கிய பிரிவினரின் குழந்தைகள் வேகமாக முன்னேறிக் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர். மேலும், இத்திட்டங்கள் அவர்களின் சேர்க்கை, தக்கவைப்பு, கல்விசார் சாதனை விகிதங்கள் போன்றவற்றைக் குறிப்பிடத்தக்க வகையில் ஒட்டுமொத்தமாக மேம்படுத்தியுள்ளன.

## செயல்திட்ட வரைவு

மாநில கல்விக் கொள்கையின் விளைவுகளை மேலும் மேம்படுத்தவும் சமூக சமத்துவத்திற்கான தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை நிலைநிறுத்தவும் உள்ளடக்கிய பள்ளி நடைமுறைகள், உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், தரவுகளின் அடிப்படையில் இலக்குகளை வரையறுத்தல் மற்றும் வலுவான பொறுப்புடன்கூடிய செயல்பாடுகள் ஆகியவற்றைக் கவனத்தில்கொண்டு பல அடுக்கு உத்திகளை இக்கொள்கை முன்மொழிகிறது.



**1. பின்தங்கிய மற்றும் மெல்லக் கற்போருக்கான இடைவினைகள்**

கற்றலில் பின்தங்கிய மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களின் கற்றல் இடைவெளியைக் குறைக்கும் வகையில் குறைதீர் கற்பித்தலை வழங்கி வயதுக்கேற்ற வகுப்பு நிலைக்குக் கொண்டுவரச் சிறப்பு கவனம் அளிக்கப்படும். ஆண்டு இறுதி அடைவு ஆய்வுகள் மற்றும் அவ்வப்போது பெறும் கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பின் தரவுகளைப் பயன்படுத்தி, கல்வியில் பின்தங்கிய மாணவக் குழுக்களும் வட்டாரங்களும் அடையாளம் காணப்படும். அவ்வட்டாரங்களில் கல்வி வளங்கள், உள்கட்டமைப்பு வசதிகள், திறமையான ஆசிரியர்களை வழங்குதல் ஆகியவற்றில் கூடுதல் முன்னுரிமை அளிக்கப்படும். இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்புக் கற்றல் திட்டங்களையும் வழிகாட்டுதல் முன்னெடுப்புகளையும் உதவித்தொகைகளையும் அறிமுகப்படுத்துவதன் வாயிலாக, முதல் தலைமுறைக் கற்போர், பழங்குடியினர் மற்றும் பெண் குழந்தைகளைப் பள்ளியில் தக்கவைப்பதற்கும் அவர்களின் கற்றல் விளைவுகளை முன்னேற்றுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**2. உள்கட்டமைப்பு மற்றும் உதவி சேவைகள்வழி உள்ளடங்கிய கல்வியை வலுப்படுத்துதல்**

அனைத்துக் குழந்தைகளும் தடையின்றி அணுகுதல், குழந்தை மையச் சூழல், சிறப்புத் தேவைகள் உடைய குழந்தைகளுக்குமான பள்ளிக் கட்டமைப்பை தமிழ்நாடு அரசு மேம்படுத்தும். இதில் சாய்தளங்கள், எளிதாகப் பயன்படுத்தும் கழிப்பறைகள், தொட்டுணரக்கூடிய உதவி சாதனங்கள், மாற்றியமைக்கப்பட்ட கற்றல் துணைக்கருவிகள், உள்ளடக்கிய தங்குமிடங்கள் ஆகியவை அடங்கும். கூடுதலாக, உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப எண்ம மற்றும் இயன்முறை உதவி உபகரணங்கள் பள்ளிகளில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

**3. உள்ளடங்கிய மற்றும் உணர்வுப்பூர்வமான கற்றல் கற்பித்தல் சூழல்களை உருவாக்குதல்**

பன்முகத்தன்மை கொண்ட வகுப்பறைகளைக் கையாளும் கல்வியாளர்களுக்கு உள்ளடங்கிய கல்விக் கட்டகங்கள் வாயிலாகப் பணிமுன் மற்றும் பணியிடைப் பயிற்சிகள் வழங்கப்படும். ஆசிரியர் கையேடுகள், பள்ளி அளவிலான பணிமனைகள் மற்றும் ஒப்பார் குழு கற்றல் மாதிரிகள் மூலம் பண்பாட்டு அடிப்படையிலான கற்பித்தல் முறைகள் ஊக்குவிக்கப்படும். பல்வேறு கற்றல் தேவைகளை நிறைவுசெய்ய ஒன்றிணைந்த குழுச்செயல்பாடுகள், ஒப்பார் குழு உதவிக் கட்டமைப்புகள் மற்றும் வெவ்வேறு வகையான கற்பித்தல் உத்திகள் அறிமுகப்படுத்தப்படும்.

**4. பாலினச் சமத்துவம் மற்றும் பாதுகாப்பை ஊக்குவித்தல்**

விழிப்புணர்வு, தலைமைத்துவம் மற்றும் வாழ்க்கைத் திறன்களை வளர்ப்பதற்காகப்





பள்ளிகளில் பாலினச் சமத்துவ நிகழ்வுகள் மற்றும் வளரிளம் பருவப் பெண்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். காற்றோட்டமான, நன்கு பராமரிக்கப்பட்ட கழிப்பறைகள், சுகாதார எரியூட்டிகள் உள்ளிட்ட பெண் நலம்சார் உள்கட்டமைப்புகளை வழங்குவதன் மூலம் மாதவிடாய்க் கால சுகாதார மேலாண்மை முன்னெடுப்புகள் விரிவுபடுத்தப்படும். வளரிளம் பருவத்தினர் பாகுபாடு, பாலின அடிப்படையிலான வன்முறை, முடிவெடுக்கும் திறன் முதலிய வாழ்க்கைத் திறன்சார் சமூக சவால்களை எதிர்கொள்ளும் வகையில் சரியானவற்றைத் தெரிந்தவர்களாக, நெகிழ்வுத்தன்மை உடையவர்களாக, திறன் பெற்றவர்களாக வளர்ந்திடத் தேவையான கலைத்திட்டம் இணைக்கப்படும்.

### 5. கண்காணிப்பு, பொறுப்புடைமை மற்றும் கல்விசார் பங்காளர்கள்

**கண்காணிப்பு மற்றும் தரவு அமைப்புகள்**

சான்றுகள் அடிப்படையிலான கொள்கை இடைவினைகளைச் செயல்படுத்த ஏதுவாக, தொகுக்கப்படாத சேர்க்கைத் தரவுகள், கற்றல் விளைவுகள் மற்றும் பாலினம், சாதி, இயலாமை மற்றும் சமூகப் பொருளாதாரச் சூழல்களால் இடை நின்றவர்கள் ஆகியோரின் தகவல்கள் கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பில் (EMIS) ஒருங்கிணைக்கப்படும்.

**பொறுப்புடைமைக்கான அமைப்புகள்**

மதிப்பீடுகளை மேற்கொள்ள மாவட்ட மற்றும் பள்ளி அளவில் ஆண்டுதோறும் சமச்சீரான தணிக்கை முறை கட்டாயப்படுத்தப்படும். அதனால், உள்ளார்ந்த நடைமுறையுடன் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளும் மதிப்பிடப்பட்டு தீர்வு காணப்படும். உள்ளடங்கிய மற்றும் சமத்துவம் சார்ந்த பிரச்சினைகளைக் கண்காணிக்க பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (SMC) வலுப்படுத்தப்படும். பாகுபாடு மற்றும் துன்புறுத்தலை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கான குறை தீர்க்கும் வழிமுறைகள் அனைத்துப் பள்ளிகளிலும் மேற்கொள்ளப்படும்.

**கல்விசார் பங்காளர்கள்**

கல்வி நிறுவனங்கள், திறன் மேம்பாடு மற்றும் செயல்திட்டங்களை நிகழ்த்தும் சமூக அமைப்புகளைக் கொண்டு திட்டமிட்ட பங்காளர்கள் உருவாக்கப்படுவர். பொது சுகாதாரம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் சமூக நலத்துறைகளுடன் இணைந்து குழந்தைகளின் வளர்ச்சித் தாமதங்கள் மற்றும் குறைபாடுகளைத் தொடக்க நிலையிலேயே அடையாளம் காணுதல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகியவை பள்ளிக் கல்வி அமைப்புடன் ஒருங்கிணைக்கப்படும்.

### 6.சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கான சிறப்பு முன்னெடுப்புகள் (CWSN)

உலகளாவிய கற்றல் வடிவமைப்பான பல்வகைப் புலன் உணர்வு முறைகள் மற்றும் வேறுபட்ட கற்பித்தல் உபகரணங்கள் ஆகியவை படிப்படியாக உள்ளடக்கிய கல்வியில் நடைமுறைப்படுத்தப்படும். குறிப்பிட்ட இயலாமை உடையவர்களுக்கு ஏற்ற நவீன



உதவும் கருவிகள் உள்ளன. மேலும், இவை உடலியக்கம் சாரா மாற்றுத்திறனாளர்களைப் பொறுத்தவரையில் உதவும் கருவிகளாகவோ மென்பொருளாகவோ இருக்க வேண்டும். சிறப்புத் தேவை உள்ள குழந்தைகளுக்கு (CWSN) உள்ளடங்கிய மற்றும் சமூகமயமாக்கலை வளர்க்கும் வகையில் உடற்கல்வி, கலை, கலாச்சார நிகழ்வுகள் மற்றும் ஒப்பார் குழுச் செயல்பாடுகளுக்கான வாய்ப்புகளும் விரிவுபடுத்தப்படும்.

**பிற இயலாமைகள்**

பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கான பிரெய்லி வாசிப்பு, தொட்டுணரக்கூடிய எழுத்தறிவு மற்றும் எண்ம எழுத்தறிவு ஆகியவை ஒலிப்புத்தக நூலகங்கள் மற்றும் வாசிப்புக் குழுக்களுடன் மேம்படுத்தப்படும். ஆர்வமுள்ள மாணவர்கள் மற்றும் செவிசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு சைகை மொழி வாயிலான கல்வி வழங்கப்படுவதுடன் ஒப்பார் குழு உதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளும் உருவாக்கப்படும். அன்றாட வாழ்வில் தற்சார்பு, தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூக விழிப்புணர்வு ஆகியவற்றில் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளுக்கான (CWSN) வாழ்க்கைத்திறன் கல்வி அளிப்பதில் கவனம் செலுத்தப்படும்.

**7. தக்கவைப்பு மற்றும் தொழில் வழிகாட்டுதல் இடைவினைகள்**

வறுமை, இளவயதுத் திருமணம் மற்றும் வேலைவாய்ப்பு காரணமாக 10ஆம் வகுப்புக்குப் பிறகு படிப்பை நிறுத்தும் மாணவர்கள், நிகழ்நிலைத் தரவு அமைப்புகள் மற்றும் சமூகக் குழுக்கள் மூலமாகத் தொடர்ந்து கண்காணிக்கப்படுவார்கள். தற்போது ஒன்பது முதல் பன்னிரண்டாம் வகுப்புவரை தொழில் வழிகாட்டுதல் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இது மேலும் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இதனால், மாணவர்கள் தொழில் வழிகாட்டுதல் ஆலோசனைகள் பெறுவதன் வாயிலாகப் பள்ளிக் கல்விக்குப் பின்பு, மேற்படிப்பு மற்றும் தொழில் வாய்ப்புகளைத் தெரிவு செய்ய இயலும்.

**முடிவுரை**

கல்வியில் சமத்துவம், உள்ளடக்குதல் மற்றும் சமூகநீதியை அடைதல் என்பது அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தும் கடமை மட்டுமல்ல, தமிழ்நாடு தவிர்க்க முடியாத ஒன்றாகும். அமைப்புசார் தடைகளை அகற்றுவதற்கும், ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்வதற்கும், உள்ளடங்கிய, மனிதநேயப் பள்ளிச்சூழலை மேம்படுத்துவதற்கும் ஒரு படிப்படியான, நடைமுறை வழிகாட்டுதலை இந்த இயல் முன்வைக்கிறது. மாநிலக் கல்விக் கொள்கை மற்றும் செயல்படுத்தும் அமைப்புகளுடன் இந்நடைமுறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையும் கற்றுக்கொள்ளவும், மேம்படவும், முற்போக்கான, மனிதநேயமுள்ள மற்றும் சமூகத்திற்குப் பங்களிப்பவர்களாக உருமாறவும் வாய்ப்பளிக்கும். இதன் மூலம் உள்ளடக்கிய சமூகம் மற்றும் எதிர்காலப் பள்ளிக் கல்வி அமைப்பை உருவாக்குவதில் தமிழ்நாடு அதன் தலைமைத்துவத்தைத் தொடரும்.





# இயல் 3: அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு

**அறிமுகம்**

அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு என்பது மூன்றாம் வகுப்பினை நிறைவு செய்யும் ஒரு குழந்தை, புரிதலுடன் படித்தல் மற்றும் அடிப்படைக் கணிதச் செயல்பாடுகளை மேற்கொள்ளும் திறனைக் குறிக்கிறது. குழந்தைகள், பல்வேறு பாடங்கள் வாயிலாகக் கலைத்திட்டத்தை அணுகுதல், அதில் ஈடுபடுதல் மற்றும் பங்கேற்கச்செய்தல் உள்ளிட்ட எதிர்காலக் கற்றலுக்கான முதன்மையான படிநிலைகளாக இருப்பதால் இத்திறன்கள், உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தொடக்கநிலை ஆண்டுகளில் இந்த அடிப்படைத்திறன்களைக் குழந்தைகள் அடையவில்லை எனில், அவர்கள் கற்றலில் சிரமங்களை எதிர்கொள்வதுடன் பள்ளிச் செயல்பாடுகளில் இருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு இறுதியில் பள்ளியை விட்டு இடைநிற்க வேண்டிய நிலை ஏற்படும்.

தமிழ்நாடு, மாணவர்கள் முன்தொடக்கக் கல்வி பெறுவதை உறுதி செய்வதில் மிகப்பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது. அடிப்படை நிலையான 1-5 வகுப்புகளில் அனைவரையும் பள்ளியில் சேர்த்தலில் உலகளாவிய சேர்க்கையில் நெருக்கத்தையும் குறிப்பிடத்தக்க பாலினச் சமத்துவத்தையும் பேணுகிறது. ஆயினும், இந்தப் பள்ளி வசதியினை அடைதலைப் பொருத்தமான மற்றும் அளவிடக்கூடிய கற்றல் விளைவுகளாக மாற்றமடையச் செய்வதில் முதன்மையான சவால் நீடிக்கிறது. அனைவருக்குமான சமவாய்ப்புடன் கூடிய அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவினை அடைதல் மிகவும் உடனடியான, மறுக்கமுடியாத முக்கியமான ஒற்றைக்கூறு என்பதை இந்த மாநில கல்விக் கொள்கை ஏற்றுக்கொள்கிறது.

**தற்போதைய நிலை**

தமிழ்நாட்டில் மாணவர்கள் வலுவான பள்ளி வாய்ப்பினைப் பெறுதல் மற்றும் நலத்திட்டக் கட்டமைப்பு - பாட நூல்கள், சீருடைகள், பள்ளி உபகரணங்கள், மதிய உணவுத்திட்டம் மற்றும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்றவை தொடக்கப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையையும் தொடர்ந்து பள்ளிக்கு வருவதையும் உறுதிசெய்கிறது. தொடக்க வகுப்புகளில் பாலினச் சமத்துவம் ஏறக்குறைய முழுமை பெற்றுள்ளது.

இருப்பினும், தற்போது நடத்தப்பட்ட மாநில அளவிலான அடைவு ஆய்வு (SLAS) 2024, முழுமையான வளர்ச்சிக்கான அடைவினை அளவிடல், அறிவினைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல் (PARAKH) சார்ந்த தேசிய அடைவு ஆய்வு (NAS) மற்றும் மாநில அளவிலான மதிப்பாய்வு ஆகியவை கற்றலில் உள்ள இடைவெளிகளை வெளிப்படுத்துகின்றன.



- தொடக்க வகுப்பு மாணவர்கள் எழுத்தறிவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதால் அடிப்படைக் கற்றலில் தொடர்ச்சியாக வலுவூட்டும் முன்னெடுப்பு, அனைத்து மூன்றாம் வகுப்புக் குழந்தைகளும் இரண்டாம் வகுப்பிற்கான பாடப் பகுதிகளைப் படிக்கும் திறனைப் பெறுவதை உறுதி செய்ய உதவும்.
- எண்ணறிவுத் திறன்களைப் பொறுத்தவரை, குறிப்பாக எளிய கூட்டல் மற்றும் கழித்தல்களைத் தாண்டி மேம்பட்ட செயல்பாடுகளில் முன்னேற்றம் தேவைப்படுகிறது.
- குறிப்பிட்ட கிராமப்புற, மலைப்பகுதிகள் மற்றும் சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்கள் வசிக்கும் பகுதிகளில் கற்றல் விளைவுகளின் அடைவு விகிதம் அதிகரிக்க வேண்டியுள்ளது.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தொடக்க வகுப்பிற்கான கற்பித்தல் முறையிலும் வகுப்பறைச் செயல்பாடுகளிலும் குறிப்பிடத்தக்கவகையில் வலுப்படுத்துதல் தேவைப்படுகிறது.
- தற்போதைய அடிப்படை எழுத்தறிவும் எண்ணறிவும் தனியான, இயக்கமாக கால வரம்புடன் கூடிய திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

இந்த உண்மைநிலைகளை ஏற்றுக்கொண்டு, தமிழ்நாட்டில் மூன்றாம் வகுப்பினை நிறைவு செய்த அனைத்துக் குழந்தைகளும் பொதுவான அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவினை அடைவதற்காக ஒருங்கிணைந்த, பல்வேறு நிலைகளுடன் கூடிய அமைப்பு சார்ந்த பொறுப்பேற்பினை இந்தக் கொள்கை கோடிட்டுக் காட்டுகிறது.

**செயல்திட்ட வரைவு**

அடிப்படைக் கற்றலில் உள்ள கற்றல் இடைவெளிகளைக் களைய மாநில கல்விக் கொள்கை, செயல்திறன்களுடன் கூடிய மற்றும் பல பரிமாணங்கள் கொண்ட செயல்திட்டத்தினைப் பரிந்துரைக்கிறது.

**1.மூன்றாம் வகுப்பிற்குள் அனைவருக்குமான எழுத்தறிவையும் எண்ணறிவையும் அடைதல்.**

1 முதல் 3ஆம் வகுப்புகளில் பயிலும் ஒவ்வொரு குழந்தையும் வயதிற்கேற்ற படித்தல், எழுதுதல் மற்றும் எண்ணறிவுத் திறன்களை அடைவதை உறுதி செய்ய இயக்கம்சார் திட்டத்தினை மாநில அரசு நடைமுறைப்படுத்த உள்ளது. தமிழ்நாட்டின் முன்னோடித் திட்டமான எண்ணும் எழுத்தும் திட்டம் (2022-2025), தெளிவான வகுப்பு சார்ந்த கற்றல் அளவீடுகள், திறன் அடைவுக் கூறுகள் மற்றும் திறன் வழிகாட்டுதலுடன் மேம்படுத்தப்பட்டு, பரவலாக்கப்படும். 4 மற்றும் 5ஆம் வகுப்புகளில் கூடுதல் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு இணைப்பு மற்றும் குறைதீர் திட்டங்கள் வாயிலாகத் தேவைப்படும் உதவிகளை அளித்து எந்தக் குழந்தையும் விடுபடாமல் அனைத்துக் குழந்தைகளும் இத்திட்டத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.





**2.ஆரம்பநிலையில் அடையாளம் கண்டு குறைதீர்ப்பதற்கான ஆதரவு அளித்தல்.**

1ஆம் வகுப்பில் சேர்க்கப்படும் அனைத்துக் குழந்தைகளும் மாணவர் பயிற்சி ஏடுகள் மற்றும் வயதிற்கேற்ற மதிப்பீட்டுக் முறைகளைப் பயன்படுத்தி மொழி கற்றலுக்கான ஆயத்தநிலை மற்றும் அறிவு மேம்பாடு ஆகியனவற்றில் மதிப்பீடு செய்யப்படுவர். தொடர்ச்சியான வகுப்பறை மதிப்பீடுகள் மூலம் கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்கள், அடையாளம் காணப்படுவர். இந்த மாணவர்களுக்குப் பள்ளி சார்ந்த குறைதீர் முன்னெடுப்புகள், ஒப்பார் குழு உதவியுடன் கூடிய கற்றல் மற்றும் வடிவமைக்கப்பட்ட இணைப்புப் பயிற்சித் திட்டங்கள் போன்றவை மேற்கொள்ளப்பட்டு கிராமப்புற மற்றும் பழங்குடியினப்பகுதிகளில் செயல்படும் பள்ளிகளுக்குக் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

**தெளிவான மொழி இலக்குகள்**

அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவின் அடிப்படையான இலக்கு, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வகுப்புநிலைக்கேற்ற புரிதல், படித்தல் மற்றும் எழுதுதல் திறன்களை அடையச் செய்வதாகும். இரண்டு மொழிகள் வாயிலாகப் பெறப்படும் திறன், பிற அனைத்துப் பாடங்களையும் கற்பதற்கான வாயிலாக இருப்பதால் மதிப்பீட்டுக் கட்டமைப்பு, இரண்டு மொழிகளிலும் திறன்களை மதிப்பிடும் தெளிவுடையதாக இருக்க வேண்டும்.

**நூலகங்களில் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல்**

ஒவ்வொரு பள்ளியும் ஆண்டிற்கு இருமுறை தங்கள் கால அட்டவணையில் நூலக நாளினைத் தவறாமல் நடைமுறைப்படுத்தி, மாவட்ட அல்லது சிறப்பு நூலகத்தில் நாள் முழுவதும் குழந்தைகள் படிப்பதை உறுதிசெய்ய வேண்டும். இந்த முன்னெடுப்பு, கற்பனைத் திறனை வளர்த்து கூர்சிந்தனையைத் தூண்டி வாழ்நாள் முழுவதும் படிக்கும் ஆர்வத்தை வளர்ப்பதில் உறுதி கொண்டுள்ளது.

**3.ஆசிரியர் திறன் மேம்பாடு**

நுழைவுநிலை மற்றும் பணியிடை ஆசிரியர் கல்வி, தனிச்சிறப்பான அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுப் பயிற்சிக் கட்டகங்களை உள்ளடக்கும்வண்ணம் மறுகட்டமைப்பு செய்யப்பட வேண்டும். தொடக்கநிலை வகுப்புகளுக்கேற்ப குழந்தை நேய, செயல்பாடு மற்றும் விளையாட்டு அடிப்படையிலான கற்பித்தல் உத்திகளில் ஆசிரியர்களைத் திறன்பெறச் செய்ய வேண்டும். பலவகைப்பட்ட கற்போர் தேவைகளின்மீது கவனம் செலுத்துவதற்காக, உள்ளடங்கிய வகுப்பறைச் செயல்பாடுகள் மற்றும் கற்றல் முறைகளுக்கான பொதுக் கட்டமைப்பு ஆகியன மேம்படுத்தப்படும். வகுப்பறைகளில் ஆசிரியர்களுக்கு உதவிபுரியவும் வகுப்பறை உற்றுநோக்கலில் துணைசெய்யவும் வளமிக்க ஆசிரியர்களும் ஆசிரிய வழிகாட்டிகளும் ஈடுபடுத்தப்படுவார்கள்.



**4.பள்ளிச் சூழலுக்கேற்ற கற்றல் வளங்களைத் தயாரித்தல்**

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குழந்தை நேயப் பண்பாட்டிற்கேற்ற வகுப்பு சார்ந்த அடிப்படை எண்ணறிவும் எழுத்தறிவும் அடங்கிய மாணவர் பயிற்சி நூல்கள், கதைப் புத்தகங்கள், கணிதப் பெட்டகங்கள் மற்றும் கூடுதல் கற்றல் பொருள்களை அரசு தயாரிக்கும். தொடக்கநிலை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவினை அடைவதற்கு உதவி அளிக்கும்வகையில் பார்த்து, தொட்டு மற்றும் இடைவினையாற்றிக் கற்கும்வகையில் கற்றல் – கற்பித்தல் துணைக்கருவிகள் தயாரித்து வழங்கப்படும். பள்ளி மற்றும் ஒன்றிய அளவில் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவினை மேம்படுத்தும் வளங்களாக நூலகங்கள் மற்றும் மின்னிய வள மையங்கள் ஏற்படுத்தப்படும்.

**5.சமுதாயம் மற்றும் பெற்றோர் பங்கேற்பு**

பெற்றோர், கல்விக்கு ஆர்வலர்கள் மற்றும் சமுதாய உறுப்பினர்கள் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு (BLN) இயக்கத்தில் ஆர்வத்துடன் ஈடுபடுத்தப்படுவார்கள். சமுதாய அளவிலான வாசிப்பு இயக்கங்கள், வீட்டுக் கற்றலுக்கான உபகரணங்கள் மற்றும் தாய்மொழியில் உரையாடுவதற்குரிய தொடர்பு சாதனங்கள் தயாரிக்கப்படும். உள்ளாட்சி அமைப்புகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் கிராம சபைகள் மூலம் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுப் பரப்புரைகள், அடிப்படைக் கற்றலின் முக்கியத்துவத்தினைச் சமுதாயத்திற்கு எடுத்துக்கூறும். இந்தப் பங்கேற்பு, வகுப்பறை தாண்டிய கற்றலுக்குத் துணைசெய்யும் சூழலை ஏற்படுத்த முக்கியமானதாகும்.

**6.அடிப்படை எழுத்தறிவும் எண்ணறிவும் இணைந்த கலைத்திட்டத்தை வலுப்படுத்துதல்**

குழந்தைகள் மொழி மற்றும் எண்ணறிவுத் திறன்களை வளர்த்தல் மட்டுமல்லாது அவர்களின் உடல், சமூக மற்றும் பண்பாட்டுச் சூழ்நிலையைப் புரிந்துகொள்ளும் வகையில் தொடக்கநிலைக் கல்வி மறுகட்டமைப்பு செய்யப்படும். முழுமையான, அனுபவம் சார்ந்த மற்றும் வினவுதல் அடிப்படையிலான கட்டமைப்பிற்குள் அடிப்படைத் திறன்களை உள்ளடக்கும் வகையில் கலைத்திட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் பிற்காலத்தில் பல்வேறு பாடம் சார்ந்த கற்றலுக்கு அடித்தளம் அமைக்க முடியும்.

**7.பள்ளி அளவிலான மதிப்பீடு மற்றும் பின்னூட்ட அமைப்புகள்**

மாணவர் திறன்கள் பற்றிய தரவுகளைச் சேகரிக்கவும் அளவீட்டுக் கூறுகளுக்கேற்ப மாணவர் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணிக்கவும் பள்ளிகளுக்கு அவ்வப்போது பின்னூட்டங்களை வழங்கவும் அனைத்துப் பள்ளி வாரியங்கள் மற்றும் மேலாண்மைகளுக்குட்பட்ட பள்ளிகளில் 3, 5 மற்றும் 8ஆம் வகுப்புகளுக்குத் தொடர் இடைவெளிகளில் மாநில அளவிலான அடைவு ஆய்வுகளை (SLAS) தமிழ்நாடு அரசு நடத்த உள்ளது.





இந்த ஆய்வுகளில், பாடப்பொருளைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் புதிய சூழ்நிலைகளில் அவற்றைப் பயன்படுத்துதல் ஆகிய திறன்களை மதிப்பிடும் வகையில் உயர்நிலை வினாக்கள் கேட்கப்படும்.

மாணவர்களின் முன்னேற்றத்தைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்க வளரறி மதிப்பீடு, தொகுத்தறி மதிப்பீடு பயிற்சி நூல் அடிப்படையிலான மதிப்பீடுகள் மற்றும் செயலி அடிப்படையிலான மின்னிய மதிப்பீடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்வார்கள்.

**8. கண்காணித்தல் மற்றும் தரத்தினை உறுதி செய்தல்**

வலுவான கண்காணித்தல் கட்டமைப்பு நிறுவப்படுவதற்கான வழிகள்:

- தொடர்ச்சியான ஆசிரியர் வழிகாட்டல் மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் கூடிய மாணவர் மதிப்பீடுகள்.
- தனித்துவமான அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் தரவுகளைக் கொண்ட மேம்படுத்தப்பட்ட கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு மூலம் ஒவ்வொரு காலாண்டிலும் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.
- பெரிய அளவிலான நேரடி மற்றும் இணைய வழியிலான ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள்.
- அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திட்டத்தின் விளைவுகளை மதிப்பிடவும் இத்திட்டத்தில் தேவையான மாற்றங்களைப் பரிந்துரைக்கவும் மூன்றாண்டிற்கு ஒருமுறை மூன்றாம் நபர் மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

**முடிவுரை**

அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவினை அனைவரும் அடைதல் என்பது மூன்றாம் வகுப்பினை நிறைவு செய்த மாணவர்களுக்கான கல்வி இலக்கு மட்டுமல்லாது சமவாய்ப்பளிக்கும் உள்ளடங்கிய மற்றும் எதிர்காலத்திற்குத் தயாராக்கும் பள்ளிக்கல்வி அமைப்பிற்குத் தேவையான கட்டாயமான ஒன்றாகும். எந்தவொரு குழந்தையும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்யவும் உறுதியான, உள்ளடங்கிய மற்றும் காலத்திற்கு உட்பட்ட அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு இயக்கத்தை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு உறுதி கொண்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்நாள் முழுமைக்குமான வலுவான, நிரந்தரமான கல்வி அடித்தளத்தை அமைத்து, செயல்திட்டப் பங்களிப்பு, அமைப்புச் சீர்திருத்தங்கள், திறன் மேம்பாடு மற்றும் வலுவான சமுதாயப் பங்கேற்புகள் மூலம் அடிப்படைக் கற்றல் விளைவுகளின் அடிப்படையில் ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் முன்னோடியாகத் திகழ தமிழ்நாடு விரும்புகிறது.



# இயல் 4: கலைத்திட்டம், கற்பித்தல் மறுசீரமைப்பு மற்றும் மொழிக்கொள்கை

**அறிமுகம்**

எந்தவொரு கல்விமுறையிலும் குழந்தைகள் எதைக் கற்கிறார்கள், எப்படிக் கற்கிறார்கள் என்பதைக் காட்டுவதாகவும் மற்றும் சமூகத்திற்கு அவர்கள் எடுத்துச் செல்லும் விழுமியங்களையும் கண்ணோட்டங்களையும் வடிவமைக்கும் இதயமாகவும் கலைத்திட்டம் இருக்கிறது. தமிழ்நாட்டில் கலைத்திட்டமும் பாடப்பொருளும் அனுபவக் கற்றல் வாயிலாகவும் தேடித் தேர்ந்து கற்கும் அடிப்படையிலும் திறன் நோக்கு அடிப்படையிலும் கற்றலை மறு ஒருங்கமைப்பு செய்யும் முறையில் வரையறுக்கப்பட்டுள்ளன.

வேகமாக மாறிவரும் தொழில்நுட்ப முன்னேற்றம், சமூக மாற்றம் மற்றும் கற்பித்தலில் ஏற்பட்டுள்ள புதுமைகள் போன்றவற்றின் அடிப்படையில் கலைத்திட்ட வடிவமைப்பை மறுகட்டமைப்பு செய்து புதுப்பிக்கவேண்டிய உடனடித் தேவை ஏற்பட்டுள்ளது. மறுகட்டமைப்பு செய்யப்படும் கலைத்திட்டம், உள்ளடங்கியதாகவும் அரசியலமைப்பு மதிப்புகளான பண்பாடு, சுற்றுச்சூழல் கல்வி, எதிர்காலத் திறன்கள் மற்றும் சமூக மனவெழுச்சிக்கான கற்றல் ஆகியவற்றைத் தொடர்புபடுத்துவதாகவும் அமைதல் வேண்டும். விரிவான கலைத்திட்டத்தில், கற்பித்தல் மற்றும் மொழிக்கற்றலைச் சீரமைப்பதன் வாயிலாக சமவாய்ப்பு, சிறப்புநிலை மற்றும் முழுமையான வளர்ச்சியை உறுதிசெய்து தமிழ்நாட்டிற்கு வழிகாட்டுவதாக இந்த இயல், அமையும்.

**தற்போதைய நிலை**

தமிழ்நாடு, பள்ளிக்கல்வியை உறுதிசெய்தல் மற்றும் நலத்திட்டங்களை ஒருங்கிணைத்தல் போன்ற முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. மேலும், கலைத்திட்டம் மற்றும் கற்பித்தலில் கீழ்க்காணும் வகைகளில் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

- அனுபவக்கற்றல், செயல்திட்டம் வழிக் கற்றல், ஆராய்ச்சி நோக்கில் கற்றல் ஆகியவற்றிற்கு அதிக நேரம் தேவைப்படுகிறது.
- விரிவான பாடத்திட்டம் மற்றும் பாடநூலை முடிக்க வலியுறுத்துவதால் கருத்துகளை ஆய்வு செய்தலும் பயன்படுத்துதல் திறனும் தடைபடுகிறது.
- நினைவுபடுத்தி எழுதுவதை அடிப்படையாகக் கொண்ட எழுத்துத் தேர்வுகளில் மதிப்பீட்டு முறை கவனம் செலுத்துகிறது.
- வகுப்பறைக் கற்பித்தல், பாடநூல் கருத்து, அன்றாட வாழ்வியல் தொடர்புகள் மற்றும் 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள் ஆகியவற்றுக்கு இடையேயான போதுமான தொடர்பின்மை காணப்படுகிறது.
- தமிழ்நாட்டின் செழுமையான பண்பாடு, இலக்கியம், சுற்றுச்சூழல் மற்றும் வரலாற்று





· மரபு ஆகியவற்றைக் கலைத்திட்டப் பாடப்பொருளோடு ஒருங்கிணைத்து மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

2024 மாநில அடைவு ஆய்வு மற்றும் PARAKH-2024 தேசிய அடைவு ஆய்வு ஆகிய தரவுகளின்படி 3, 6, 9ஆம் வகுப்புகளில் முக்கிய திறன்களை அடைவதில் கற்றல் இடைவெளிகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைச் சீரமைக்கக் கலைத்திட்டம் மற்றும் கற்பித்தலில் மாற்றம் அவசியமாகிறது.

**கண்டறியப்பட்ட சவால்கள்**

- **தேவைக்கேற்ற கலைத்திட்டம்**

கூர்சிந்தனை, கருத்துத் தெளிவு மற்றும் வாழ்வியல் திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்தும்வகையில் பாடப்பொருளை உருவாக்க வேண்டும்.

- **தேர்வை மையப்படுத்திய கற்பித்தல்**

கற்பித்தல் நடைமுறைகள் பெரும்பாலும் தேர்வுகளை நோக்கியே உள்ளன.

- **திறன் நோக்கு**

கலைத்திட்டம், உயர்நிலை அறிவாற்றல், மனவெழுச்சி மற்றும் சமூகத் திறன்களை வளர்ப்பதற்குத் துணைபுரிய வேண்டும்.

- **மரபு மற்றும் சூழலியல் ஒருங்கிணைப்பு**

தமிழ்நாட்டின் செழுமையான பண்பாடு, வரலாறு மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய பொருண்மைகளைக் காட்சிப்படுத்துதல் அவசியமாகிறது.

- **கற்றல் இடைவெளிகள்**

குறிப்பாக, கிராமப்புற, பின்தங்கிய மற்றும் பழங்குடியினப் பகுதிகளைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் திறன் அடிப்படையிலான மதிப்பீடுகளைக் கடினமாக உணர்கின்றனர்.

- **கற்பித்தலில் பன்முகத்தன்மை**

அனுபவ அடிப்படையிலான கற்றல், விளையாட்டுடன் ஒருங்கிணைந்த கற்றல் மற்றும் குழந்தை நேயக் கற்றல் உள்ளிட்ட முற்போக்கான கற்பித்தல் முறைகளைச் செயல்படுத்துவதில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

**சமூகநீதிக்குப் போதிய கவனம் அளிக்காமை**

கலைத்திட்டப் பாடப்பொருளானது சாதி, பாலினம் மற்றும் சமூகப் பொருளாதார நிலை தொடர்பான சமத்துவமின்மைக் கட்டமைப்புகளைச் சரிசெய்ய வேண்டி உள்ளது.

**செயல்திட்ட வரைவு**

சமவாய்ப்பு, படைப்பாற்றல், கூர்சிந்தனை மற்றும் எதிர்காலத்திற்கு ஆயத்தமாக்கும் கலைத்திட்டத்தையும் கற்பித்தலையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட பல்முனைச் செயல்பாடுகளை இக்கொள்கை முன்மொழிகிறது.



**1. கலைத்திட்ட மறுவடிவமைப்பு மற்றும் சீரமைப்பு**

- கலைத்திட்டத்தைத் திறன் சார்ந்ததாகவும் அனுபவரீதியான வினவுதல் மனப்பான்மையுடனும் ஆழமான கருத்துத் தெளிவுடன் கூடிய பாடப்பொருள் மேம்பாடுடனும் மறுவடிவமைப்பு செய்தல் வேண்டும்.
- கூர்சிந்தனை, படைப்பாற்றல், மின்னிய அறிவு, நிதியியல்சார் அறிவு, காலநிலைக் கல்வி, உடல்நலம் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு போன்ற எதிர்காலத் திறன்களை ஒருங்கிணைக்க வேண்டும்.
- உள்ளூர்மரபு, பாரம்பரிய அறிதல் முறைகள், சுற்றுச்சூழல் சார்பு மற்றும் முற்போக்கான சமூக இயக்கங்கள் ஆகியவற்றைக் கலைத்திட்டத்துடன் இணைக்க வேண்டும்.
- கலைத்திட்டம் தமிழ்நாட்டின் சமூக- கலாச்சாரம், மொழியியல் மற்றும் மண்டலப் பன்முகத் தன்மைகளுக்கேற்ப அமைவதை உறுதி செய்தல் வேண்டும்.
- பாடப்புத்தகங்கள் மற்றும் கற்றல், கற்பித்தல் துணைக்கருவிகளை அனைத்து மாணவர்களும் ஈடுபாட்டுடன் அணுகக்கூடியதாகவும் உள்ளடங்கியதாகவும் இருக்கும் வகையில் மாற்றியமைக்க வேண்டும்.

**2. உள்ளடங்கிய மற்றும் சமவாய்ப்பு அளிக்கக் கூடிய கலைத்திட்டம்**

- சமூக சமத்துவம், சமூக நீதி, பாலினச் சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை ஊக்குவிக்கும் கலைத்திட்டம் அமைவதை உறுதி செய்தல் வேண்டும்.
- சாதி, பாலினம், இயலாமை மற்றும் பன்முகத்தன்மை குறித்த சீரிய கண்ணோட்டத்தை ஒருங்கிணைத்தல் வேண்டும்.
- வாழ்வியல் திறன்கள், சமூக மனவெழுச்சிக் கற்றல், தன்னைப் பிறர் நிலையில் வைத்துப் பார்க்கும் செயல்பாடுகளைச் செய்தல் மற்றும் உடல்நலக் கல்வி ஆகியவை கலைத்திட்டத்தில் இணைக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- குறிப்பாக, புலம்பெயர்ந்த மற்றும் பழங்குடியினக் குழந்தைகளுக்கு இருமொழி மற்றும் மொழிசார் இணைப்புத் திட்டங்களை வழங்குதல் வேண்டும்.

**3. நிலை (5+3+2+2) அடிப்படையிலான கலைத்திட்ட வடிவமைப்பு**

- **அடிப்படை நிலை–** செயல்பாடு சார்ந்த விளையாட்டு அடிப்படையிலான மற்றும் அடிப்படை அனுபவக் கற்றலை வலியுறுத்துதல் வேண்டும்.
- **நடுநிலை –** வினவுதல் சார்ந்து சிக்கலுக்குத் தீர்வு காண்கின்ற செயல்திட்டம் சார்ந்த மற்றும் கூர்சிந்தனைக் கற்பித்தல் மற்றும் ·பாடப்பொருள் தெளிவினை வலுப்படுத்துதல் ஆகியவற்றை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.
- **இடைநிலை–** பாடம் கற்பித்தல் முறைகள், சிக்கலான உரையாடல், சமூக விழிப்புணர்வு மற்றும் குடிமையியல் பொறுப்புகள் ஆகியவற்றிற்குக் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- **மேல்நிலை–** ஆழமான பாடப்பொருள், உயர்கல்விக்குத் தயார்படுத்துதல் மற்றும் தற்சார்புக் கற்றல், தேவைப்படும் இடங்களில் தொழிற்கல்வியை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றுக்கு வழிவகை செய்தல் வேண்டும்.





**4. பல்வேறு கற்றல்-கற்பித்தல் அணுகுமுறைகளின் ஒருங்கிணைப்பு**

- செயல்வழிக் கற்றல், செயல்திட்டவழிக் கற்றல், செய்துபார்த்துக் கற்றல், கலை மற்றும் விளையாட்டுகள் ஒருங்கிணைப்பு மற்றும் பொம்மைகள்வழிக் கற்றல் போன்ற கற்றல் முறைகளை ஊக்குவித்தல் வேண்டும்.
- கூட்டாக மற்றும் இணைந்து கற்றல், செய்து உணர்ந்து கற்றல் மற்றும் ஒப்பார் குழுக் கற்றல் போன்ற முன்னெடுப்புகளுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் வேண்டும்.
- பள்ளி நூலகங்கள், வாசிப்பு மன்றங்கள் மற்றும் உரக்க வாசிக்கும் செயல்பாடுகள் வாயிலாக வாசித்தல் பண்பையும் மற்றும் வினவிக் கற்கும் பண்பையும் மேம்படுத்த **வேண்டும்.**
- **கற்றல் செயல்முறைகளைப் பிரதிபலிக்க மாணவர்களை ஊக்குவிக்கும் அறிந்துணர்தல் செயல்பாடுகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.**

**தற்போதைய நிலை (SLAS 2024/PARAKH-NAS 2024)**

- அனுபவத்தின் வழிக் கற்றல் -97%
- திறன் அடிப்படையிலான மதிப்பீடுகள்-97%
- கலையுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல்-89%
- விளையாட்டுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல்-86%
- பொம்மைகள் வழிக் கற்றல்-64%

அனுபவக் கற்றல் மற்றும் திறன் அடிப்படையிலான மதிப்பீடுகள் 97% பள்ளிகளில் திறம்பட செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கலை ஒருங்கிணைப்பு மற்றும் விளையாட்டு ஒருங்கிணைப்புக் கற்றல் முறையே 89% மற்றும் 86% எட்டியுள்ளன. இப்புதுமையான கற்றல் அனுகுமுறைகள் அனைத்திலும் 100% அடைவதை இலக்காகக் கொண்டு குறைவாகப் பயன்படுத்தப்படும் கற்பித்தல் முறைகளை வலுப்படுத்தும் நோக்கில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**5. கற்றல் இடைவெளிகளைக் குறைத்தல்**

SLAS 2024/PARAKH-NAS 2024 முடிவுகளின் பகுப்பாய்வு குறிப்பிடத்தக்க திறன் இடைவெளிகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

- **வகுப்பு 3:** மொழி-58%, கணிதம் -55%
- **வகுப்பு 6:** மொழி-51%, கணிதம் -40%, சுற்றுச்சூழல் அறிவியல்-44%
- **வகுப்பு 9:** மொழி-49%, கணிதம் -32%, அறிவியல்-36%, சமூக அறிவியல்-35%

திறன் அடிப்படையிலான செயல்திறனை மேம்படுத்துவதற்காக வலிமையான கற்பித்தல் சீர்திருத்தங்கள், நிலை வாரியான கற்பித்தல் மற்றும் குறைதீர்ச் செயல்பாடுகள் போன்றவற்றை இக்கொள்கை வலியுறுத்துகிறது.

**6. சமூக மற்றும் மனவெழுச்சிக் கற்றல்**

- குழந்தைகளின் மனவெழுச்சிகள், முடிவெடுத்தல் மற்றும் சமூக அழுத்தங்களை



கையாளுவது குறித்த விழிப்புணர்வை உருவாக்க சமூக மற்றும் மனவெழுச்சிக் கற்றல் கட்டகங்களை இணைக்க வேண்டும்.

- அடையாளம், பாகுபாடு மற்றும் சமூகநீதி குறித்த உரையாடலுக்கான பாதுகாப்பான சூழல்களைப் பள்ளிகளில் உருவாக்க வேண்டும்.
- தன்னைப் பிறர் நிலையிலிருந்து பார்க்கும் பண்பினை வளர்த்தல் மற்றும் விழுமியக் கல்விச் செயல்பாடுகள் பள்ளிக் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற்றப்பட வேண்டும்.

**7. தொழிற்கல்வி மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டல்**

**மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வியை வலுப்படுத்துதல்:**

உள்ளூர் தொழில் தேவைகள் மற்றும் வளர்ந்து வரும் துறைகளுக்கேற்ப தொழிற்கல்வி வாய்ப்புகளை அறிமுகப்படுத்தி விரிவுபடுத்துதல் மற்றும் மாணவர்களுக்குத் தொழில் துறை தொடர்பான திறன்கள் மற்றும் செய்முறைப்பயிற்சிகளை வழங்க வேண்டும்.

**தொழில்நுட்ப ஆய்வகங்களில் மேம்பட்ட செய்முறைப் பயிற்சி**

தொழிற்கல்வி மாணவர்கள் அருகிலுள்ள தொழில் பயிற்சி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட ஆய்வகங்களில் செய்முறைப் பயிற்சி பெறுவதன்மூலம் அனுபவக் கற்றலுடன் சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். இது நவீன திறன்மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சியினை உறுதி செய்யும்.

**தொழில்துறை வெளிப்பாடு மற்றும் செய்முறைப்பயிற்சிகளை ஊக்குவித்தல்**

மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்குக் கட்டமைக்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் நேரடிப் பயிற்சிகளை வழங்க தொழில்துறை நிறுவனங்களுடன் இணைதல் வேண்டும். இதன்மூலம் மாணவர்களைத் தங்களது பணியிடத்திற்கு ஏற்றவாறு ஆயத்தப்படுத்துதல்.

**இடைநிலை வகுப்புகளுக்கு உயர்கல்வி வழிகாட்டிக் கட்டகங்களை அறிமுகப்படுத்துதல்**.

வேலைவாய்ப்பு, தொழில்முனைவு மற்றும் உயர்கல்வி பெறும் வழிகளை மாணவர்கள் அறிந்து முடிவுகளை எடுக்க உதவுதல் மற்றும் இடைநிலை வகுப்புகளுக்கு முழுமையான உயர்கல்வி வழிகாட்டித் திட்டத்தை ஒருங்கிணைத்தல் வேண்டும்.

**தொழிற்கல்வி இணைப்புகளை ஊக்குவித்தல்**

தொழிற்கல்வி மற்றும் திறன் பயிற்சித் திட்டங்கள் மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சி முன்னுரிமைகளுடன் பொருத்தமானதாகவும் பதிலளிக்கக்கூடியதாகவும் இணக்கமாகவும் இருப்பதை உறுதி செய்ய, கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல் வேண்டும்.

**8.மொழிக் கொள்கை மற்றும் இருமொழிக் கல்வி**

ஒவ்வொரு மாணவரும் நம்பிக்கையுடன் இரு மொழிகளையும் பேச, படிக்க, எழுத





மற்றும் புரிந்துகொள்ள முடியும் என்பதை உறுதி செய்வதே முதன்மை நோக்கமாகும்.

2006, தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டத்தின் விதிகளின்படி மாணவர்களின் எதிர்பார்ப்பு மற்றும் சமூகத் தேவைகளின் அடிப்படையில் கூடுதலாகத் தம் தாய்மொழியைக் கற்பதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

புலம்பெயர்ந்தோர் மற்றும் பழங்குடியினக் குழந்தைகளுக்கு இரு மொழிக் கல்வி வளங்களை வழங்குவதன் மூலம் அவர்களின் கற்றல் இடைவெளிகளைக் குறைத்தல்.

**9.வயது வந்தோர் கல்விக்கான கலைத்திட்ட பாடப்பொருள்**

வயது வந்தோர் கல்வி மற்றும் தொடர் கல்வித் திட்டங்களுக்கான பங்கேற்பு, தொடர்புடைய சூழலுக்குப் பொருத்தமான கலைத்திட்டம் ஆகியவற்றைக் கொண்ட கற்றல் உபகரணங்களை உருவாக்குதல்.

**10.உடற்கல்வியை வலுப்படுத்துதல்**

மாணவர்களின் உடல்நலம், மனநலம் மற்றும் சமூக வளர்ச்சியை மேம்படுத்துவதில் உடற்கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. இது வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் கற்க வேண்டிய ஒழுக்கம், குழுவாகப் பணிசெய்தல் மற்றும் விடாமுயற்சி ஆகிய மிக முக்கிய திறன்களை வளர்க்க உதவுகிறது. கட்டமைக்கப்பட்ட மற்றும் உள்ளடங்கிய உடற்கல்வித் திட்டம், குறிப்பாக பாரம்பரிய மற்றும் நவீன விளையாட்டுகளில் வேரூன்றி இருக்கும் நிலையில் சிறுவயதிலிருந்தே விளையாட்டுத் திறமைகளை அடையாளம் கண்டு வளர்க்கிறது.

உடல்நலம், ஒழுக்கம் மற்றும் குழுவாகப் பணிசெய்தல் போன்ற பள்ளிக்கல்வியின் முக்கிய கூறுகளை உட்புகுத்தி அனைத்து மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்தல் வேண்டும்.

**கட்டமைக்கப்பட்ட உடற்கல்விப் பாட வேளைகள்**

தொடக்க நிலை முதல் மேல்நிலை வகுப்புகள் வரை குறைந்தபட்சம் ஒரு வாரத்திற்கு இரண்டு உடற்கல்விப் பாட வேளைகள் இருப்பதைக் கட்டாயமாக்க வேண்டும்.

மாணவர்களின் உடல் மற்றும் அறிவு வளர்ச்சி நிலைகளுடன் ஒத்துப்போகும் வயதிற்கேற்ற உள்ளடங்கிய செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

**விளையாட்டுடன் ஒருங்கிணைந்த கற்பித்தல்**

உடற்கல்விக்கு வகுப்புவாரியான கலைத்திட்டம் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

உடற்பயிற்சிகள் கற்றலைத் தூண்டுவதால் விளையாட்டுடன் ஒருங்கிணைந்த கல்வியை ஊக்குவிக்கவேண்டும். (எ.கா. தொடர் ஓட்டத்தைப் பயன்படுத்தி எண்ணுதல் அல்லது வெளியரங்கத் தடை ஓட்டத்தைத் பயன்படுத்தி திசைகளைக் கற்றல்)



**பள்ளி நலத்திட்டம்**

தமிழ்நாட்டில் தேசிய குழந்தை நலத்திட்டம் (RBSK) பிறப்பு முதல் 18 வயது வரையிலான குழந்தைகளுக்கு உடற்பரிசோதனை செய்வதை உறுதி செய்கிறது. இது ஆரம்பகால நோயறிதலுக்காக நடமாடும் உடல் நலக்குழுக்கள், கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு, கருவுற்ற தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளைத் தொடர்ந்து கண்காணித்தல் (EMIS/ PICME) கருவிகள் மற்றும் மாவட்ட ஆரம்பகாலத் தலையீட்டு மையம் (DEIC) ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது. வருடத்திற்கு ஒருமுறை பள்ளிகளுக்கும் வருடத்திற்கு இரண்டு முறை அங்கன்வாடிகளுக்கும் இலவசமான தொடர் கவனிப்பு வழங்கப்படுகிறது. 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டும் ஒன்பது லட்சத்திற்கும் மேற்பட்டோர் பரிந்துரைக்கப்பட்டும் தேசிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளனர்.

**பாரம்பரிய மற்றும் தற்போதுள்ள விளையாட்டுகளை மேம்படுத்துதல்**

பாரம்பரிய விளையாட்டுகள் (எ.கா. சடுகுடு மற்றும் சிலம்பம்) உள்நாட்டு விளையாட்டுகள் மற்றும் நவீன விளையாட்டுகள் (கால்பந்து, கூடைப்பந்து, தடகளம்) உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகளை இணைத்தல். பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குச் சம வாய்ப்பு வழங்குதல்.

**விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்**

அனைத்துப் பள்ளிகளிலும் அடிப்படை விளையாட்டு உள்கட்டமைப்பை உருவாக்கிப் பராமரித்தல். விளையாட்டு மைதானங்கள், விளையாட்டுத் திடல், தடகளம் மற்றும் வாய்ப்பிருப்பின் உள்ளரங்க விளையாட்டு அரங்கம் அமைத்தல்.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட உடற்கல்வி பாடத்திட்டத்தின் அடிப்படையில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பாதுகாப்புக் கருவிகளுக்கெனத் தனியே நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

**போட்டிகள் மற்றும் திறமைகளை அடையாளம் காணுதல்**

பள்ளியினுள், பள்ளிகளுக்கிடையே, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளை நடத்துதல்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து விளையாட்டுத் திறன்குழுக்களை (STP) உருவாக்கி சிறப்புப் பயிற்சியின் மூலம் மாணவர்களின் திறமைகளை வளர்த்தல்.

விளையாட்டுப் பயிற்சிகளைப் பள்ளிக்கல்வியுடன் இணைத்து அதனை ஒரு தொழிற்கல்விப் பிரிவாக அனுமதித்தல் அல்லது ஏதேனும் ஒரு முறையைப் பயன்படுத்தி விளையாட்டு வீரர்களின் கல்விசார் தகுதிகளை அங்கீகரித்தல்.

**சமுதாயம் மற்றும் முன்னாள் மாணவர்களின் பங்கேற்பு**

உள்ளூர்த் தடகள வீரர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை



அழைத்து உள்ளூர் விளையாட்டு மரபுகள் மற்றும் உடலியக்கச் செயல்பாடுகளைப் போற்றும்விதமாக விளையாட்டு விழாக்கள் நடத்துதல்.

**கவனச் சிதறலை ஏற்படுத்தாத கற்றல் சூழலை உருவாக்குதல்**

பள்ளி வளாகத்தை மாணவர்கள் கைப்பேசி பயன்படுத்தாத வளாகமாக அறிவித்தல். இதனால் மாணவர்கள் பிறருடன் நேரடியாக உரையாடுதல், சமூகச் சூழல்களுக்கேற்ப தகவமைத்துக்கொள்ளுதல் மற்றும் கவனக்குவிப்பை மேம்படுத்துதல்.

**11. கலைக்கல்வியை ஒருங்கிணைத்தல்**

கலைக்கல்வி, ஆக்கத்திறன், அழகியல் உணர்வு, பண்பாட்டு விழிப்புணர்வு, மனவெழுச்சி நுண்ணறிவு ஆகியவற்றை வளர்க்கிறது. இது வழக்கமான மாணவர்களின் கற்றல் வெளிப்பாடுகளிலிருந்து பண்பாட்டுக் கூறுகளுடன் அல்லது பண்பாட்டு வேர்களுடன் மாணவர்களை ஒருங்கிணைக்கிறது.

தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் செழுமையையும் துடிப்பையும் செவ்வியல் மற்றும் தற்காலக் கலை வடிவங்களின் வழி கற்றலில் ஒருங்கிணைத்தல். மேலும், ஆக்கத்திறனை வலுப்படுத்துதல், பண்பாட்டு விழிப்புணர்வு, மனவெழுச்சி வெளிப்பாடு, பாராட்டுதல் போன்றவற்றின் வழியாகத் தமிழ்நாட்டின் வளமான கலைக்கூறுகளை அனுபவங்களின் வழியாகப் பெறச்செய்தல்.

**கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய கலைவடிவங்கள்**

- பள்ளிக்கல்வியின் அனைத்து நிலைகளிலும் கலைக் கல்வியைக் கட்டாயமாக்குதல்.
- காட்சிக்கலை – ஓவியம், வண்ணம் தீட்டுதல், சிற்பம், கைவினை.
- நிகழ்த்து கலை – இசை, நடனம், நாடகம்.
- நாட்டுப்புறக்கலை – தெருக்கூத்து, கரகாட்டம், பிற. . .
- தற்காலக் கலை வடிவங்கள் – மின்னியல் கலை, புகைப்படக் கலை.

**கலையுடன் ஒருங்கிணைந்த கற்றல் முறை**

பல்துறை செயல்திட்டங்கள் வாயிலாக அறிவியல், சமூக அறிவியல் மற்றும் கணிதக் கருத்துகளைக் கலை வடிவங்களாக வெளிப்படுத்துதல்.
(எ.கா. செல்களின் களிமண் மாதிரிகள், வரலாற்று மறு நிகழ்வுகள், வடிவியல் கோலங்கள்)

**ஆண்டு பண்பாட்டு நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகள்**

மண்டல மற்றும் மாநில அளவிலான பண்பாட்டுக் கலை நிகழ்வுகள் வாயிலாகத் துறைவாரியாகப் பள்ளி அளவிலான கண்காட்சிகள், தனித்திறன் வெளிப்பாடுகள், நாடகம் மற்றும் இசை நிகழ்ச்சிகளை நடத்தும் வாய்ப்பினை வழங்குதல்.



**உள்ளூர்க் கலைஞர்கள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பு**

உள்ளூர்க் கலைஞர்கள், பண்பாட்டு மையங்கள், கவின் கலைக் கல்லூரிகள், திரைப்படக் குழுவினருடன் இணைந்து பணிமனைகள் நடத்துதல், நேரடியாகச் செய்து காட்டுதல் போன்ற செயல்பாடுகள் வழியாகப் பயிற்சி அமர்வுகளை நடத்துதல்.

**பண்பாட்டு மரபுகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்த**ல்

உள்ளூர்ப் பாரம்பரிய விழாக்கள் மற்றும் நிகழ்த்துக்கலைகளில் மாணவர்களை ஆர்வமுடன் பங்கேற்கச் செய்தல்.

மாணவர்கள் தலைமையிலான பண்பாட்டுப் பாரம்பரியம் சார்ந்த செயல்திட்டங்களை வழங்கி மின்னுரு வளங்களாக மாற்றிப் பாதுகாத்தல்.

**12. உடலியக்கச் செயல்பாட்டை மேம்படுத்துதல்**

குழந்தைப் பருவத்தில் ஏற்படும் உடலியக்கச் செயல்பாட்டு வளர்ச்சி என்பது அவர்களின் அன்றாடச் செயல்பாட்டிற்கும் கல்வி கற்பதற்கும் அடித்தளமாக அமைகிறது. கை-கால்களின் சிறு சிறு அசைவுகள் மற்றும் விளையாட்டுகள் மூலம் நடைபெறும் இயக்கங்கள், உடல் இயக்கத்தையும் ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துகின்றன. முறைபடுத்தப்பட்ட உடலியக்கச் செயல்பாட்டை மேம்படுத்தும் அணுகுமுறை குழந்தைகளின் எதிர்காலக் கற்றலை உறுதி செய்கிறது. விளையாட்டு அடிப்படையிலான கற்றல் குழந்தைகளின் உடலியக்க வளர்ச்சியையும் முழுமையான உடல் மேம்பாட்டையும் வளர்க்கிறது.

**விளையாட்டு மற்றும் செயல்பாடுகள் அடிப்படையிலான கலைத்திட்டம்**

முன்தொடக்க மற்றும் தொடக்க நிலைக் குழந்தைகளின் முறைப்படுத்தப்பட்ட விளையாட்டுச் செயல்பாடுகளின்வழி உடலியக்கத்தை மேம்படுத்துதல்.

ஓடுதல், ஏறுதல், சமநிலைப்படுத்துதல், நூல்கோத்தல், வரைதல் மற்றும் குவித்தல் போன்ற செயல்பாடுகளை வடிவமைத்தல்.

**மாணவர்களின் வயதிற்கேற்ற விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்.**

அனைத்து அங்கன்வாடி மையங்கள் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் பல்வேறு வயது நிலைகளிலுள்ள மாணவர்களுக்கு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பான விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்.

அறிவு மற்றும் உடலியக்கத் தூண்டுதல்களை உள்ளூர் பொம்மைகள் மற்றும் மரபுசார் விளையாட்டுகள் மூலம் ஊக்குவித்தல்

**ஆசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாடு**

- அங்கன்வாடி ஆசிரியர்கள் மற்றும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு உடலியக்க வளர்ச்சி, கற்பித்தல் முறை மற்றும் குழந்தை மையக் கற்பித்தல் உத்திகள் சார்ந்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.





- ஆசிரியர் பயிற்சிக் கட்டகங்களில் உடலியக்கத்திறன் கண்காணிப்பு உத்திகளைச் சேர்த்தல் வேண்டும்.

**பெற்றோர் ஈடுபாடு மற்றும் விழிப்புணர்வு**

- வீடு சார்ந்த உடலியக்கத் திறன் செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல் சார்ந்து பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த பணிமனைகளை நடத்த வேண்டும்.

(எ.கா. பாசிகளைக் கோத்தல், துணிகளை மடித்தல், மாவினைப் பிசைதல், தோட்டத்தில் விளையாடுதல்)

**கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுக் கருவிகள்**

எளிய மேம்பாட்டு அறிக்கைகளில் ஒருங்கிணைக்கப்பட்ட எளிய உடலியக்கத் திறன்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க மேம்படுத்தப்பட்ட சரிபார்ப்புப் பட்டியல்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

**13. திறன் மேம்பாடு மற்றும் நிறுவன ஆதரவு**

ஒவ்வொரு பள்ளியிலும் உடற்தகுதி மற்றும் படைப்பாற்றல் கலைகளில் முறைப்படுத்தப்பட்ட திட்டங்களை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் கலைப் பயிற்றுநர்களைப் பணியமர்த்த வேண்டும். வகுப்பறையில் உடற்கல்வி, கலை-அடிப்படையிலான மற்றும் உடலியக்கத் திறன் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க அனைத்து ஆசிரியர்களுக்கும் தொடர் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டினை அளிக்க வேண்டும்.

புதியனவற்றைக் கொண்ட முழுமையான கற்பித்தல் செயல்பாடுகளை ஏற்படுத்தும் செயல்பாட்டு வழிகாட்டி நூல்கள், பாடக்குறிப்புகள் மற்றும் காணொலிகளை வழங்கும் மின்னிய வங்கிகளையும் வளமையங்களையும் ஏற்படுத்த வேண்டும்.

**கண்காணித்தல் மற்றும் தர உறுதிப்பாடு**

- கலைத்திட்டத்தினை மேம்படுத்துமாறு பரிந்துரைக்கவும் அதனைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மேலாய்வு செய்யவும் மாநிலக் கலைத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறைகள் சீரமைப்புக் குழுவை ஏற்படுத்த வேண்டும்.
- கலைத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறைகளின் சிறப்பான நடைமுறைப்படுத்துதலைக் கண்டறிய மாநில அளவிலான அடைவு ஆய்வுகளைச் சீரான இடைவெளிகளில் நடத்த வேண்டும்.
- கலைத்திட்ட தர மேலாய்வுகளை நடத்த வேண்டும்.
- கலைத்திட்டச் சீரமைப்பு செயல்பாடுகளில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கற்றறிந்தோரிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டங்களை இணைத்தல் வேண்டும்.



**14. முன்னேற்றம் பெற்றுள்ள STEAM கல்வி (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலைகள் மற்றும் கணிதம்)**

**சூழல் மற்றும் அடிப்படைக் கோட்பாடு**

21ஆம் நூற்றாண்டுக் கல்வியானது, கற்போரைப் பாடஅறிவினைப் பெறச்செய்தல் மட்டுமல்லாது வினாக்களைக் கேட்கும் திறன், கருத்துகளை இணைத்தல், தீர்வுகளை வடிவமைத்தல் மற்றும் புதிய முறையில் சிந்தித்தல் ஆகியவற்றையும் வளர்க்க வேண்டும். STEAM கல்வியானது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலைகள் மற்றும் கணிதம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அணுகுமுறையாகும். இது, பல்துறைச் செயல்பாட்டுடன் கூடிய மற்றும் கற்பனைத் திறன் கொண்ட கற்றல் வாயிலாக உலக அளவிலான சவால்களை எதிர்கொள்ளும் வாய்ப்பினை மாணவர்களுக்கு வழங்குகிறது.

தமிழ்நாட்டுச் சூழலில் உள்ளூர்ச் சூழ்நிலைகள், சமுதாய வாழ்க்கை, உள்ளூர்அறிவு, பண்பாடு மற்றும் புதியன புகுத்துதல் ஆகியவற்றுடன் செயல்படுத்தப்படும்போது, இந்த அணுகுமுறை வலுவானதாகிறது. STEAM, அதிநவீன உள்கட்டமைப்பு அல்லது ஆய்வகங்களைச் சார்ந்ததல்ல. நன்கு திட்டமிடப்பட்ட கலைத்திட்டம், ஒருங்கிணைத்தல், ஆசிரியர் திறன் மேம்பாடு மற்றும் செயல்திட்ட அடிப்படையிலான கற்பித்தல் முறை ஆகியவற்றின் மூலம் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி, புரிதலை மேம்படுத்தி வாழ்வில் பொருத்தப்பாட்டுடன் புதிய உத்திகளைக் கையாள மாணவர்களுக்குத் திறன் மேம்பாட்டினை அளிக்கும்வகையில் இது நடைமுறைப்படுத்தப்படும்.

**கொள்கை இலக்கு**

உள்ளூர்ச் சூழல், சமுதாய அறிவு மற்றும் தமிழ்நாட்டின் கலை மற்றும் அறிவியல் பாரம்பரியம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் புதியன படைத்தல் அமைப்புச் சிந்தனை மற்றும் உலக நடைமுறையில் எழும் பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகியவற்றை வளர்க்கும் STEAM கல்வி மூலம் அனைத்து நிலைகளிலும் கலைத்திட்டத்தை வளப்படுத்துதல்.

**கொள்கைசார் அளவீடுகள்**

**1.கலைத்திட்டத்தில் பொதிந்துள்ள STEAM கற்றல்**

- தனியான பாடத்தை உருவாக்குவதற்குப் பதிலாக, தற்போது நடைமுறையிலுள்ள பாடக் கட்டமைப்பிற்குள் STEAM கருத்துகளை ஒருங்கிணைத்தல்.
- செயல்பாட்டு அடிப்படையிலான கற்றல் மற்றும் பாடக்கருத்துகள் பல்வேறு பாடங்களில் அமைதலை மேம்படுத்துதல். எடுத்துக்காட்டாக, அறிவியல் பாடத்தைச் சமூக அறிவியல் பாடத்துடனும் கணிதப் பாடத்தைக் கலையுடனும் மொழிப்பாடத்தை தொழில்நுட்பத்துடனும் இணைத்தல்.
- எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு –

- மழைப்பொழிவின் தரவுகளைக் கணக்கிட்டு, வரைபடங்கள் மூலம் எடுத்துக்கூறுதல் (கணிதம் + அறிவியல்).





- பாதுகாப்பான தண்ணீர் பயன்பாட்டு முறைகள் பற்றி ஒரு நாடகம் எழுதி அதனைப் பள்ளியில் அரங்கேற்றுதல். (மொழி+கலை+ அறிவியல்).
- வடிவியலைப் பயன்படுத்தி, காய்கறித் தோட்டத்திற்கான அமைப்பினைத் திட்டமிடுதல் (கணிதம் + சூழ்நிலை அறிவியல்).

**2.கலைகளை STEAM இன் முதன்மைக் கூறாகக் கொள்ளுதல்**

- மாணவர்களின் கற்பனைத்திறன் மற்றும் உரையாடல் திறன்களை வளர்க்கும் கலைகளை இரண்டாம் நிலைப் பாடப்பகுதியாகக் கருதாமல், அவற்றை முதன்மைப் பாடமாகக் கருதவேண்டும்.
- வரைதல், வரைபடங்கள், கவிதை, கதைகூறுதல், கைவினைப் பொருள்களைஉருவாக்குதல், இசை மற்றும் மாதிரிகளை உருவாக்குதல் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.
  - அறிவியல் நிகழ்வுகளைக் கண்டுணர்தல்.
  - கணித அமைப்புகளை முன்வைத்தல்.
  - தொழில்நுட்பக் கருத்துகளைக் கண்டறிதல்.
  - சமூக மற்றும் சூழ்நிலைக் கருத்துகளை வெளிப்படுத்துதல்.
- உள்ளூர்க் கலை வடிவங்கள் மற்றும் கைவினைப் பொருள்களை இணைத்தல்.

எடுத்துக்காட்டாக, கோலங்களைப் பயன்படுத்தி சமச்சீர்த் தன்மை மற்றும் அளவிடுதலைப் புரிந்து கொள்ளுதல் அல்லது உள்ளூர்ச் சூழ்நிலை மண்டலங்களை வெளிப்படுத்த சுவர் ஓவிய(MURAL) கலைவடிவங்களைப் பயன்படுத்தல்.

**3.பொறியியல் சிந்தனையை நடைமுறையில் உள்ள வடிவமைப்புச் செயல்பாடுகள் (Practical Design Tasks) மூலம் அறிமுகப்படுத்துதல்**

- பள்ளிகளில் முறையான பொறியியலைக் கற்பிக்காதபோது, இதன் அடிப்படையில் உள்ள மனப்பான்மை சார்ந்த சிக்கலை அடையாளம் காணுதல், தீர்வுக்கான முன்மாதிரி ஒன்றை உருவாக்குதல், சோதித்தல், மேம்படுத்துதல் போன்றவற்றை ஒப்புதலுக்குட்பட்ட, எளிய கீழ்க்காணும் செயல்பாடுகள் மூலம் கற்பிக்க முடியும்.
  - மண் அரிப்பைத் தடுக்கும் ஒரு மாதிரியை உருவாக்குதல்.
  - எடையினைத் தாங்கக்கூடிய அட்டைப் பலகையை உருவாக்குதல்.
  - பள்ளித் தூய்மை இயக்கத்திற்கான ஒரு கருத்தினை உருவாக்குதல்
  - மற்றும் கழிவுப் பொருள்களைப் பிரித்தலுக்கான விலை குறைந்த ஒரு மாதிரியை உருவாக்குதல்.

**4.செயல்திட்டம் அடிப்படையிலான மற்றும் பிரச்சினை அடிப்படையிலான கற்றல்**

- ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு பருவத்திற்கும் பல்வேறு பாடங்கள் சார்ந்த STEAM செயல்திட்டத்தினைக் கட்டாயமாக்குதல்.

கருத்துகள் கீழ்க்காணும் வகைளில் அமையலாம்:

- உள்ளூருக்கு ஏற்றவை (எ.கா. வறட்சியான பகுதிகளில் தண்ணீர்ச் சேமிப்பு)



- சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு (எ.கா. மறுசுழற்சி செய்யக்கூடிய பொருள்களை வடிவமைத்தல்)
- சமூகத்திற்குப் பயனுள்ளவை (எ.கா. வயது முதிர்நதவர்களுக்கு உதவும் கருவிகளை உருவாக்குதல் அல்லது நெகிழியின் பயன்பாட்டினைக் குறைத்தல்)
- செயல்திட்டங்களைக் குழுவை ஒருங்கிணைத்துச் செயலாற்றுதல். மாணவர் தெரிவு, பொதுத்தளத்தில் வெளிப்படுத்துதல் மற்றும் கருத்துகளைக் கூறுதல்.

**5. ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு**

அனைத்துப்பாட ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியான பணியிடைப் பயிற்சிகளை வழங்கி, பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ளலாம்.

- உள்ளூர் பொருள்களைப் பயன்படுத்தி STEAM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம்) உடன் இணைந்த செயல்பாடுகளுக்குத் திட்டமிடல்.
- கூட்டு மற்றும் வினவுதல் அடிப்படையிலான (inquiry - based) பயிற்சிகளை உருவாக்குதல்.
- கலை வடிவங்கள் மற்றும் பண்பாட்டுக்கூறுகளைப் பொருளுள்ள வகையிலும் உள்ளடங்கிய நிலையிலும் பயன்படுத்துதல்.

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் முதன்மை STEAM வளமையத்தைக் கீழ்க்காண்பனவற்றுடன் உருவாக்குதல்.**

- எளிய செயல்திட்டங்கள்
- மதிப்பீட்டுக் கூறுகள்
- வகுப்பறை உத்திகள்
- பன்மொழி மின்னியப் பாடப்பொருள்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

**6. விலை குறைவான, அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் கற்றல் துணைக்கருவிகளை நடைமுறைப்படுத்துதல்.**

- எளிதில் கிடைக்கக்கூடிய பொருள்களைப் பயன்படுத்த ஊக்கப்படுத்துதல்; தாள்கள், மரக்கிளைகள், களிமண், கம்பி, துணி, சமையலறைக் கலன்கள், மின்கம்பி மற்றும் பயன்படாப் பொருள்கள்.
- விலை உயர்ந்த உபகரணங்கள் அல்லது மின்னியக் கருவிகளின் மீதுள்ள சார்பு நிலையைத் தவிர்த்தல்.
- புதியனவற்றை உருவாக்குதல் மற்றும் குறைந்த செலவிலான புத்தாக்கம் ஆகியவற்றை முதன்மையான கற்றல் விளைவுகளாகக் கருதுதல்.

**7. பண்பாடு மற்றும் சுற்றுப்புறத்தைச் சூழலுக்கேற்றவாறு நடைமுறைப்படுத்துதல்**

STEAM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம்) கருத்துகளை





கீழ்க்காணும் கருத்துகளுடன் இணைத்தல்.

- உள்ளூர் வேளாண்மை சுழற்சிகள், கைத்தொழில்கள், காலநிலை அமைப்புகள், நகர்ப்புற சவால்கள், வாழ்வாதாரம் மற்றும் பொதுச்சேவைகள்.

**செயல்பாடுகள்**

- குறைந்த செலவிலான தென்னை இழைகளைப் பயன்படுத்தி கூரையின்மீது வெப்பத்தடுப்பான்களை அமைத்தல்.
- பாரம்பரிய தமிழ் நெல்வகைகளையும் மண்ணின் பொருத்தப்பாடுகளையும் கண்டறிதல்.
- பள்ளியில் ஆற்றல் பயன்பாடு குறித்தும் அதனைச் சேமிப்பதற்கான வழிமுறைகளையும் கூறுதல்.
- உள்ளூர்த் திறமையினை வகுப்பறைக்குள் கொண்டு செல்வதற்காக உள்ளூர்க் கலைஞர்கள், அரசு சாரா நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைதல்.

**8. புதுமை மற்றும் ஆக்கச் சிந்தனையை ஊக்குவிப்பதற்காக மதிப்பீட்டு முறையை மாற்றியமைத்தல்.**

மனப்பாட மதிப்பீட்டு முறையிலிருந்து மாறி

- ஒருங்கிணைதல் மற்றும் குழுப்பணி
- கருத்து உருவாக்கம் மற்றும் படைப்பாற்றல்
- அன்றாட நடைமுறையில் அறிவின் பயன்பாடு
- செயல்பாடுகளை ஆவணப்படுத்துதல் மற்றும் பகிர்தல் போன்ற கூறுகளில் மதிப்பிட வேண்டும்.

மதிப்பீட்டுக் கருவிகள்

- ·மாணவர் இதழ்கள் மற்றும் வரைபடப் புத்தகங்கள்
- ·சம வயதினரின் பின்னூட்ட அமர்வுகள்
- ·செயல்திட்டங்களை மேற்கொள்ளும்போது ஆசிரியர்கள் உற்றுநோக்கல்
- ·மாணவர்களின் படைப்புகளைச் சமுதாயத்தில் காட்சிப்படுத்துதல்.

**எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகள்**

STEAM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம்) கல்விமுறையைக் கலைத்திட்டத்துடன் ஒருங்கிணைத்தல்

- இக்கற்றல் முறையானது, முதல் தலைமுறையாகக் கற்பவர்களுக்கு பொருத்தமானதும் ஆர்வமூட்டக் கூடியதும் ஆராயும் தன்மை கொண்டதும் ஆகும்.
- மாணவர்கள் தங்கள் சொந்தச் சூழல்களில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்குக் கூர் சிந்தனை மற்றும் கற்பனைக் சார்ந்த சிந்தனையைப் பயன்படுத்த ஊக்குவித்தல்.



- ஆய்வகங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதி இல்லாதபொழுதும் புதியவற்றை உருவாக்குதல், செய்துகாட்டுதல், வெளிப்படுத்துதல் மற்றும் புதுமை புனையும் கலாச்சாரத்தைப் பள்ளிகள் வளர்க்க வேண்டும்.
- கலைத்திட்டத்தில் கலைக்கல்வி, கூடுதல் பாடமாக அல்லாமல் புதியவற்றைக் கண்டறிதல், வெளிப்படுத்துதல் மற்றும் புதுமைகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான கருவியாக உரிய இடத்தைப் பெற வேண்டும்.
- காலப்போக்கில் இந்த அணுகுமுறை எழுத்தறிவு மட்டும் உள்ளவர்களாக இல்லாமல், ஆக்கத்திறன் கொண்டவர்களாகவும் சிக்கல்க்களைக் தீர்க்கும் திறன் கொண்டவர்களாகவும் இருக்கும் தலைமுறையை வளர்க்கும்.

**முடிவுரை**

கலைத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறைகளில் புதுமைகளைக் கொண்டுவருவதே தமிழ்நாட்டின் கல்வி மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கியக் காரணியாகும். திறன்கள் மற்றும் வினவுதல் அடிப்படையிலும் உள்ளூர் வளங்களுக்கு ஏற்பவும் கல்விமுறை மாற வேண்டும். இதன் மூலம், மாணவர்களிடையே திறன், பரிவு மனப்பான்மை மற்றும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருத்தல் போன்றவற்றை வளர்ப்பதை மாநிலம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த இயல், அனைவருக்கும் பொதுவான மற்றும் உள்ளடங்கிய கல்வி முறையை மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது. இது சிக்கல்களை எதிர்கொள்ளும் வாழ்க்கைத் திறன்கள், விழுமியங்கள், பண்பாட்டு மரபுகள், கூர்சிந்தனை மற்றும் உலகளாவிய திறன்களை அனைவரும் பெறுவதை உறுதி செய்கிறது. இதன் மூலம் கல்வி என்பது தனிநபர் முன்னேற்றத்திற்கும் சமூக நீதி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கும் வலுவான கருவியாக விளங்குகிறது.





# இயல் 5 : 21ஆம் நூற்றாண்டின் திறன்கள் மற்றும் எண்மக் கல்வியறிவு

**அறிமுகம்**

உலகமயமாக்கல், தொழில்நுட்பம் மற்றும் மாறிவரும் சமூகப் பொருளாதார சூழ்நிலைகளால் உலகம் விரைவாக மாறிக்கொண்டிருக்கிறது. எனவே, மாணவர்கள் கல்வி அறிவினைப் பெறுவது மட்டுமன்றி, 21ஆம் நூற்றாண்டில் வெற்றிபெறத் தேவையான முக்கிய திறன்களையும் வளர்த்துக்கொள்வது கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். தமிழ்நாட்டின் மாநிலக் கல்வித்திட்டத்தில், அடிப்படை எழுத்தறிவு எண்ணறிவு, கூர்சிந்தனை, சிக்கல்களைத் தீர்க்கும் திறன், இணைந்து பணியாற்றும் திறன், எண்மக் கல்வியறிவு, உலகளாவிய விழிப்புணர்வு போன்ற திறன்கள் இருக்கவேண்டும்.

மாணவர்களை திறம் படைத்தவர்களாகவும் சமூகத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுபவர்களாகவும் உருவாக்க, பள்ளிக்கல்வியின் அமைப்பு மாணவர்களிடையே உலக நாடுகளுடன் போட்டியிடும் திறனை வளர்ப்பதாகவும் எதிர்காலத்துக்குத் தயார்படுத்தும் விதமாகவும் அமைதல் வேண்டும். 21ஆம் நூற்றாண்டின் திறன்கள் மற்றும் எண்ம அறிவுத்திறன்களைப் பள்ளிக் கல்வி அமைப்புடன் ஒருங்கிணைப்பதற்கான கட்டமைப்பை இந்த இயல் கோடிட்டுக் காட்டுகிறது. இவ்வாறு ஒருங்கிணைப்பதன் மூலம் உயர்கல்வி, பொறுப்பான குடிமைத்துவம், மாறிவரும் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் பொருளாதார உந்துதல் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு குழந்தையையும் ஆயுத்தம் செய்கிறது.

**தற்போதைய நிலை**

தமிழ்நாடு அரசு, தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பத்துடன் இயங்கும் வகுப்பறைகள், பள்ளிகளைச் சீர்மிகு பள்ளிகளாக மாற்றும் முன்னெடுப்பு மற்றும் எண்மப் பாடப்பொருள் உருவாக்கம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவு முதலீடு செய்துள்ளது. தற்போது பள்ளிகளுக்குக் கணினிகள், படவீழ்த்திகள் மற்றும் மின்னணுப் பாடப்பொருள் களஞ்சியங்கள் ஆகியவை வழங்கப்பெற்றுள்ளன. எனினும், கீழ்க்காணும் இடைவெளிகள் நிலவுகின்றன.

கிராமப்புறம், மலைப்பகுதி, கடற்கரைப்பகுதி மற்றும் நகர்ப்புறப் பள்ளிகளுக்கு இடையே எண்மப் பொருளைப் பயன்படுத்துவதில் இடைவெளி நிலவுகின்றது.

- எண்மக் கல்வியியல் முறை மற்றும் புதிய தொழில்நுட்பங்கள்சார்ந்து ஆசிரியர்களின் திறன் மேம்படுத்தப்பட வேண்டும்.
- பள்ளிக் கலைத்திட்டத்தில், எதிர்காலத் திறன்களான செயற்கை நுண்ணறிவு, குறியீட்டு முறை, தரவு அறிவுத்திறன் மற்றும் நிதிசார் அறிவு ஆகியவற்றைப் போதிய அளவு ஒருங்கிணைத்தல் வேண்டும்.
- ·இணைய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பு, எண்ம நெறிமுறைகள், பொறுப்பான



தொழில்நுட்பப் பயன்பாடு ஆகியவை குறித்து மாணவர்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டியுள்ளது.

- படைப்பாற்றல், சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் குழுவாகச் செயல்படுதல் ஆகியவற்றிற்குப் போதுமான முக்கியத்துவம் தராமல், கற்றல் சூழல்கள் பெரும்பாலும் மனப்பாடம் செய்யும் முறையை மையமாகக் கொண்டுள்ளன.
- SLAS 2024 / PARAKH - NAS 2024 தரவுகள் பள்ளி அளவிலான எண்ம உள்கட்டமைப்பில் நேர்மறையான போக்கினைக் காட்டுகிறது.

| குறியீடுகள் | சதவிகிதம் |
|---|---|
| இணைய வசதிகளுடன் கூடிய பள்ளிகள் | 85% |
| மாணவர்களுக்கான கணினி / கைக்கணினி வசதிகளுடன் கூடிய பள்ளிகள் | 78% |
| வீட்டில் கற்பதற்குத் திறன்பேசிவசதி கொண்ட மாணவர்கள் | 62% |
| வீட்டில் கற்பதற்கு இணையவசதி கொண்ட மாணவர்கள் | 58% |
| வீட்டில் கற்பதற்கு மடிக்கணினி / கணினி / கைக்கணினி வசதிகொண்ட மாணவர்கள் | 38% |

இடைவினை இலக்கினை அடைவதற்குப் பள்ளிகளில் எண்மக் கட்டமைப்பு சிறப்பாக இருந்தாலும் வீடுகளில் அனைவருக்கும் சமவாய்ப்பு இன்மை கவனத்திற்குரியதாக உள்ளது. **எண்ம உள்கட்டமைப்பில் 100% இலக்கை** அடைவதற்கு, பள்ளிகளில் இணைய வசதிகளை விரிவாக்குதல், வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மாணவர்களுக்கு மானிய விலையில் மின்னணுக் கருவிகளை வழங்குதல், கிராமப்புறங்களில் அவர்களது வாங்கும் திறனுக்கு ஏற்ற வகையில் இணைய வசதிகளை எற்படுத்துதல் வேண்டும். மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான எண்மக் கல்வியறிவுச் செயல்பாடுகள் வலுப்படுத்தப்பட்டு, அனைவருக்கும் தொழில்நுட்பம் சார்ந்த, உள்ளடங்கிய கல்வி வழங்கப்படவேண்டும்.

**செயல்திட்ட வரைவு:**

**அ . கல்வியின் அடிப்படை மற்றும் சமகாலத் திறன்களை வலுப்படுத்தல்**

**1.அனைத்துப் பாடங்களிலும் அடிப்படைத் திறன்களை உறுதிப்படுத்துதல்:**

பள்ளிப் பருவத்தின் ஒவ்வொரு நிலையிலும், மொழி, கணிதம், அறிவியல், சமூக அறிவியல், கலை மற்றும் உடற்கல்வி ஆகியவற்றில் வலுவான 1. அடித்தளம் அமைத்து, தேசிய மற்றும் சர்வதேசத் தரத்திற்கு இணையாகப் பாடப்பொருள் சார்ந்த அறிவைமாணவர்கள் பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.



**2.தற்போதைய உலக நடைமுறைக் கருப்பொருளைக் கலைத்திட்டத்தில் ஒருங்கிணைத்தல்:**

21ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான அறிவு மற்றும் விழிப்புணர்வுடன் மாணவர்களைத் தயார்படுத்த, பாடப்பகுதிகள் மற்றும் தரநிலைகளில் தற்போதைய உலக நடைமுறைக் கருப்பொருள்களை இணைத்தல் வேண்டும்.

இதற்கெனப் பரிந்துரைக்கப்படும் முக்கிய பகுதிகளாவன:

- **உலகளாவிய விழிப்புணர்வு –** உலகளாவிய பிரச்சனைகள், பண்பாடு, சார்புநிலை ஆகியவற்றைப் புரிந்துகொள்ள ஊக்குவித்தல்.
- **நிதி, பொருளாதாரம் மற்றும் தொழில்முனைவோர் கல்வி -** தனிநபர் நிதி, வணிகம் மற்றும் பொருளாதார முடிவெடுத்தல் ஆகியவற்றில் நடைமுறைத் திறன்களை வளர்த்தல்.
- **குடிமைக் கல்வி -** உரிமைகள், பொறுப்புகள், அரசியல் அமைப்பின் விழுமியங்கள் மற்றும் ஜனநாயகப் பங்கேற்பு ஆகியவை குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துதல்.
- **சுகாதாரக் கல்வி –** உடல்நலம், தன்சுத்தம், ஊட்டச்சத்து, நல வாழ்வு ஆகியன குறித்து அறிவார்ந்த முடிவெடுக்க மாணவர்களுக்கு உதவுதல்.
- **சுற்றுச்சூழல் கல்வி –** கல்வியின் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும் பொறுப்பான சுற்றுச்சூழல் நடைமுறைகளையும் வளர்த்தல்.

**3.அரசியலமைப்பு, குடிமை மற்றும் செயலுறு குடிமக்கள்:**

**அரசியலமைப்புக் கல்வி:** கலைத்திட்டத்தின் முக்கிய பகுதியாக அரசியலமைப்பின் முகவுரை, அடிப்படை உரிமைகள், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அடிப்படைக் கடமைகள் ஆகிவற்றைக் கற்றல்.

**செயலுறு குடிமக்கள்:** குடிமை உணர்வு, பொதுச் சொத்துகளைப் பாதுகாத்தல் மற்றும் போக்குவரத்துப் பாதுகாப்பு குறித்த கட்டகங்களை வெளியிடுதல்.

**பொதுமக்களுக்கான கொள்கை குறித்த விழிப்புணர்வு:** மாநில மற்றும் தேசிய நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துதல். மாணவர்கள் நிருவாக வழிமுறைகளையும் குடிமக்களின் உரிமைகளையும் புரிந்துகொள்ள உதவுதல்.

**4.வயதுக்கு ஏற்ற செயல்பாடுகள்** வாயிலாக சூழல் சார்ந்த கற்றல் மற்றும் அதனைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக, செயல்திட்ட அடிப்படையிளான கற்றல் மற்றும் பாடங்களை ஒருங்கிணைக்கும் திட்டங்கள் மூலம் இந்தக் கருப்பொருள்களை இணைத்தல்.

**5. உள்ளூர் அறிவையும் பண்பாட்டு ஒருங்கிணைப்பையும் பரப்புதல்**

**வேரூன்றிய கலைத்திட்டம்:** மாணவர்களின் அருகமைந்த சுற்றுப்புறத்தில் நிலவும் புவியியல், வரலாறு மற்றும் பண்பாடு ஆகியவற்றைக் கற்பிக்க **"என் கிராமத்தை**



**அறிதல்", "என் நகரத்தை அறிதல்", "என் மாநிலத்தை அறிதல்"** போன்ற கட்டகங்களைக் கட்டாயமாக அறிமுகப்படுத்துதல்,

**பண்பாட்டுக் கொண்டாட்டம்:** பள்ளிகளில் உள்ளூர் விழாக்களைக் கொண்டாடுதல், கைவினைப்பொருட்கள் மற்றும் மரபுகளைப் பிரதிபலிக்கும் செயல் திட்டங்கள், கண்காட்சிகள் ஆகியவற்றை அமைத்தல் மற்றும் சமூகப் பங்கேற்பின் வழியாக ஆழமான பண்பாட்டுப் பெருமித உணர்வை வளர்த்தல்.

**ஆ. கற்றல், புதுமை மற்றும் வாழ்க்கைத் திறன்களை உட்பொதித்தல்**

**1.வாழ்க்கை திறன்கள் மற்றும் புதுமைத் திறன்களை பாடங்கள் மற்றும் நிலைகள் வழியாக வளர்த்தல்:**

மாணவர்களை, மாறிவரும் தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகத்திற்குத் தயார்படுத்துவதற்கு ஒவ்வொரு நிலையிலும், பாடத்திட்டம் மற்றும் வகுப்பறை நடைமுறைகளில் 21ஆம் நூற்றாண்டின் முக்கிய திறன்களை ஒருங்கிணைக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் பகுதிகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- **கூர்சிந்தனை மற்றும் சிக்கல்களைத் தீர்த்தல்** - மாணவர்கள் சிக்கல்களைக் பகுப்பாய்வு செய்ய, சரியான முடிவுகளை எடுக்க மற்றும் சவால்களை ஆக்கப்பூர்வமாகக் கையாள உதவுதல்
- **தொடர்புகொள்ளுதல் மற்றும் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்** - பயனுள்ள தனிப்பட்ட திறன்கள், குழுப்பணி மற்றும் எண்மத் தொடர்பு திறன்களை வளர்த்தல்

**படைப்பாற்றல் மற்றும் புதுமை –** கற்பனைத் திறன், சொந்தக் கருத்துக்கள் மற்றும் பல்வேறு சூழல்களில் புதுமைகளை உருவாக்கும் திறனை ஊக்குவித்தல்.

**நெகிழ்வுத்தன்மை, தகவமைப்பு மற்றும் முன்னெடுப்பு** - கற்றல் மற்றும் சவால்களை நோக்கிய நெகிழ்வுத் தன்மை, மாற்றத்தை ஏற்கும் தன்மை மற்றும் முன்னெடுப்பு மனப்பான்மையை வளர்த்தல்.

**தலைமைத்துவம், பொறுப்பு மற்றும் பன்முகக் கலாச்சாரத் திறன்** - தலைமைத்துவப் பண்புகள், நெறிமுறைப் பொறுப்புணர்வு மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மை ஆகியவற்றை வளர்த்தல்.

**2. மேலேகுறிப்பிடப்பட்ட திறன்களை, பாட இணைச் செயல்பாடுகள்,** வகுப்பறை நடைமுறைகள், ஒருங்கிணைந்த செயல்திட்டங்கள் மற்றும் அனுபவக்கற்றலுக்கான வாய்ப்புகளை உட்புகுத்தி மாணவர்களை, தன்னம்பிக்கை கொண்ட சமூகப் பொறுப்புள்ளவர்களாக வளர்த்தல்.

**வாழ்வியலுக்கான பள்ளிச் சுற்றுச்சூழல் மன்றங்கள்:**

தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டபடி, ஒவ்வொரு பள்ளியிலும் **வாழ்வியலுக்கான பள்ளிச் சுற்றுச்சூழல் மன்றங்கள்** நிறுவப்படுவதை உறுதிப்படுத்துதல். இம்மன்றங்கள் கல்விசாரா இணைச் செயல்பாடுகளுள் ஒன்றாக இல்லாமல், பள்ளிச் செயல்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்படவேண்டும். மேலும், இம்மன்றங்கள்,





- பள்ளிவளாக ஆற்றல் மற்றும் நீராதாரம் சார்ந்த தணிக்கைகளை நடத்துதல்.
- கழிவுகளைப் பிரித்தல் மற்றும் உரமாக்குதல்.
- பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க, நம் நாட்டு மரவகைகளை நடும் முன்னெடுப்புகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- பள்ளி வளாகத்திலிருந்து, ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப்பொருள்களை அகற்றுவதற்கான விழிப்புணர்வுப் பரப்புரைகளை மேற்கொள்ளுதல்.

**பேரிடர்களைச் சந்திக்கத் தயார்நிலையில் இருத்தல்:** கோட்டுபாடு அளவில் மட்டும் அல்லாமல் முறையாகச் செயல்படுத்துதல். உள்ளூர்ப் பேரிடர் மேலாண்மை அலுவலர்களுடன் இணைந்து, வெப்ப அலை மீட்பு, வெள்ளப்பெருக்கின்போது மக்களை வெளியேற்றுதல், புயல்மழையை எதிர்கொள்ள ஆயுத்தப்படுத்துதல் உள்ளிட்ட பரவலான உள்ளூர் அபாயங்களுக்குக் காலாண்டுப் பயிற்சிகளைக் கட்டாயமாக நடத்துதல்.

அனைத்துப் பள்ளிகளிலும் தீ விபத்துகள் ஏற்படும்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், முதலுதவி மற்றும் அவசரகால வெளியேற்றங்களுக்கான கட்டாயப் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ள இதுபோன்ற அணுகுமுறைகள் இப்பயிற்சிகளுக்கு ஒரு தரநிலையாகக் கருதப்படுகிறது.

**"பசுமைப் பள்ளி" என்னும் தரநிலை:** தமிழ்நாடு அரசின் "பசுமைப் பள்ளி எனும் முன்னோடி திட்டத்தின் அடிப்படையில் கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். மழைநீர் சேகரித்தல், சூரிய சக்திப் பயன்பாடு, புல்வெளி பராமரித்தல் மற்றும் நீர் மறுசுழற்சி போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் ஒவ்வொரு பள்ளியும் ஆண்டுதோறும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இது பள்ளிகள் சிறப்பாகச் செயல்படுவதற்கான ஒரு தெளிவான அளவுகோலை உருவாக்குகிறது.

**3. ஆசிரியர்களுக்கான பயிற்சி, வள மேம்பாடு மற்றும் மதிப்பீட்டுக்** கட்டமைப்புகளில் இது போன்ற திறன்களை தினசரி கற்பித்தல்-கற்றல் செயல்பாட்டில் ஒருங்கிணைத்தல்.அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்தல், பல்வேறு பாடங்களை இணைத்தல் மற்றும் பயன்பாட்டுக் கற்றலை உருவாக்குதல் ஆகியவற்றைக் கலைத்திட்டங்கள் கொண்டிருக்க வேண்டும்.

**4. கட்டாயக் காலநிலைப் பாடத்திட்டம்:** தமிழ்நாட்டின் குறிப்பிட்ட சுற்றுச்சூழல் சவால்களை மையமாகக் கொண்டு, வயதுக்கு ஏற்ற பாடத்திட்டத்தைக் கட்டாயமாக அறிமுகப்படுத்துதல்:

தொடக்க நிலை (1-5 ஆம் வகுப்புகள்): கழிவுகளைப் பிரித்தல் (குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி செய்தல்), நீர்ப் பாதுகாப்பு மற்றும் பல்லுயிர்த்தன்மை



·(உள்ளூர்த் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள்) போன்ற அடிப்படைக் கருத்துகளில் கவனம் செலுத்துதல்

- **நடுநிலைப்பள்ளி (6-8ஆம் வகுப்புகள்):** காலநிலை மாற்றத்தின் காரணங்கள் மற்றும் தாக்கங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் முக்கியத்துவம், கடலோரப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார சுழற்சி போன்ற தலைப்புகளை அறிமுகப்படுத்துதல்
- **உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி (9-12 ஆம் வகுப்புகள்):** காலநிலைத் தகவமைப்பு உத்திகள், கார்பன் தடப் பகுப்பாய்வு, நிலையான நகர்ப்புறத் திட்டமிடல் மற்றும் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் போன்ற அரசு முயற்சிகளைப் புரிந்துகொள்வதில் கவனம் செலுத்துதல்

**5. நிதிசார் கல்வியறிவு:** சேமிப்பு, வரவு செலவுத் திட்டமிடல், இணைய வழிப் பணப்பரிமாற்றம், மோசடி குறித்த எச்சரிக்கைகள் மற்றும் தடுப்புமுறை, உள்ளூர் வங்கிகளைக் கட்டாயமாகப் பார்வையிடல் உள்ளிட்ட நடைமுறையிலுள்ள நிதிசார் கல்வியை உயர்தொடக்க நிலையிலிருந்தே அறிமுகப்படுத்துதல்.

**இ. எண்மக் கல்வியறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன்கள்:**

- பாதுகாப்பான மற்றும் பொறுப்பான இணையப் பயன்பாடு, இணையப் பாதுகாப்பு மற்றும் நெறிமுறையுடன் கூடிய எண்மக் குடியுரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான எண்மக் கல்வியறிவு வழங்கக்கூடிய கட்டகங்களை மாணவர்களுக்காக உருவாக்குதல்.
- 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குப் பாட வாரியாக, தொழில் வழிகாட்டுதல் மற்றும் செறிவூட்டப்பட்ட எண்மப் பாடப்பொருள் மூலம், கல்வித் தொலைக்காட்சியை ஒரு விரிவான கல்வி ஒளிபரப்புத் தளமாகத் தொடர்ந்து மேம்படுத்தவும், குறிப்பாக தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு தரமான கல்விக்கான அணுகுமுறையை உறுதி செய்தல்
- மணற்கேணி செயலியின் பயன்பாட்டை அதிகரிக்க, அதனை வகுப்பறைக் கற்பித்தல், வீட்டுக் கற்றல் ஆகியவற்றுடன் ஒருங்கிணைத்தல். அனைத்து மாணவர்களும் எண்மக் கற்றலை ஈடுபாட்டுடன் அணுகுவதற்கு, அதன் பாடத்திட்டத்தில்அசைவூட்டப்பட்ட காணொலிகள் மற்றும் ஊடாடும் வினாடிவினாக்களைத் தொடர்ந்து புதுப்பித்தல்.
- கல்வித் தொலைக்காட்சியையும் மனற்கேணி செயலியையும், தமிழ்நாட்டின் கலப்புமுறைக் கற்றல் உத்தியின் முக்கிய கூறுகளாக நிலைநிறுத்தி, எண்ம மற்றும் தொலைக்காட்சி அடிப்படையிலான கல்வியை நிறைவு செய்து, ஆசிரியர்களுக்கு உறுதுணையளித்து, கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதையும் உறுதி செய்தல்.
- உயர்தரமான, வயதுக்கு ஏற்ற மற்றும் ஊடாடும் எண்ம உள்ளடக்கத்தை உருவாக்குதல் மற்றும் ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல், கல்வித் தொலைக்காட்சி மற்றும் மணற்கேணி வளங்களை அன்றாடக் கற்பித்தலில் இணைத்தல்.





- குறியீட்டுமுறை, செயற்கை நுண்ணறிவு குறித்த அடிப்படைகள், தரவு எழுத்தறிவு மற்றும் எண்மப் பாடக்கருத்துக்களை உருவாக்குதல் ஆகியவை குறித்த முறையான அறிவினைப் பெறுவதற்கு கலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக, பொருத்தமான வகுப்புகளில் **TN-SPARK** – தமிழ்நாட்டுப் பள்ளிகளுக்கான செயற்கை நுண்ணறிவு, எந்திரனியல் மற்றும் இணைய வளக் கருவிசார் கல்வித்திட்டத்தினை விரிவுபடுத்துதல்.
- கற்றல் விளைவுகளை மேம்படுத்த, வகுப்பறைகளில் **VR** (தோற்ற மெய்மை), **AR** (மிகை மெய்மை), செயற்கை நுண்ணறிவுசார் ஒப்புருவாக்கங்கள், உதவித் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்தல்.
- அறிவியல் மற்றும் கணித வகுப்பறைகளைச் செயலிகள் மற்றும் எண்மக் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் மேம்படுத்துதல்
- வயது வந்தோர் கல்வி மற்றும் நவீன கல்வியறிவுத் திட்டங்களில் எண்மக் கருவிகளைப் பயன்படுத்தி, அனைத்துக் குடிமக்களையும் எண்ம உலகிற்குத் தயார்படுத்துதல்
- இப்பாடப்பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மீளாய்வு செய்ய வழிவகுத்தல்.

**ஈ. 21ஆம் நூற்றாண்டின் வேலை வாய்ப்பு மற்றும் குடியுரிமைக்கான திறன்கள்**

மாணவர்களை மாறிவரும் வேலை வாய்ப்புச்சந்தை மற்றும் ஜனநாயகச் சமூகத்திற்கு ஏற்ப வளர்த்தல்.

- தொழில் முனைவு மற்றும் நிதிசார் கல்வியறிவு
- சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு மற்றும் காலநிலை செயல்பாட்டிற்கான விழிப்புணர்வு
- தரவுகளைக் கையாளுதல், ஊடகக் கல்வியறிவு மற்றும் தகவல் மதிப்பீடு
- தொழில்சார் ஆயத்தநிலை முன்னெடுப்பு மற்றும் புதிய பணியிட விதிமுறைகளுக்கு ஏற்ற தகவமைப்பு.

**உ. கல்வியாளர்களுக்கான தொழில் திறன் மேம்பாடு**

- எண்மக் கற்பித்தல் முறை, தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைந்த மதிப்பீடுகள், மற்றும் சமகால வகுப்பறை உத்திகளில் ஆசிரியர்களுக்கான தொடர்ச்சியான திறன் மேம்பாட்டுத் திட்டங்களை வழங்குதல்.
- **எண்மத் தலைமைத்துவப் பணிமனைகள் மற்றும் ஒப்பார் தலைமையிலான சமூகங்களில்** ஆசிரியர்களின் பங்கேற்பை எளிதாக்குதல்.
- **தொழில்நுட்ப அடிப்படையிலான மதிப்பீட்டுக் கருவிகள் மற்றும் செயல்திட்ட அடிப்படையிலான கற்றல் மாதிரிகள்** ஆகியவற்றை உருவாக்க ஆசிரியர்களை ஊக்குவித்தல்.

**ஊ. தொழில்நுட்பம் சார்ந்த கற்றல் சூழல்களை உருவாக்குதல்**

- பாதுகாப்பான, நெகிழ்வான மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வகுப்பறைகளை நிறுவ



·உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

- தொலைதூர மலைப்பாங்கான இடங்களிலும், கடலோரங்களிலும் அமைந்துள்ள பள்ளிகளில் திறன்மிகு, நேரடி மற்றும் இணையவழி கலந்த கற்றல் மாதிரிகளை நிறுவுதல்.
- மின் நூலகங்கள், மெய்நிகர் ஆய்வகங்கள் மற்றும் எண்ம அறிவிப்புப் பலகைகளின் பயன்பாட்டை மேம்படுத்துதல்.
- உயர்தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் எதிர்காலத் திறன் ஆய்வகங்களை ஒருங்கிணைத்தல்.

**எ. உலகளாவிய திறன் மற்றும் சர்வதேசக் கண்ணோட்டம்**

- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான உலகளாவிய திறன் தரநிலைகளை உருவாக்குதல்.
- கலைத்திட்ட கருப்பொருள்கள் மற்றும் மாணவர் பரிமாற்ற வாய்ப்புகள் மூலம் மொழிக்கற்றல், சர்வதேசக் கூட்டாண்மைகள் மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் ஆகியவை குறித்த அனுபவங்களை வழங்குதல்.

**கண்காணிப்பு, பொறுப்புணர்வு மற்றும் கூட்டாண்மை**

**கண்காணிப்புக் கட்டமைப்பு**

- 21ஆம் நூற்றாண்டின் திறன்கள் மற்றும் எண்மக் கல்வியறிவு குறித்த குறியீடுகளை கல்வி மேலாண்மைத் தகவல் முகமையுடன்(EMIS) ஒருங்கிணைத்தல்.
- எண்மத் திறன்மேம்பாட்டில் ஆசிரியரின் பங்கேற்பு, தொழில்நுட்பம் சார்ந்த மதிப்பீடுகளில் மாணவர் செயல்திறன் மற்றும் எதிர்காலத் திறன்களின் கட்டகங்களை ஒருங்கிணைத்தல் ஆகிய செயல்பாடுகளைக் கண்காணித்தல்.

**கூட்டாண்மைகள்**

- வளங்கள், எண்மப் பாடப்பொருள், பயிற்சி மற்றும் புதுமை முயற்சிகளுக்குப் பெருநிறுவன சமூக பொறுப்பிற்கான (CSR) முன்னெடுப்புகள், கல்வித் தொழில்நுட்ப நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமுதாய நிறுவனங்களுடன் கூட்டாண்மைகளை உருவாக்குதல்.
- ·முன்னாள் மாணவர் சங்கங்கள், தன்னார்வலர்கள் மற்றும் உள்ளூர் வல்லுநர்களை ஊக்கப்படுத்தி, வேலைவாய்ப்பு வழிகாட்டி மற்றும் எண்ம விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு திறன் உருவாக்கும் முகாம்களை நடத்துதல்.

**முடிவுரை**

தமிழ்நாடு முற்போக்கான, உள்ளடங்கிய மற்றும் எதிர்காலத்திற்கு ஆயத்தமாவதற்கான கல்விமுறையை எதிர்நோக்கியுள்ளது. இக்கல்வி முறையானது ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட, தொழில்நுட்பத்தால் இயக்கப்பட்டு, சமூக உணர்வுள்ள உலகில் வெற்றிபெறத் தேவையான திறன்களை ஒவ்வொரு குழந்தையையும் பெறச்செய்கிறது.





21ஆம் நூற்றாண்டின் திறன்கள், எண்மக் கல்வியறிவு, எதிர்காலத்திற்குத் தேவையான திறன்கள் ஆகிய மூன்றையும் முறையான கல்வியில் உட்பொதித்தல் மூலம் மாநில அரசானது தற்போதுள்ள எண்ணிய மற்றும் சமூக இடைவெளிகளை இணைப்பது மட்டுமல்லாது வாழ்நாள் முழுவதும் கற்பவர்களாகவும் பொறுப்புள்ள குடிமக்களாகவும் நாளைய அறிவார்ந்த சமூகத்தின் தலைவர்களாகவும் மாணவர்களை மேம்படுத்துகிறது. வேகமாக வளர்ந்து வரும் உலகில் எந்த ஒரு குழந்தையும் பின்தங்காமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், பள்ளிகள் எழுச்சியுடன், புதுமை மற்றும் எண்ம முறையில் செயல்பட வேண்டும். இதனை அடைவதற்கு விரிவான பல்வேறு கட்டங்களைக் கொண்ட பாகுபாடற்ற சமத்துவத்தை நோக்கிய வழிவகைகளை இந்த இயல் வழங்குகிறது.



# இயல் 6: மதிப்பீட்டுச் சீரமைப்பு

**அறிமுகம்**

மதிப்பீடு என்பது கற்றல் கற்பித்தல் செயல்பாட்டின் மிக முக்கியமான கூறாகும். இது மாணவரது புரிதல், கற்றல் இடைவெளிகள், கற்பித்தல் உத்திகளின் திறம் ஆகியவை குறித்த மிக முக்கியமான, விரிவான விவரங்களைப் பெற உதவுகிறது. நீண்டகாலமாக,தமிழ்நாட்டில் மரபார்ந்த மதிப்பீட்டு முறையானது மனப்பாடம் செய்தல், தேர்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட தேர்வுகள், நினைவுகூர்தல் அடிப்படையிலான எழுத்துத்தேர்வுக்கு முக்கியத்துவம் ஆகியவற்றைச் சார்ந்திருந்தது. இது கூர்சிந்தனை, படைப்பாற்றல், பாடக்கருத்துகளைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றை ஊக்குவிக்காமல் மாணவரின் மன அழுத்தத்துக்கும் கற்றலிலிருந்து விலகியிருத்தலுக்கும் வழிவகுத்தது.

இந்த இயலானது, மதிப்பீட்டுச் செயல்பாடுகளைச் சீரமைக்கவும், மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தரும் உள்ளடங்கிய தேக்கமின்மை கொள்கையைப் பின்பற்றவுமான தமிழ்நாடு அரசின் விரிவான திட்டத்தினை எடுத்துக் கூறுகிறது.
கற்பித்தலை மேற்கொள்வதற்கான வழிகாட்டியாகவும், மாணவரது கற்றல் தேவைகளை ஆரம்பத்திலேயே கண்டறியவும், தண்டனைகள் இல்லாத முழுமையான கற்றல் சூழலை உருவாக்கவும் வழிகோலும் தொடர், வளரறி மற்றும் திறன் அடிப்படையிலான மதிப்பீட்டினை இந்த தேக்கமின்மை கொள்கை வலியுறுத்துகிறது.

**தற்போதைய நிலை**

தமிழ்நாடு அரசானது பள்ளிகளில் புதிய மதிப்பீட்டுமுறைகளை படிப்படியாக செயல்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளது. மாநில அளவிலான அடைவு ஆய்வு/ தேசிய அடைவு ஆய்வு 2024 (SLAS 2024/ PARAKH NAS 2024) ஆகியவற்றின்படி, அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர்கள், தொடர்ந்து தாங்கள் மாணவர்களை மையமாகக் கொண்டு மதிப்பீட்டு செயல்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

- சுய மதிப்பீடு-98%
- செயல்திட்டப் பணி 96%
- ஒப்பார் மதிப்பீடு-93%
- ஒட்டுமொத்தச் செயல்பாடுகள் அடிப்படையிலான மதிப்பீடு 88%

பொதுவாக, அனுபவம் சார்ந்த கற்றல், திறன் அடிப்படையிலான மதிப்பீடுகள் ஆகியன பயன்பாட்டில் இருந்துவந்தாலும், செயல்பாடுகள் மற்றும் மாணவர்களது படைப்புகள் அடிப்பைடயிலான மதிப்பீடு போன்றவை தொடர்ச்சியாக, பரவலாக அனைத்துப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

கற்றல் இடைவெளிகளைச் சரிசெய்யும் பொருட்டு தொடர் மதிப்பீடு, குறைதீர் கற்றல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அதேநேரம், தேக்கமின்மைக் கொள்கை





அடிப்படையில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் அனைவருக்கும் தேர்ச்சியளிப்பதை அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

**கண்டறியப்பட்டுள்ள சவால்கள்**

- **மனப்பாடத்திற்கு அதீத முக்கியத்துவம்:** தற்போது நடைமுறையிலுள்ள தொகுத்தறி மதிப்பீடுகள் பாடக்கருத்துகளைப் புரிந்துகொள்ளுதல், புதிய சூழல்களில் அவற்றைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்குப் பதிலாக கருத்துகளை நினைவுகூர்தலையே வலியுறுத்துவனவாக உள்ளன.
- **தேர்ச்சி பெற்றே ஆகவேண்டிய தேர்வுகள் குறித்த பதற்றம்:** தேர்வுகளை அதிக அளவில் சார்ந்திருக்க வேண்டிய நிலையானது குழந்தைகளிடம், குறிப்பாக விளிம்புநிலைச் சமூகப் பின்னணியிலிருந்து வரும் குழந்தைகளிடம், மன அழுத்தத்தை உருவாக்குகிறது.
- **முழுமையற்ற மதிப்பீட்டு முறைகள்:** மரபார்ந்த மதிப்பீடுகள் படைப்பாற்றல், மனப்பாங்குகள், உடல்சார் திறன், சமூக நடத்தை போன்றவற்றை போதிய அளவு மதிப்பிடத்தவறுகின்றன.
- **போதுமான பின்னூட்டச் செயல்முறைகள் இன்மை:** வகுப்பறை, ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவுகளில் வலுவான பின்னூட்டச் செயல்முறைகள் இல்லாத நிலை, காலவரம்பிற்கு உட்பட்ட இடைவினைகளுக்குத் தடையாக அமைந்திருக்கிறது.
- **கற்றல் இடைவெளிகளும் சீரற்ற முன்னேற்றமும்:** தொடர்ச்சியான வளரறி மதிப்பீடு மற்றும் காலவரம்பிற்கு உட்பட்ட குறைதீர் செயல்பாடுகள் இல்லாததால், கற்றல் இடைவெளி அதிகரித்து, நீண்ட காலத்துக்கு மாணவர்களது கற்றல் விளைவுகள் பாதிப்புக்குள்ளாகின்றன.
- **பொறுப்பேற்றலில் குறைபாடு :** தற்போதுள்ள நடைமுறைகள், மாணவரது ஒருங்கிணைந்த முன்னேற்றத்துக்கு ஏதுவாக இருப்பதில் கல்வி நிறுவனம் பொறுப்பேற்பதற்குப் பதிலாக, கற்றல் விளைவுகள் சார்ந்த சுமை மாணவர்கள் மீதே ஏற்றப்படுகிறது.

**செயல்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாட்டின் பள்ளிக்கல்விக் கொள்கையானது அடிப்படைக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி நிலைகளில் தேக்கமின்மைக் கொள்கை வாயிலாக ஒத்திசைந்த மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய, கற்போர் மைய மதிப்பீட்டு கட்டமைப்பை வலியுறுத்துகிறது.

**1. மதிப்பீட்டு முறைகளைச் சீரமைத்தல்**

- மனப்பாடத்தின் அடிப்படையிலான மதிப்பீட்டு முறையிலிருந்து, பாடக்கருத்துகளைப் புரிந்துகொள்ளுதல், சிந்தனைத் திறன், பெற்ற அறிவினை புதிய சூழல்களில் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் மதிப்பீட்டு முறைக்கு மாறுதல்.



- மாணவர்களைப் போட்டிகள் மற்றும் தரநிலை வாயிலாக மதிப்பிடுவதிலிருந்து, அவர்கள் தனியாள் சிறப்புநிலையை அடைய ஊக்கமளிக்கும் கற்றல் முன்னேற்றக் குறியீடுகள் அடிப்படையில் மதிப்பிட வேண்டும்.
- கற்றல் மதிப்பீட்டின் முக்கியக் கூறுகளாக செயல்பாடுகள், செயல்திட்டம், அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையிலான ஒப்படைப்புகளை ஒருங்கிணைத்தல் வேண்டும்.
- அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தொடர்முயற்சி ஆகியவற்றின் வளர்ச்சியைக் கண்டறிய திரள் மதிப்பீட்டு அணுகுமுறைகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.
- மதிப்பீட்டு முறையானது, மாணவர்களது கற்றல் குறித்த திட்டவட்டமான முடிவாக இல்லாமல் அவர்களது கற்றலுக்கு உதவியாக அமைந்து அதனை அடுத்தக் கட்டத்துக்கு எடுத்துச்செல்லும் வாய்ப்புகளாக வடிவமைக்கப்பட வேண்டும்.

**2. புதுமையான மதிப்பீட்டு உத்திகளை நடைமுறைப்படுத்துதல்**

- அனைத்துப் பள்ளிகளிலும், தன் மதிப்பீடு, ஒப்பார்குழு மதிப்பீடு, செயல்திட்டப் பணி, ஒட்டுமொத்தச் செயல்பாடுகள் அடிப்படையிலான மதிப்பீடு ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல்.
- திறந்தநிலை வினாக்கள், குழு மதிப்பீடுகள், வாய்வழி மற்றும் செய்முறைத் தேர்வுகள் ஆகியவற்றை மாணவர்களது படைப்பாற்றல், பிரச்சினைக்குத் தீர்வு காணும் திறன், ஒருங்கிணைந்து செயலாற்றும் பண்பு ஆகியவற்றை மதிப்பிடும் வகையில் மேம்படுத்துதல்.
- பல்வகைப்பட்ட மதிப்பீட்டு வழிமுறைகளை வடிவமைப்பதிலும், பயன்படுத்துவதிலுமான பயிற்சிகளில் ஆசிரியர்களுக்கு வலுவூட்டல்.
- திறன் வளர்ச்சி சார் முன்னெடுப்புகள், வள மேம்பாடு ஆகியவை மூலம் மாணவர்களது ஒட்டுமொத்தச் செயல்பாடுகள் அடிப்படையிலான மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்துவதை அதிகரித்தல்.

**3. தொடர் மற்றும் வளரறி மதிப்பீடு**

- வினாடி வினாக்கள், வகுப்பறை கலந்துரையாடல், செயல்திட்டப்பணி மற்றும்

உற்றுநோக்கல் மதிப்பீடுகள் போன்ற வளரறி மதிப்பீடுகளின் வாயிலாகதிட்டமிட்ட, தொடர்ச்சியான மதிப்பீட்டு அமைப்பினை ஏற்படுத்துதல்.

- மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், கற்றல் இடைவெளியை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து குறைதீர் செயல்பாடுகளை மேற்கொள்ளவும், முடிவுகளுக்கு அதிக முக்கியத்துவம் தராத வகுப்பறை அடிப்படையிலான மதிப்பீட்டுச் செயல்பாடுகளைப் பயன்படுத்துதல்.
- அன்றாட வகுப்பறைச் செயல்பாடுகளில் செயல்முறைத் திறன்கள், உடல்திறன், சமூக மனவெழுச்சிக் கற்றல், சமூக நடத்தை மதிப்பீடுகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்.





**4. பின்னூட்ட செயல்முறைகள் மற்றும் தரவுகளின் பயன்பாடு**

- பள்ளிகள் தங்களது முன்னேற்றத்தை தரநிலைப்படுத்தவும், ஏனைய பள்ளிகளிடமிருந்து உத்திகளைக் கற்கவும் ஊக்கப்படுத்தும் வகையில், வகுப்பறை, ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவில் பல்லடுக்கு பின்னூட்ட அமைப்புகளை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துதல்.
- மாணவர்களின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணித்து, முன்னேற்றப் பாங்கினைக் கண்டறிந்து கல்விசார் இடைவினைகளை பரிந்துரைக்க, எண்ம மதிப்பீட்டுத் தளங்களையும், கல்வி மேலாண்மைத் தகவல் முகைமையையும் ஆக்கப்பயனுடையதாகச் செய்தல்.
- கற்பித்தலுக்கான திட்டமிடுதல் மற்றும் கொள்கை சீரமைப்பிற்கு வழிகாட்டும் வகையில் காலமுறை அடிப்படையில் மாணவர்களது கற்றல் விளைவுசார் மேலாய்வினை மேற்கொள்ளுதல்

**5. பொதுத் தேர்வுகளை மாற்றியமைத்தல்**

- 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கு மட்டும், பொதுத்தேர்வுகளை தொடர்ந்து நடத்துதல்,
- தொடர்ச்சியான, திறன் அடிப்படையிலான அகமதிப்பீடுகள்மூலம் பாடப்பொருள் மேம்பாடு, திறன் மேம்பாடு மற்றும் கல்விசார் ஆயத்தநிலை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையில் மாணவர்கள் 11ஆம் வகுப்பில் பயிலும் ஆண்டினை அவர்களை ஆயத்தப்படுத்தும் மற்றும் மாற்றத்துக்கு உள்ளாக்கும் ஆண்டாகக் கருத்தில் கொள்ளவேண்டும். இந்த அணுகுமுறை தேர்வு சார்ந்த மன இறுக்கத்தைக் குறைக்க உதவுதோடு 12ஆம் வகுப்பு பொதுத்தேர்விற்கு மாணவர்கள் சிறப்பாகத் தயாராவதை உறுதி செய்து, அவர்கள் பாடக்கருத்துகளை ஆழ்ந்து புரிந்துகொள்ள ஊக்கப்படுத்தும். மேலும், இது மேல்நிலை வகுப்புகளில், சமநிலையான, மாணவர்நேய மதிப்பீட்டு அமைப்பினையும் மேம்படுத்தும்.
- மனப்பாடம் செய்வதற்குப் பதிலாக, பாடக்கருத்துகளைப் புரிந்துகொண்டமை, பெற்ற அறிவினை புதிய சூழல்களில் பயன்படுத்துதல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை மதிப்பிடும் வகையில் பொதுத்தேர்வுகளை சீரமைக்க வேண்டும்.
- வாய்மொழித்தேர்வுகள், செயல்முறைத்தேர்வுகள், குழுச் செயல்பாடுகள், செயல்திட்டப் பணிகள் போன்ற பல்தரப்பட்டக் கூறுகளைக் கொண்டதாக மதிப்பீட்டு முறைகளை மாற்றியமைக்க வேண்டும்.
- கல்வித் தரநிலைகளைப் பேணும் அதேநேரம் மன அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் பொதுத்தேர்வுகளை மாற்றியமைக்க வேண்டும்.

**தேக்கமின்மைக் கொள்கை**

**நோக்கம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள்**

ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறுபட்ட வேகத்தில் கற்கிறது. குழந்தைகளின் கற்றலில் ஏற்படும் குறைகளுக்காக அவர்களுக்குத் தண்டனை அளிக்காமல் பள்ளிகள்



அவர்களது கற்றலை மேம்படுத்த வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை தேக்கமின்மைக் கொள்கையினை நடைமுறைப்படுத்தி வருகிறது. இக்கொள்கை, தேர்ச்சியை மட்டுமே நோக்கமாகக் கொண்ட ஆண்டு இறுதித் தேர்வுகளிலிருந்து விலகி தொடர்ச்சியான, **மாணவர்களுக்கு உதவும் வகையிலமைந்த, திறன் அடிப்படையிலான மதிப்பீட்டு முறைகளை வலியுறுத்துகிறது.**

**கொள்கையின் முக்கியக் கூறுகள்**

**அ) தொகுத்தறி மதிப்பீட்டை கடந்த செயல்பாடுக**ள்

- *தேர்ச்சியினை தீர்மானிக்க ஆண்டு இறுதித் தேர்வுகளை சார்ந்திருப்பதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.
- மாணவரின் முழுமையான கற்றல் பயணத்தை கல்வியாண்டு முழுவதும் பதிவு செய்யும் தொடர்ச்சியான மதிப்பீட்டு முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**ஆ) தொடர் மதிப்பீடு மற்றும் பின்னூட்டம்**

- தொடர்ச்சியான வளரறி மதிப்பீட்டிற்கான வகுப்பறை செயல்பாடுகள், வினாடி-வினாக்கள், செயல்திட்டப்பணி மற்றும் ஆசிரியரது உற்றுநோக்கல் ஆகியவற்றைப் பயன்படுத்துதல்
- தனியாள் கற்றல் தேவைகளுக்கு உதவும் வகையில் மாணவரது முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணித்தல், உரிய நேரத்தில் பின்னூட்டம் அளித்தல் மற்றும் கற்பித்தல் முறையினை மாற்றியமைத்தல்.

**இ) பள்ளிச் செயல்பாடுகளுக்குள்ளமைந்த குறைதீர் கற்பித்தல்**

- வழக்கமான பள்ளி கால அட்டவணையுடன் குறைதீர் கற்பித்தலை இணைத்தல்
- வகுப்பு அளவிலும் சிறு குழு அளவிலும் செயல்பாடுகளை அளித்தல், முக்கிய வகுப்புகளில் (வகுப்பு 3, 6 மற்றும் 9) இணைப்புத் திட்டங்களையும் அதிக அளவிலான கற்றல் வாய்ப்புகளையும் வழங்குதல்.
- திறன் இடைவெளிகளைக் களைய உயர் தொடக்க மற்றும் இடைநிலை வகுப்புகளில் THIRAN (கல்வியில் சீரமைப்பையும் வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்கானஇலக்குகளை அடைய உதவுதல்) திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

**ஈ) பள்ளி பொறுப்பேற்றல்**

- ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு, பிரச்சினைகளைக் கண்டறியு உதவும் கற்பித்தல் முறைகள் மற்றும் கற்றல் விளைவுகளைக் கண்காணிக்கும் கருவிகள் மூலம், மாணவர்கள் கற்றல் விளைவுகளை அடையும் பொறுப்பு பள்ளிகளைச் சார்ந்தது என்ற நிலையை உருவாக்குதல்.
- தனிப்பட்ட உதவி மூலம் மாணவர்களது திறன் அடைவை உறுதி செய்து, எட்டாம் வகுப்பு வரை தடையற்ற தேர்ச்சியினை உறுதி செய்தல்.





**உ) இணைப்புத்திட்டங்கள் மற்றும் நிலைமாற்றத்துக்கு உதவுதல்**

- மாணவர்களின் கற்றல் இழப்புகளைக் களையவும், அடுத்தடுத்த வகுப்புகளில் மாணவர்களைக் கற்றலுக்குத் ஆயத்தப்படுத்தவும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தயாரிக்கும் பாடப்பொருள்களின் அடிப்படையில் கல்வியாண்டின் தொடக்கத்தில் இணைப்பு வகுப்புகளை நடத்துதல், குறிப்பாக 6 முதல் 8 வகுப்புகளுக்கு.

**ஊ) பெற்றோரது ஈடுபாடு**

- முன்னேற்ற அறிக்கைகள், பெற்றோர்-ஆசிரியர் கூட்டங்கள் மற்றும் இணைய செயலிகள் வாயிலாக மாணவர்களது முன்னேற்றம் மற்றும் இடைவினைத் திட்டங்களை தொடர்ந்து, குறிப்பிட்ட கால இடைவெளிகளில், பெற்றோருக்குத் தெரிவித்தல்.
- குறைதீர் வகுப்புகளுக்குத் திட்டமிடுதல் மற்றும் கண்காணிப்பதில் பெற்றோரின் பங்கேற்பினை ஊக்குவித்தல்.

**எ) கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு**

- கற்றல் விளைவுகளில் தொடர் முன்னேற்றம் காண பள்ளி மதிப்பீட்டு முறைகளில் கவனம் செலுத்துதல்.
- ஒன்றிய மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் மதிப்பீட்டுத் தரவுளை கண்காணித்துக் குறைதீர் செயல்பாடுகளை உறுதி செய்து, கற்றல் இழப்பு அதிகரித்தலைத் தடுத்தல்.
- நிகழ்நேரத்தில் மதிப்பீட்டை மேற்கொள்ளவும், அறிக்கை தயாரிக்கவும் தொழில்நுட்பம் சார்ந்த கண்காணிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல்.

**முடிவுரை**

தமிழ்நாடு அரசின் மதிப்பீட்டு சீரமைப்பு செயல்பாடும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் தேக்கமின்மைக் கொள்கையும், தன்னை பிறர் நிலையில் வைத்துப் பார்க்க உதவும், உள்ளடக்கியமற்றும் கற்போருக்கு ஆதரவான கல்வி அமைப்பை நோக்கிய தீர்க்கமான நகர்வைக் குறிக்கிறது. மதிப்பீட்டினை வளரறி திறன், பிரச்சினைகளை கண்டறிதல், செயல்திறனை அதிகரித்தல் ஆகிய செயல்பாடுகளாக மாற்றியமைத்து, தடையற்ற தேர்ச்சி மூலம் தோல்வி சார்ந்த அச்சத்தைக் களைந்து, குழந்தைகளுக்குத் தேவையான தனிப்பட்ட கல்வி உதவியுடன், ஒவ்வொரு குழந்தையும் தன்னம்பிக்கையுடன் முன்னேறுவதை அரசு உறுதி செய்கிறது. இந்தச் சீர்திருத்தங்கள், முழுமையான, சிந்தனைத்திறன் மிக்க, பிரச்சினைகளிலிருந்து மீண்டுவரும் திறன் கொண்ட கற்போர்களை உருவாக்குவதில் பங்களிப்பதோடு, சமூகநீதியை மேம்படுத்தி, கல்வி சமநிலையின்மையைக் குறைத்து தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வி அமைப்பின் ஒட்டுமொத்த தரத்தினையும் நம்பகத்தன்மையையும் வலுப்படுத்துவதாக அமைகின்றன.



# இயல் 7 : ஆசிரியர் பணித்திறன்மேம்பாடு

**அறிமுகம்**

ஆசிரியர்கள், வலுவான மற்றும் உள்ளடங்கிய கல்விமுறையின் முக்கியத் தூண்களாகத் திகழ்கின்றனர். எந்தவொரு கலைத்திட்டம் அல்லது கற்பித்தல் சீரமைப்பின் செயல்திறன்,ஆசிரியர்களின் திறன்கள், ஊக்கம் மற்றும் பணிபுரியும் நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதனை அங்கீகரிக்கும் விதமாக தமிழ்நாடு, தொடர்ந்து ஆசிரியர் பணித்திறன் வளர்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டு முன்னெடுப்புகள் மூலம் சூழலுக்கேற்ப செயலாற்றுதல் மற்றும் வளமான ஆசிரியர் சமுதாயத்தினை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது.

இந்த இயல், தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளுக்கான முழுமையான, தொழில்நுட்ப வசதிகள் மற்றும் தேவை அடிப்படையிலான ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டுச் சூழலை உருவாக்கிடவும் வகுப்பறையில் சமூக உள்ளடக்கத்துடன் கூடிய தகைசால் கற்றல், கற்பித்தலை அடையக்கூடிய வழிமுறையையும் கோடிட்டுக் காட்டுகிறது.

**தற்போதைய நிலை**

தமிழ்நாட்டில் செயல்படும் ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB), ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் செயல்முறைகளைப் படிப்படியாக மேம்படுத்திடத் தொடர்புடைய துறைகள் மற்றும் வல்லுநர்களிடம் விரிவான கலந்தாலோசனைளை நடத்தி வருகிறது. ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) விண்ணப்பதாரர்களின் கலை மற்றும் அறிவியல், மக்களாட்சி விழுமியங்கள் சார்ந்த விழிப்புணர்வு, சாதி, வகுப்பு, பாலினம், மதம் மற்றும் உள்ளூர் மொழிகள் மற்றும் பண்பாடு தொடர்புடைய உணர்திறன்கள் போன்ற பல்வேறு கூறுகளை மதிப்பீடு செய்யும் பொருட்டு இத்தேர்வு வலுப்படுத்தப்பட்டு வருகின்றது.

கற்பித்தல் திறன்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு தகுதியான விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் வழிமுறைகள், பல மதிப்பீட்டு நிலைகளைக் கொண்டுள்ளன.

பிற ஆசிரியர் பணியிடங்களுக்குப் பின்பற்றப்படும் தெரிவு வழிமுறைகளைப் போலவே சிறப்பு ஆசிரியர்களுக்கான பணித்தெரிவும் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நெறிப்படுத்தப்பட்டு வருகிறது. பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, குழந்தைகளின் குறிப்பாக வளரிளம் பருவத்தில் அவர்களின் வளர்ச்சித் தேவைகளைப் புரிந்துகொள்ளுதல் கவனத்தில் கொள்ளப்படுகிறது. அதே நேரத்தில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் பாடஅறிவு மற்றும் வளரிளம் பருவத்தினரைச் சிறப்பாகப் புரிந்துகொண்டு வழிகாட்டும் திறன்களும் மதிப்பீடு செய்யப்படுகின்றன.





நெறிப்படுத்தப்பட்ட ஆசிரியர் தெரிவு வழிமுறைகள் மற்றும் அடிப்படைப் பணியிடைப் பயிற்சிகளில் தமிழ்நாடு, நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ளது. பெரும்பாலான பள்ளிகள், போதுமான எண்ணிக்கையில் தகுதியான ஆசிரியர்கள் மற்றும் அடிப்படைப் பணித்திறன் பெற்றவர்களைக் கொண்டுள்ளன. எனினும் தற்போதைய மதிப்பீடுகள், வகுப்பறை உண்மை நிலைக்கும் பணித்திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் இடையிலான பொருத்தப்பாடு, காலமுறைமை ஆகியவற்றிலுள்ள இடைவெளிகளை எடுத்துக் காட்டுகிறது.

**மாநில அடைவு ஆய்வு 2024 மற்றும் தேசிய அடைவு ஆய்வு 2024 – ன் படி:**

- 89% பள்ளிகள், குழந்தைகளைச் சிறப்பாகப் புரிந்துகொள்ளும் நோக்கில் பெற்றோர்களுக்கான ஆசிரியர் பயிற்சிகளை நடத்தியுள்ளன.
- 89% பள்ளிகள், ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியான பணித்திறன் மேம்பாட்டு அமர்வுகளை நடத்தியுள்ளன.
- 81% பள்ளிகள், நடத்தை மாற்றம் சார்ந்து பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளன.
- 76% பள்ளிகள், வளரிளம் பருவத்தினருக்கான நடத்தைகள் சார்ந்து பயிற்சி அமர்வுகளை நடத்தியுள்ளன.
- 73% பள்ளிகள், மனநல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளன.
- 66% பள்ளிகள், மன அழுத்த மேலாண்மைப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளன.
- 63% பள்ளிகள், மனவெழுச்சி நுண்ணறிவுப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளன.
- 49% ஆசிரியர்கள் மட்டுமே கடந்த ஆண்டில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சியில் பங்கேற்றனர்.
- 40% பள்ளித் தலைமையாசிரியர்கள் தலைமைத்துவப் பயிற்சியைப் பெற்றுள்ளனர்.
- 39% ஆசிரியர்கள், வழிகாட்டுதல் மற்றும் சக ஆசிரியர் உற்றுநோக்கும் முன்னெடுப்புகளில் பங்கு பெற்றுள்ளனர்.
- 25% ஆசிரியர்கள், கடந்த 12 மாதங்களில் முறையான பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் பங்கேற்றுள்ளனர்.

இவை பணித்திறன் கற்றல் வாய்ப்புகளில் குறிப்பாக, தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு, ஒப்பார்குழு வழிகாட்டுதல், தலைமைத்துவ மேம்பாடு மற்றும் உள்ளடங்கிய வகுப்பறைச் செயல்பாடுகளின் வரம்பினையும் ஆழத்தையும் மேம்படுத்துவதன் அவசியத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது..

**மேம்படுத்தப்பட வேண்டிய பகுதிகள்**

- **தேவைப்படும் தொழில்நுட்ப வசதியுடன் கூடிய கற்றல் வளங்களின் குறைவான இருப்பு**

ஆசிரியர்கள், தங்களுடைய கற்பித்தல் பயிற்சி அல்லது பணித்திறன் மேம்பாட்டிற்கு உதவும், இடைவினையாற்றக்கூடிய, சூழல் சார்ந்த, எளிதாகப் கிடைக்கக்கூடிய எண்ம வளங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அவ்வப்போது



அமைவதில்லை. தற்போதைய அமைப்பில் இணையத்தளங்கள் அல்லது அலைபேசி அடிப்படையிலான கற்றல் கட்டகங்களை அணுகுவதற்கான வாய்ப்புகள் போதுமானதாக இல்லை.

- **ஒப்பார் குழு கற்றலுக்கும் ஒருங்கிணைந்த கற்றலுக்குமான தளங்களை அதிகரித்தல்**

கருத்துகள், அனுபவங்கள் மற்றும் உத்திகளைப் பரிமாற்றம் செய்யவும் வழிகாட்டவும் தேவையான கூடுதல் நிறுவன அமைப்புகள் அல்லது ஆசிரியர் தளங்கள் பள்ளி அளவில் தேவைப்படுகிறது.. சக ஆசிரியர்களை உற்றுநோக்கவும் பின்னூட்டங்களைப் பெறவும் அல்லது இணைந்து கற்பித்தலில் உள்ள சவால்களுக்குத் தீர்வு காணவும் ஆசிரியர்களுக்கு முறையான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

- **முறைப்படுத்தப்பட்ட, பருவ வாரியான ஆசிரியர் திறன் மதிப்பீடுகள்**

நடைமுறையிலுள்ள ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டிற்கு ஆசிரியர் திறன்கள் மற்றும் இலக்கு நோக்கிய திறன்வளர்ச்சிச் செயல்பாடுகளில் உள்ள இடைவெளிகள் குறித்த தரவு சார்ந்த தகவல்களைப் போதிய அளவில்அளித்தல் வேண்டும். தொடர் கூர்ந்தாய்வு மதிப்பீடுகள், தனித்துவமான பயிற்சித் திட்டங்களை வடிவமைப்பதற்கெனத் தொடர் கூர்ந்தாய்வு மதிப்பீடுகளுக்கான தேவை உள்ளது.

- **வளர்ந்துவரும் திறன்கள் மற்றும் சமூக உள்ளடக்கக் கருப்பொருள்கள் மீதான போதிய கவனமின்மை**

தற்போதைய பணித்திறன் மேம்பாட்டிற்கான கட்டகங்களில் எதிர்காலத் திறன்கள், உள்ளடங்கிய கல்வி, எண்மக் கற்றல் மற்றும் சமூக மனவெழுச்சிக் கற்றல் போன்றவற்றிற்கு மிகக் குறைந்த முக்கியத்துவமே அளிக்கப்படுகிறது.பலவகைப்பட்ட கற்பவர் தேவைகளையும் சமவாய்ப்பளித்தலை வளர்த்தல் மற்றும் வகுப்பறை வேறுபாடுகளைக் கவனமுடன் கையாளுவதற்கும் ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாடு தேவைப்படுகிறது.

- **தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளில் தொடர்ந்து நிலவும் பணியாளர் பற்றாக்குறை**

மலைப்பாங்கான, கடலோர மற்றும் பழங்குடியினப் பகுதிகளில் நிலவும் ஆசிரியர் காலிப் பணியிடங்கள், தரமான கல்வி வழங்குதலைப் பாதிக்கின்றது. இப்பகுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட சவால்களுக்குத் தீர்வு காணும் வகையில் வடிவமைக்கப்பட்ட பயிற்சியும் ஊக்கமும் தேவைப்படுகிறது.

- **பிரச்சனைகளை எதிர்கொள்ளக்கூடிய மாணவர் குழுக்களைக் கையாளுவதற்கான போதிய பயிற்சியின்மை**

சிறுபான்மை, மூன்றாம் பாலினத்தவர், புலம்பெயர்ந்தோர், அல்லது விபத்துக்களால்





பாதிக்கப்பட்ட பின்னணியில் இருந்துவரும் மாணவர்களுக்கு ஆதரவு வழங்க ஆசிரியர்களுக்குப் போதுமான வலுவூட்டல் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. தனித்துவமான, தன்னைத் பிறர் நிலையில் வைத்துப்பார்க்கக் கூடிய மற்றும் சூழல் உணர்திறன்களுக்கான பயிற்சிக் கட்டகங்கள், உள்ளடங்கிய வகுப்பறைகளை உறுதிசெய்வது அவசியம்.

**செயல்பாடுகளுக்கான செயல்திட்டம்**

**1. முழுமையான தேவை அடிப்படையிலான ஆசிரியர் திறன் மேம்பாட்டு வடிவமைப்பு**

அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கான எண்மப் பயிற்சிக் கட்டகங்கள், கல்விசார் வளங்கள் மற்றும் தொடர் புத்தாக்கப் பயிற்சிகள் உள்ளிட்டவைக்கெனத் தமிழ்நாடு, இணையத்தள ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தளம், கொரோனா பெருந்தொற்று மற்றும் அதற்குப் பிந்தைய காலங்களில் பெரும்பாலான ஆசிரியர்களால் பயன்படுத்தப்பட்டது. கிராமப்புறப் பகுதிகளில் பயன்பாட்டில் உள்ள இடர்ப்பாடுகள் மற்றும் பாடம் சார்ந்த குறிப்பிட்ட இடைவெளிகள், கற்பித்தல் மற்றும் உள்ளடங்கிய கல்விக் கட்டகங்கள் ஆகியவற்றில் இத்தளத்தின் பயன்பாடு மற்றும் பல்வேறு கருத்து உருவாக்கத்திற்கான வரன்முறை குறுகியஅளவில் உள்ளது.

**முன்மொழியப்பட்ட செயல்**

ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி பார்வை செயலியானது, வடிவமைக்கப்பட்ட, பாடத்திட்டத்திற்கு இணக்கமான, திறன் சார்ந்த கட்டகங்கள் அனைத்துப் பாடங்களுக்கும், கற்பித்தல் திறன்கள், வகுப்பறை மேலாண்மை, எண்மக் கல்வியறிவு, உள்ளடங்கிய கல்வி மற்றும் குழந்தைப் பாதுகாப்பு ஆகியவற்றைக் கொண்டதாக வலுப்படுத்தி விரிவடையச் செய்யவேண்டும்.

இந்தஇணையத்தளம் பின்வருவனவற்றை வழங்க வேண்டும்.

- நெகிழ்வான, எளிதில் அணுகக்கூடிய மற்றும் பன்மொழி இணையவழியிலும் நேரடியாகவும் கற்பிப்பதற்கான பாடப்பொருள்.
- ஆசிரியர்களின் பணி முன்னேற்றத்திற்கான சான்றிதழுடன் கூடிய வேறுபடுத்தப்பட்ட பல்வேறு படிப்புகள்.
- இடைவினையாற்றக்கூடிய சக கற்றல் வாய்ப்புகளைப் பரிமாறிக் கொள்ளவும் சிறந்த செயல்பாடுகள் மற்றும் கற்பித்தல் வளங்களைப் பரிமாற்றம் செய்யக்கூடிய வாய்ப்புகள்.
- பங்கேற்பை உறுதிசெய்தல், படிப்பை நிறைவு செய்தல் மற்றும் தொழில்திறன் மேம்பாட்டுக் குறியீடுகள் ஆகியவற்றைக் கண்காணிக்க கல்வி மேலாண்மைத் தகவல் முறைமையுடன் ஒருங்கிணைத்தல்.

தொடர்ந்த பாடப்பொருள் புதுப்பிப்பு, இணையத்தளப் பயன்பாட்டிற்கான திறன்



மேம்பாடு மற்றும் கல்வி நிறுவனங்கள், கல்வி வல்லுநர்களுடனான இணைந்து செயலாற்றுதல் ஆகியன முதன்மைப்படுத்தப்பட வேண்டும். இந்த முன்னெடுப்பு, மாநில அளவில், உள்ளடங்கிய, தொடர் கற்றல் அணுகுமுறையை வளர்க்க உதவுவதுடன் வகுப்பறைக் கற்பித்தல் தரத்தினை மேம்படுத்தி மாணவர்களின் கற்றல் அடைவுகளை உயர்த்துவதற்கு வழிகோலும்.

**2. ஒருங்கிணைந்த மற்றும் ஒப்பார் குழு தலைமையிலான தொழில்முறை சமூகங்கள்**

தமிழ்நாடு, பள்ளி, வட்டார மற்றும் மாநில அளவில் வழிகாட்டுதல், சக உற்றுநோக்கல், பாடத்திட்டப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பதற்கான ஒருங்கிணைந்த ஆசிரியர் கற்றல் சமூகங்களை உருவாக்கிடத் திட்டமிட்டுள்ளது. இச்சமூகங்கள் ஆசிரியர்களுக்குச் சவால்களை விவாதிப்பதற்கும் வெற்றிகரமான வழிமுறைகள் மற்றும் வகுப்பறைச் செயல்பாடுகளில் புதிய உத்திகளைப் பரிமாறிக் கொள்ளவும் பாதுகாப்பான தளங்களாக அமையும். பல்கலைக் கழகங்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தேசிய அளவிலான நிறுவனங்களுடன் மேற்கொள்ளும் கல்விசார் பங்கேற்பு, இந்த தளங்களுக்கு ஆராய்ச்சி அடிப்படையிலான வளங்கள் மற்றும் திறன்களை வழங்கலாம்.

**3. வளர்ந்துவரும் கற்பித்தல் திறன்களை ஒருங்கிணைத்தல்**

ஆசிரியர்கள், எதிர்காலத் திறன்களை ஏற்றுக் கொள்ளவும் எண்மக் கற்பித்தல் மற்றும் உள்ளடங்கிய வகுப்பறை நடைமுறைகள் அடங்கிய தனித்துவமான கட்டகங்கள் வாயிலாகப் பயிற்சி அளிக்கப்படும் இவ்வகையான ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள். சமூக மனவெழுச்சிக் கற்றல், குழந்தைப் பாதுகாப்பு, தண்டனைகளற்ற மதிப்பீட்டு முறைகளை வலியுறுத்தும். ஆசிரியர்கள், தங்களுடன் பணியாற்றும் ஆசிரியர்களுடன் ஒருங்கிணைந்து உருவாக்கிய மதிப்பீட்டுக் குறிகாட்டிகள், வளரறி மதிப்பீட்டுச் செயல்பாடுகள், செயல்திட்ட அடிப்படையிலான மதிப்பீட்டு நடைமுறைகளைச் செயல்படுத்திப் பார்க்க ஊக்குவிக்கப்படுவர்.

**4. உள்ளடங்கிய மற்றும்சூழல்சார் கற்பித்தலுக்கான பயிற்சி**

சிறப்புப் பயிற்சிக் கட்டகங்கள் மலைப்பாங்கன, கடலோர, புலம்பெயர் மற்றும் சிறுபான்மைச் சமூகப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் தனித்துவத் தேவைகளை நிறைவு செய்யும். மறுகுடிபெயர்வுப் பகுதிகள், கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் விபத்துக்குள்ளான மாணவர்களைக் கையாளும் ஆசிரியர்களுக்குச் சிறப்பு சமூக உளவியல் மற்றும் கற்பித்தல் பயிற்சிகள் வழங்கப்படும். சமூகப் பிரச்சினைகளான சாதி, பாலினம் மற்றும் சமவாய்ப்பளித்தல், ஆகியவற்றில் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வினை அளித்துப் பாதுகாப்பான மற்றும் உள்ளடங்கிய கற்றல் மையங்களை ஏற்படுத்தும் வகையிலான கலைத் திட்டம் உருவாக்கப்படும்.





**5. முரண்பாடுகளைத் களைதல். மனநலன், மனஅழுத்தம் மேலாண்மை வளரிளம் பருவ நடத்தை மற்றும் தொழில்நுட்ப இணைப்பு ஆகியவற்றை இக்கொள்கை முதன்மைப் படுத்துகிறது.**

மாணவர்களின் சமூக ஊடகப் பயன்பாடு, போதைப்பொருள் பயன்பாட்டினைத் தடுத்தல் சார்ந்த விழிப்புணர்வு மற்றும் மாணவர் பாதுகாப்பு செயல்முறைகள் ஆகியவற்றில் ஆசிரியர்கள் பயற்சியினைப் பெறுவார்கள். கலை, உடற்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆசியர்கள் செயல் அடிப்படையிலான கற்றல் வளங்கள் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் திறன் மேம்பாட்டினைப் பெறுவார்கள்.

**6. தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளின் மேம்பாடு,** அனைத்து ஆசிரியர்களுக்கான ஆங்கிலத்தில் பேசுதல், எழுதுதல் மற்றும் கற்பித்தல் திறன்களை வளப்படுத்துவதற்கு ஒரு கட்டமைக்கப்பட்ட தொடர் ஆசிரியர் திறன்மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் ஆங்கிலம் கற்பிக்கும் திறன் மேம்பாட்டினை வலுவூட்ட அவர்களின் ஆங்கில மொழிப்புலமையை மேம்படுத்த வேண்டும். ஒரு தெளிவான மதிப்பீடு மற்றும் மேம்பாடு வடிவமைப்பு இம்முறையின்செயல்திறனைக் கண்காணிக்க தேவைப்படுகிறது.

**7. தலைமைத்துவ மற்றும் பள்ளி மேலாண்மைத் திற்ன்களை வலுப்படுத்துதல்**

தலைமையாசிரியர்களுக்கான தலைமைத்துதவ பயிற்சி, தேசிய கல்வித் திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை நிறுவனம் மற்றும் பிற சிறப்புமிக்க நிறுவனங்களுடன் இணைந்து விரிவுபடுத்தப்படும்.தலைமையாசிரியர்களுக்கு பணித்திறன் வினவல். ஒருங்கிணைந்த தலைமைத்துவம் மற்றும் பரவலாக்கப்பட்ட முடிவெடுத்தல் ஆகியவற்றை வளர்ப்பதற்கான பயிற்சி வழங்கப்படும். தலைமைத்துவ மேம்பாடு கல்விசார் மேற்பார்வை ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் பள்ளி மேம்பாட்டுத் திட்டமிடல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமையும்.

**8. எண்ம மற்றும் நிதி பயன்பாடின்றி பயன்படுத்தக் கூடிய இணைய வழித்தளங்கள்**

ஒவ்வொரு வகுப்பு மற்றும் பாடத்திற்கான ஆசிரியர் கையேடுகள் மாதிரிப் பாடத்திட்டங்கள், காணொலிப் பாடங்கள் மற்றும் பிற வளங்கள் ஆகியவற்றை அளிக்கும் நிதி பயன்பாடின்றி அணுகக்கூடிய, மாநிலம் நிருவகிக்கும் எண்ம வளவங்கிகள் உருவாக்கப்படும். இத்தளத்தில் ஆசிரியர்கள், தங்களின் சிறந்த செயல்பாடுகள் மற்றும் புதுமையான மாதிரிகளை வழங்க ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். எண்மக் கற்றல் பொருள்கள், இணைய வழியில் அல்லாமல் நேரடியாக செயலி வழியாக எண்மக் கற்றல் வளங்கள் சேமிக்கும் உபகரணங்கள் மூலம் தொலைதூரப் பள்ளிகளுக்கு வழங்கப்படும்.



**முடிவுரை**

ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு, தமிழ்நாட்டின் கல்வி மாற்றத்திற்கான நிகழ்வின் மையமாக உள்ளது. மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் உயர்தர, கற்போர்மையக் கல்வியை வழங்குவதற்கான முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் உள்ளடங்கிய மற்றும் எதிர்காலத்திற்குத் தயார்படுத்தும் ஆசிரியர் சமூகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

முழுமையான ஆசிரியர் திறன் மேம்பாட்டு வடிவமைப்பைப் நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஆசிரியர்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பினை வளப்படுத்தி எதிர்காலத் திறன்களை உள்ளடக்கி சமூக, உள்ளடங்கிய கருப்பொருள் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான பயிற்சி ஆகியவற்றை வழங்கி. ஆசிரியர்களைக் கற்பித்தல் தலைவர்களாகவும் வாழ்நாள் முழுமையும் கற்பவர்களாகவும் சமத்துவச் சாதனையாளர்களாகவும் மற்றும் கல்வியில் புதுமையைப் புகுத்தும் அதிகாரம் மிக்கவர்களாகவும் உருவாக்கும்.

தொடர்ந்து வளர்ந்துவரும் உலகில் வாழ்வதற்குத் தயாராகும் தன்னம்பிக்கை, இரக்க குணம், கூர் சிந்தனையுள்ள கற்போரை உருவாக்கத் தேவையான திறன்மிக்க ஆதரவு கிடைக்கப்பெறும் மற்றும் ஊக்கம் மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதில் மாநிலத்தின் உறுதிப்பாட்டினை இந்த இயல் வலுயுறுத்துகிறது.





# இயல் 8: பாதுகாப்பான, உள்ளடங்கியப் பள்ளிகள் மற்றும் முழுமையான குழந்தை மேம்பாடு

**அறிமுகம்:**

சமூக ஒருங்கிணைப்பு, ஒருவரையொருவர் மதித்தல் மற்றும் நீடித்த சமூக முன்னேற்றத்தின் அடித்தளமாகக் கல்வி உள்ளது. தமிழ்நாடு, சமத்துவம், கண்ணியம், தன்னைப் பிறர் நிலையில் வைத்துப் பார்த்தல் மற்றும் ஒத்துழைப்பு ஆகிய மதிப்புகளை வளர்க்கும் பள்ளிகளை எதிர்பார்க்கிறது. கல்வி சார்ந்த சூழல்களுக்கு அப்பாற்பட்டு, பள்ளிக்குழந்தைகள் அறிவுத்திறன், உடல்திறன், மனவெழுச்சித்திறன் மற்றும் சமூகத்திறன்களை வளர்க்க உதவும் பாதுகாப்பான, உள்ளடங்கிய மற்றும் மேம்படுத்தப்பட்ட சூழலை பள்ளிகள் வழங்க வேண்டும்.

இந்த இயல் தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் நிலையில் சமூக நல்லிணக்கம், சமூக ஒற்றுமை மற்றும் சாதிகளற்ற சமத்துவ சமூதாயத்தை வளர்க்க ஏதுவான பாதுகாப்பான உள்ளடங்கிய மற்றும் பள்ளிச் சூழலுக்கு உதவும் வகையில் உருவாக்குவதற்கான செயல்திட்டங்களைக் கோடிட்டுக் காட்டுகிறது. நெறிமுறை மிக்க குடியுரிமை மற்றும் பொறுப்பான சமூகப் பங்கேற்புக்குக் குழந்தைகளை ஆயத்தப்படுத்தும் நேர்மறையான விழுமியங்கள் மற்றும் உள்ளடங்கிய சூழல்களை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**தற்போதைய நிலை**

சமூகநலத் திட்டங்களையும் சமூகநீதி முயற்சிகளையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமத்துவம் மற்றும் உள்ளடங்கிய கல்வியை விரிவுபடுத்துவதில் தமிழ்நாட்டின் கல்வி அமைப்பு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இருப்பினும், சாதி, மதம் மற்றும் இன உணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தொடர்ந்து நிலவும் சமூக ஏற்றத்தாழ்வுகள் மாணவர்களின் இடைவினைகள், சமூகம் மற்றும் பள்ளி கலாச்சாரத்தைத் தொடர்ந்து பாதிக்கின்றன. மேலும், மாணவர்களின் பாதுகாப்பு, வலிமை மிகுந்த மாணவர்கள் வலிமை குறைந்த மாணவர்களைத் துன்புறுத்துதல், பாலினம் சார்ந்த பாகுபாடுகள் மற்றும் மனவெழுச்சி பற்றிய கவலைகள், குழந்தை நேயமிக்க பள்ளிகளை உருவாக்க முழுமையான உத்திகள் அவசியமாகின்றன.

**தொலை நோக்குப் பார்வை:**

ஒவ்வொரு குழந்தையையும் தவறான எண்ணங்களும் பயமற்ற பாதுகாப்பான உள்ளடங்கிய மற்றும் மகிழ்ச்சியான சூழலில் சமூகரீதியாக ஒருங்கிணைத்து பரிவுமிக்கவர்களாகவும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் பங்களிக்கக்கூடிய, எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் தனிநபர்களாகவும் உருவாக்கும் கல்வி முறையைக் கட்டமைத்தல்.



**செயல்படுத்துவதற்கான உத்திகள்:**

ஒவ்வொரு குழந்தையையும் தவறான எண்ணங்களும் பயமற்ற பாதுகாப்பான உள்ளடங்கிய மற்றும் மகிழ்ச்சியான சூழலில் சமூகரீதியாக ஒருங்கிணைத்து பரிவுமிக்கவர்களாகவும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் பங்களிக்கக்கூடிய, எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் தனிநபர்களாகவும் உருவாக்கும் கல்வி முறையைக் கட்டமைத்தல்.

**செயல்படுத்துவதற்கான உத்திகள்:**

**1. உள்ளடங்கியப் பள்ளிச் சூழல்களை உருவாக்குதல்:**

- பல்வேறு பின்னணிகளிலிருந்து வரும் குழந்தைகள் ஒருவருக்கொருவர் மரியாதையுடன் கற்க, விளையாட, ஒன்றாக வளர உதவும் சமூக ஒருங்கிணைப்பிற்கான மாதிரி நிறுவனங்களாகப் பள்ளிகள் செயல்பட வேண்டும்.
- முறையான கலாச்சாரப் பரிமாற்ற நிகழ்வுகள், பாரம்பரியத்தைப் போற்றும் வாரங்கள் மற்றும் பலசமய விழாக்கள் போன்றவற்றின் மூலம் பல்வேறு பழக்கவழக்கங்களைப் பற்றிய புரிதலை ஊக்குவிக்க வேண்டும்.
- பகிரப்பட்ட அனுபவங்கள் மற்றும் இணைந்து கற்றல் மூலம் வகுப்பறைகள், விளையாடும் இடங்கள் மற்றும் குழுச்செயல்பாடுகளில் பங்கேற்கும் பன்முகக் குழுக்கள் மூலம் , சமூக இடைவெளிகளுக்குத் தீர்வு காணப்படும் .

**2. சமத்துவம், கண்ணியம் மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களை இணைத்தல்**

- கலைத்திட்ட உள்ளடக்கம் மற்றும் பாடப்புத்தகங்கள், சமத்துவம், நீதி மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களை வலுப்படுத்தும்போது பன்முகத்தன்மையைக் கொண்டாடும்.
- விழுமியக்கல்வி அமர்வுகள் மற்றும் வாழ்க்கைத்திறன் பணிமனைகள், பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்க்கும் மனநிலை, சகிப்புத்தன்மை மற்றும் சமூக நல்லிணக்கத்தை வளர்க்கும்.
- பாகுபாடான நடத்தைகளை அடையாளம் காணவும், அதனைச் சரிசெய்யவும் அதற்கு எதிராக முழுமையான சகிப்புத்தன்மை உறுதி செய்யவும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

**3. பள்ளிகளில் குழந்தைகள் நலம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல்:**

- பாலின-உணர்திறன் மற்றும் குழந்தைநேய உள்கட்டமைப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பாதுகாப்பான பள்ளி வளாகங்களும் அணுகக்கூடிய வகுப்பறைகளும் கட்டமைக்கப்படும்.
- உடல், மனவெழுச்சி மற்றும் எண்மப் பாதுகாப்பை உள்ளடக்கிய விரிவான பள்ளிப் பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்படும்.
- தொடர் பாதுகாப்புத் தணிக்கைகள், உடல்நலக் கல்வி மற்றும் குழந்தைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டங்கள் போன்றவற்றின் மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள்





மற்றும் பெற்றோர்களுக்குக் குழந்தைகள் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**4. செயல்பாட்டு உத்திகள்: தமிழ்நாட்டுப் பள்ளிகளில் POCSO நடைமுறை**

- மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி ஊழியர்களுக்கான தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் உணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடத்துதல். POCSO-இன் கீழ் குழந்தைப் பாதுகாப்பு, தனிப்பட்ட எல்லைகள் மற்றும் புகார் அளித்தல் பற்றிப் பயிற்சியளித்தல்.
- ஒவ்வொரு பள்ளியிலும் பயிற்சி பெற்ற உறுப்பினர்களுடன் கூடிய குழந்தைப் பாதுகாப்புக் குழுக்களை (CPCs) நிறுவி, புகார்களை உணர்வுபூர்வமாகக் கையாளவும் குழந்தை நல அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படவும் பயிற்சியளித்தல்.
- அனைத்துப் பள்ளிகளிலும் குழந்தைநேய மற்றும் மந்தணத் தன்மையுடன் புகார் அளிக்கும் அமைப்புகளை உருவாக்கி, அவசர எண்கள் மற்றும் POCSO தொடர்பான தகவல்களைத் தெளிவாகக் காட்சிப்படுத்துதல்.
- குழந்தைப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் குழந்தைநேய நடைமுறைகள் பற்றிக் கவனம் செலுத்த தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கான கட்டாயத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளித்தல்.
- குழந்தையைப் பாதுகாத்தல், புகார் அளித்தல் மற்றும் மறுவாழ்வு சேவைகளுக்கான சட்ட மற்றும் குழந்தை நல நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.
- கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்புக்குள் குழந்தைப் பாதுகாப்புக் கண்காணிப்பை ஒருங்கிணைத்து அனைத்துப் பள்ளிகளிலும் நல்லிணக்கத்தைக் கண்காணிக்கவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தவும் ஆண்டுதோறும் பாதுகாப்புத் தணிக்கைகளை நடத்துதல்.

**5. மாணவர்களின் மன நலன் மற்றும் மனவெழுச்சி நலமேம்பாடு**

மனவெழுச்சியும் மனநலனும் முழுமையான கல்விக்கு அடிப்படைக் கூறு ஆகும். ஒவ்வொரு குழந்தையும் பாதுகாப்பாக, தனது குறைகள் கேட்கப்பட்டதாக, ஆதரவளிக்கப்பட்டதாக உணரவும், மன அழுத்தத்தைக் கையாளவும், உதவி கேட்கவும், சிக்கல்களில் இருந்து மீண்டு வரவும் உதவும் வகையில் நிறுவனம், பாடத்திட்டம் மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவற்றிற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பின்வருமாறு:

மனவெழுச்சிசார் கல்வி, மனவழுத்த மேலாண்மை முரண்பாடுகளுக்கான தீர்வு காணுதல் மற்றும் உதவி நாடுதல் போன்ற தலைப்புகளில் உயர் தொடக்க நிலை முதல் வயதிற்கேற்ற மனநலன் மற்றும் நலவாழ்வுக் கட்டகங்கள் ஒருங்கிணைக்கப்படும்.

கட்டணமில்லா உதவித் தொடர்பு எண்கள், இணையத் தளங்கள் மற்றும் தொடர் நலவாழ்வு ஆய்வுகள் ஆகியன மாணவர்கள் தங்கள் கவலைகளைப் பாதுகாப்பாகப் பகிர்ந்து கொள்ள மந்தணத் தன்மையுடன் புகார் அளிக்கும் வழிமுறைகள் உருவாக்கப்படும்.



மனவெழுச்சிசார் இன்னல்களின் தொடக்கநிலை அறிகுறிகளை அடையாளம் காணவும், பரிவுடன் பதிலளிக்கவும், பயிற்சி பெற்ற ஆலோசகர்களை அணுகுவதற்கான பொருத்தமான பரிந்துரை வழிமுறைகளை உருவாக்கவும் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

பள்ளிகளைச் சென்றடைதல், திறன் மேம்பாடு மற்றும் பிரச்சினைகளுக்குத் தொடர் சிகிச்சை அளி'ப்பதற்கான மருத்துவப் பரிந்துரைகள் ஆகியன குழந்தை உளவியலாளர்கள் மற்றும் மனநல நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து வழங்கப்படும். இந்த நடவடிக்கைகள் பள்ளிக் கல்வித் துறையில் செயல்படவுள்ள ஒரு தனிப்பட்ட புலத்தின் மூலம் கண்காணிக்கப்பட்டு, பள்ளி அளவிலான செயல்பாட்டுத் தணிக்கைகளில் விவாதிக்கப்படும்.

**6. முழுமையான குழந்தை மேம்பாட்டினை ஊக்குவித்தல்:**

- முழுமையான மேம்பாட்டிற்கு உதவ உடற்கல்வி, கலைகள் மற்றும் உடல்நலன் சார்ந்த ஒருங்கிணைந்த திட்டங்கள் உருவாக்கப்படும்.
- தொடர் உடல்நலப் பரிசோதனைகள் மற்றும் மனநல ஆலோசனைகள் உள்ளிட்ட உடல்நலம், ஊட்டச்சத்து மற்றும் மனவெழுச்சி நலவாழ்வு சேவைகள் வழங்கப்படும்.
- அனுபவ மற்றும் ஒருங்கிணைந்த கற்றல் வாய்ப்புகள், நம்பிக்கை, தன்னைப் பிறர் நிலையில் வைத்துப் பார்த்தல் மற்றும் தலைமைத்துவத் திறன்களை வளர்க்கும்.

**7. உள்ளடங்கிய கற்பித்தல் முறை மற்றும் சமூக உணர்திறன் கற்பித்தல் நடைமுறைகள்**:

- உள்ளடங்கிய கற்பித்தல், பாலினச் சமவாய்ப்பளித்தல் மற்றும் வேறுபட்ட வகுப்பறைகளை கையாளுதல் போன்றவற்றில் ஆசிரியர்களுக்குத் தொடர் பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளித்தல்.
- பங்கேற்றல் மற்றும் பாகுபாடற்ற கற்பித்தல் முறைகள் ஒவ்வொரு மாணவரும் மதிக்கப்படுவதையும் பங்கேற்கச் செய்வதையும் உறுதி செய்தல்.
- விளிம்பு நிலை, புலம்பெயர் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களைச் சார்ந்த குழந்தைகள் உள்ளிட்ட சிக்கல்களை எதிர்கொள்ளக்கூடிய அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒப்பார் குழு உதவி அமைப்புகளின் மூலம் ஆதரவு அளித்தல்.

**8. முரண்பாடுகளைக் களைதல் மற்றும் சமூக நல்லிணக்க முயற்சிகளை நிறுவனமயமாக்குதல்:**

- மாணவர்களின் குழு கட்டமைப்பு செயல்பாடுகள், நல்லிணக்கக் குழுக்கள் மற்றும் நண்பர் குழுக்கள் போன்றவை ஒருவரையொருவர் மதித்தல் மற்றும் முரண்பாடுகளுக்குத் தீர்வு காணும் திறன்களை வளர்த்தல்.
- பள்ளிகளுக்கு இடையேயான கலாச்சார மற்றும் விளையாட்டு நிகழ்வுகள், நேர்மறையான இடைவினையையும் தமிழ்நாட்டின் பன்முகச் சமூகத்தை கொண்டாடவும் ஊக்குவித்தல்.





- சமூக நல்லிணக்கத்திற்காகக் குரல் எழுப்புவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் ஆகியோர் மாணவர்களுடன் இணைந்து செயலாற்றுவர்.

**9. சமுதாய மற்றும் பெற்றோரின் ஈடுபாட்டை வலுப்படுத்துதல்:**

- பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மற்றும் பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை முனைப்புடன் ஊக்குவிக்கும்.
- பாகுபாடற்ற கல்வி மற்றும் குழந்தை உரிமைகளின் முக்கியத்துவம் குறித்து பெற்றோர்களுக்குச் சமூகக் கூட்டங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

பள்ளி தொடர்பான குறைகளைத் தீர்ப்பதில் உள்ளாட்சி அமைப்புகள் ஈடுபடும்.

**10. கண்காணித்தல், அறிக்கையளித்தல் மற்றும் தொடர் மேம்பாடு**

பரவலாக்கப்பட்ட கண்காணிப்பு செயல்திறன் மிக்கதாக உள்ள போதிலும் இது மையப்படுத்தப்பட்ட மாநில அளவிலான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்புடன் செயல்பட வேண்டும். இந்த அமைப்பு மாநிலம் முழுவதும் பெறப்படும் உள்ளீடுகள், வெளியீடுகள் மற்றும் விளைவுகளை ஒருங்கிணைக்கும். மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களின் பங்கேற்புடன் காலாண்டு மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்படும். இது கீழ்க்காண்பனவற்றைக் கொண்டிருக்கும்.

- பள்ளி நிருவாகம் மற்றும் பாதுகாப்புக் குழுக்கள் தொடர் மீளாய்வினை மேற்கொண்டு நடைமுறைகள் மேம்படுத்தப்படும்.
- மாணவர்களின் நலவாழ்வு மற்றும் பாகுபாடு குறித்த ஒருங்கிணைக்கப்படாத தனிநபர் தரவுகள் இலக்கு அடிப்படையிலான இடைவினைகளைத் தெரிவிக்கும்.
- மூன்றாம் நபர் தணிக்கைகள் மற்றும் தன்னிச்சையான மதிப்பீடுகள், பள்ளி உள்ளடங்கிய நிலை மற்றும் ஒருங்கிணைப்பு முயற்சிகளை மதிப்பிடும்.

**முடிவுரை**

தமிழ்நாட்டின் கல்விக்கொள்கை, சமூகப் பொறுப்புள்ள விழுமியத்துடன் கூடிய தன்னைப் பிறர்நிலையில் வைத்துப் பார்க்கும் மனநிலையுடைய குடிமக்களை உருவாக்கும் வகையில் சமுதாயத்தை மாற்றியமைக்கக் கூடிய பள்ளி அமைப்பினைத் தொலைநோக்காகக் கொண்டுள்ளது. பாதுகாப்பான, உள்ளடங்கிய பள்ளிகள் மற்றும் முழுமையான குழந்தை மேம்பாட்டிற்கான முழுமையான உத்திகள், நேர்மையான சமூக நல்லிணக்கத்துடன் கூடிய வளமான தமிழ்நாட்டிற்கு முழுமையான பங்களிக்கும் எதிர்காலத் தலைமுறையினரை உருவாக்கும். இம்மாநிலத்தில் ஒவ்வொரு குழந்தையும், அடையாளம் அல்லது பின்னணியைச் சாராமல், கண்ணியத்துடன் கற்றுக்கொள்ள, தலைமையேற்க மற்றும் செழித்தோங்க ஒரு வாய்ப்பு கிடைக்கிறது.



# இயல் 9 : எதிர்கால பள்ளிகளுக்கான நெகிழ்வுத்தன்மை மற்றும் நிலையான உள்கட்டமைப்பு

**அறிமுகம்:**

கல்வியை, சமூக முன்னேற்றம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியின் மூலாதாரக்கல்லாகக் கொண்டு தமிழ்நாடு தொடர்ந்து தனது பொறுப்புறுதியை நிரூபித்து வருகிறது. தரமான கல்வி வழங்குவதில் பள்ளியின் உள்கட்டமைப்பு எத்தகைய அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிந்து, மாநில அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் பள்ளி உள்கட்டமைப்புகளை நவீனமயமாக்கவும், வலுப்படுத்தவும் வரலாற்றுச் சிறப்புமிக்க முதலீடுகளைச் செய்துள்ளது.

**தற்போதைய நிலை**

கடந்த நான்கு ஆண்டுகளில், நமது மாநிலம் பள்ளி உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்துள்ளது.

| வகை | விவரங்கள் |
|---|---|
| உள்கட்டமைப்பிற்கான முதலீடு | உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு **பேராசிரியர் அன்பழகன் கல்வி வளர்ச்சித் திட்டத்தின்** கீழ் வருடாந்திர முதலீடாக ரூ.1000 கோடி ஒதுக்கீடு |
| கல்விக்கான நிதி | கல்விக்கான நிதி, ஆண்டிற்கு **ரூ.45,000 கோடியைத்** தாண்டியுள்ளது. இது இந்தியாவிலேயே மிக அதிக நிதி ஒதுக்கீடாகும். |
| அடிப்படை வசதிகள் | அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் **வகுப்பறைகள், பயன்படுத்த ஏதுவான கழிவறைகள், சுற்றுச்சுவர், மதிய உணவு சமையலறைகள், குடிநீர் மற்றும் மின்சாரம் ஆகியவற்றின்** பயன்பாடு. |
| நவீன வசதிகள் | **மின்னுரு வகுப்பறைகள், அறிவியல் மற்றும் கணினி ஆய்வகங்கள்,** பல்நோக்கு அரங்குகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் நூலகங்கள் உள்ளிட்டவற்றைப் படிப்படியாக முன்னுரிமை அடிப்படையில் நிறுவுதல். |

இத்தகைய சாதனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் கீழ்க்காணும் இனங்களில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது.





- மலைப்பகுதிகள், கடலோர மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில், காலநிலை மற்றும் பேரிடர் போன்ற எதிர்பாரா இடர்களுக்கு ஈடுகொடுக்கும் நெகிழ்வுத்தன்மை கொண்ட உள்கட்டமைப்பகளை உருவாக்குவதற்கானத் தீர்வுகள் தேவைப்படுகின்றன.
- பல பழைய கட்டடங்களுக்குக் கட்டமைப்புத் தணிக்கை, மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்துதல் தேவைப்படுகிறது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான தீர்வுகள், நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமான நடைமுறைகள் ஆகியவற்றிற்கான முன்னெடுப்புகள் அவசியமாகிறது.
- மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கு அனைத்து நிலைகளிலும் எளிதில் அணுகக்கூடிய தன்மை மற்றும் தடையற்ற சூழல்களை உருவாக்குதல் இன்றியமையாததாகும்.

**நடவடிக்கைக்கான செயல்திட்டம்**

நான்கு முக்கியக் கொள்கைகளை வழிவகையாகக் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு உத்தியை அரசு முன்மொழிகிறது.

1. பாதுகாப்பு மற்றும் நெகிழ்வுத் தன்மை
2. சுற்றுச்சசூழல் நிலைத்தன்மை
3. எளிதில் அணுகுதல்
4. தொழில்நுட்ப நவீனமயமாக்கல்.

**1.பருவநிலைக்கேற்ப மற்றும் பாதுகாப்பிற்கான பள்ளி உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்**

- அதிக ஆபத்துவிளைவதற்கு வாய்ப்புள்ள பகுதிகளில் மறுசீரமைப்புக்கு முன்னுரிமை அளித்து, பாதிக்கப்படக்கூடிய பள்ளிகளின் கட்டமைப்பு, பாதுகாப்பு தணிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- நிலநடுக்கம், வெள்ளம், புயல் மற்றும் வெப்ப அலை தாங்கும் தன்மையுள்ளதாகப் பள்ளி வடிவமைப்பினை மாற்றியமைத்தல்.
- பாதுகாப்பான குடிநீர், பயன்படுத்தத்தக்க கழிவறைகள், கைகளைக் கழுவுவதற்கான வசதிகள் இருப்பதை உறுதி செய்தல்.
- காற்றோட்டமான, வெளிச்சம் நிறைந்த, குழந்தைகளுக்கு ஏற்ற வகுப்பறைகள், பல்நோக்கு அரங்குகள், நூலகங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை உருவாக்குதல்.

**2. சுற்றுச்சூழல் ரீதியாக நிலையான, பசுமைப் பள்ளிகளை உருவாக்குதல்.**

- அரசுப் பள்ளிகளில் படிப்படியாக சூரிய மின்சக்தி அமைப்புகளுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்தல்.
- மழைநீர் சேகரிப்பு, நீர் மறுசுழற்சி மற்றும் கழிவு மேலாண்மை அமைப்புகளைக் கட்டாயமாக்க நிறுவுதல் .



- சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்ப்பதற்காகப் பள்ளி வளாகங்களில் மூலிகைச் செடிகள் வளர்த்தல், சமையலுக்கான காய்கறித் தோட்டங்கள் உருவாக்குதல் மற்றும் நிழல் தரும் மரங்களை ஏற்படுத்துதல்.

**3. அனைவருக்குமான பயன்பாடு மற்றும் வடிவமைப்பை மேம்படுத்துதல்**

- சாய்தளம், எளிதில் பயன்படுத்தக்கூடிய கைப்பிடிகளுடனானக் கழிவறைகள் மற்றும் உதவிப் பொருட்களான வகுப்பறைத் தளவாடங்கள் உள்ளிட்டவற்றை மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் தடையின்றிப் பயன்படுத்தும் வகையில் பள்ளிகளை மேம்படுத்துதல்.
- பெண் குழந்தைகளுக்கு தனி கழிவறைகள் மற்றும் மாதவிடாய்க் காலங்களில் சுகாதார வசதிகளுடன் கூடிய பாலின சமத்துவ உள்கட்டமைப்பை உருவாக்குதல்.
- வகுப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தில் அறிவிப்புப் பலகைகள் மற்றும் இருக்கை வசதிகளை ஏற்படுத்துதல்.

**4. திறன்மிகு தொழில்நுட்பம் சார்ந்த வளாகங்களை உருவாக்குதல்**

- அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் எண்ம வகுப்பறைகள், தகவல் தொடர்புத் தொழில்துட்ப ஆய்வகங்கள் மற்றும் இணைய இணைப்பை விரிவுபடுத்துதல்.
- பேரிடர் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் பள்ளி வளாகங்களுக்குள் சமூகப் பல்நோக்குத் தங்குமிடங்களை உருவாக்குதல்
- சிறப்புத்தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு ஒலி-நூல்கள் (audio books) எண்ணுரு கற்றல் உள்ளடக்கங்கள், மற்றும் உதவித் தொழில் நுட்பங்களை வழங்குதல்.

**கற்றல்-கற்பித்தல் பொருட்கள் மற்றும் வளங்கள்.**

கற்றலில் குழந்தைகளின் பங்கேற்பு மற்றும் வகுப்பறைக் கற்பித்தல் மேம்பாடு ஆகியவற்றில் தேவைக்கேற்ற கற்றல்-கற்பித்தல் பொருட்களின் பயன்பாடு குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. இதில் பின்வரும் தற்போதைய சாதனைகளும் அடங்கும்.

- 93% பள்ளிகள், கணக்கு, மொழிப்பாடம், அறிவியல் பாடங்களுக்கு பாடம் - சார்ந்த துணைக் கருவிகளைப் பயன்படுத்துகின்றன.
- 90% ஆசிரியர்களுக்கு வளநூல்கள் கிடைத்திருக்கின்றன.
- 87% பள்ளிகள் ஒலி - ஒளிக் கருவிகளையும் விளையாட்டு அடிப்படையிலான கற்றல்-கற்பித்தல் துணைக் கருவிகளையும் பயன்படுத்துகின்றன.

பெரும்பாலான பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்புகள் நன்கு ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் தொடக்க மற்றும் உயர்தொடக்க வகுப்புகளில் ஊடாடும் கற்றல் பொருட்கள், மின்னனு வளங்களை விரிவுபடுத்த மேம்படுத்தப்பட்ட முயற்சிகள் தேவைப்படுகின்றன.





**இன்றியமையாத பள்ளி வசதிகள்**

அனைத்துப் பள்ளிகளிலும் அத்தியாவசிய வசதிகளை அரசு முறையாகப் பராமரிப்பதை உறுதி செய்ய வேண்டும். இதன் பொருட்டு அரசு அடுத்த மூன்று ஆண்டுகளில் ஆய்வகங்கள், பன்னோக்கு அரங்கங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றை 100% அனைத்துப் பள்ளிகளிலும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சிறுவர், சிறுமியருக்காள தனித்தனியான பயன்படுத்தத்தக்க கழிவறைகள்
- சுத்தமான குடிநீர்
- வகுப்பறைகளில் இயங்கும் நிலையில் மின்விசிறிகள் மற்றும் மின் விளக்குகள்.
- போதுமான விளையாட்டு உட்கட்டமைப்பு.
- செயல்படும் நிலையிலுள்ள அறிவியல் ஆய்வகங்கள்

**கண்காணிப்பு, பொறுப்புடைமை மற்றும் சமூகக் கூட்டாண்மைகள்**

- தொடர் கண்காணிப்பிற்காக உள்கட்டமைப்புகளின் தரம், பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் அணுகலுக்கான குறியீடுகளை மாநில கல்வித்தகவல் மேலாண்மை அமைப்புடன் ஒருங்கிணைத்தல்.
- பள்ளி வளாகப் பராமரிப்பு, பசுமை முன்னெடுப்புகள், பாதுகாப்புத் தணிக்கைகள் ஆகியவற்றுக்காக, பள்ளி மேலாண்மைக் குழுக்கள், பெற்றோர் சங்கங்கள், உள்ளூர் இளைஞர் மன்றங்கள் ஆகியவற்றின் மூலம் சமுதாயப் பங்கேற்பை ஊக்குவித்தல்.
- வெளிப்படைத்தன்மைக்காக ஆண்டுதோறும் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளின் இருப்புநிலை அறிக்கையினை வெளியிடுதல், முடிவெடுத்தலைப் பரவலாக்குதல்.

**முடிவுரை:**

கடந்த நான்காண்டுகளில் (2021 - 2025) தமிழ்நாடு அரசு நிலையான நிதி ஒதுக்கீடுகள், மற்றும் இலக்கு சார்ந்த முதலீடுகள் மூலம் பள்ளிக்கல்விக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. ஆண்டு நிதிநிலை அறிக்கைகளில் பள்ளிக் கல்வித்துறைக்கான ஒதுக்கீடு ரூ.50,000 கோடியைத் தாண்டியுள்ளது. இந்தக் காலகட்டத்தில் பள்ளிக்கல்வித்துறைக்கான ஒதுக்கீடு ரூ. 2,15,264 கோடியாக உள்ளது. இதில் ரூ. 4386 கோடி புதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது உட்பட, உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வகுப்பறைகள், திறன் வகுப்பறைகள், அறிவியல் மற்றும் கணினி ஆய்வகங்கள், கழிவறைகள், குடிநீர் வசதிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் சுற்றுச் சுவர், இல்லம் தேடிக் கல்வி, மாதிரிப்பள்ளிகள் (வெற்றிப் பள்ளிகள்), பள்ளி சீரமைப்பு மற்றும் நவீனமாக்குதல் திட்டங்கள், மின்னணுக் கற்றலுக்கான கட்டமைப்பு வசதிகள் போன்ற தடம்பதிக்கும் முன்னெடுப்புகள் இந்த நிதி ஒதுக்கீட்டால் அடையப்பெற்றுள்ளன.

இந்தக் கொள்கை வடிவமைப்பு, இச்சாதனைகளை ஒருங்கிணைத்து அடுத்த கட்டத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயமாக்குதலுக்கு, உரிய செயல்திட்டத்தைக் கட்டமைக்கிறது. காலநிலைக்கேற்ற, நெகிழ்வுத்திறன் கொண்ட,



செயல்திட்டத்தைக் கட்டமைக்கிறது. காலநிலைக்கேற்ற, நெகிழ்வுத்திறன் கொண்ட, பசுமைச் சான்றளிக்கப்பட்ட, மின்னணு இணைப்பு பெற்ற, உள்ளடங்கிய பள்ளி வளாகங்களை உருவாக்கி அவற்றைக் கல்விசார் சிறப்பு மையங்களாகவும், நிலைத்தன்மையுள்ள, பேரிடர் மீள்தன்மையுடன் கூடிய சுற்றுச் சூழல் மேற்பார்வைக்கான சமூக மையங்களாகவும் செயல்படச் செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது.

தமிழ் நாட்டின் பள்ளிகளை எதிர்காலத்திற்கு ஏற்ப ஆயத்தமாகவும், எளிதில் அணுகக்கூடியதாகவும் சுற்றுச்சூழல் உணர்வுள்ளதாகவும் மாற்றுவதன் மூலம், 21ஆம் நூற்றாண்டின் திறன்களைக் கொண்டவர்களாக நவீன தலைமுறை மாணவர்களை அரசு தயார்படுத்துகிறது. அதே நேரத்தில் உள்ளடங்கிய வளர்ச்சி, சமூக சமத்துவம், நீடித்த மாநில வளர்ச்சி ஆகியவற்றை உருவாக்குவதில் கல்வியின் முக்கியப் பங்கை மீண்டும் வலியுறுத்துகிறது.





# இயல் 10: சமூகப் பங்கேற்பு மற்றும் பரவலாக்கப்பட்ட நிருவாகம்

**அறிமுகம்**

ஒரு கல்விமுறை, தான் சேவை செய்யும் சமூகங்களில் வேரூன்றியிருக்கும்போது மலர்கிறது. உள்ளடங்கிய, மக்கள்-மைய நலன் காக்கும் நிருவாக முறைமையைத் தனது வளமான மரபாகக் கொண்ட தமிழ்நாடு, உள்ளூர்ச் சமுதாயத்தின் பேராதரவுடன் வடிவமைக்கப்படும்போதுதான் பள்ளிகள் துடிப்பான பொறுப்புடைமைமிக்க நிறுவனங்களாக எழுச்சி பெறுகின்றன என்பதை அங்கீரித்து வருகிறது.

சமூகப் பங்கேற்பும், பரவலாக்கப்பட்ட நிருவாகமும் புறச் செயல்பாடுகள் அல்ல. மாறாக அவை பயனுள்ள, பொறுப்பு மிக்க, சமச்சீரான கல்வி அமைப்பை உருவாக்குவதற்கான இன்றியமையாத உந்துசக்திகளாகும். இந்த இயல், சமூக ஒருங்கிணைப்பு, கூட்டுப் பொறுப்பு மற்றும் ஜனநாயகப் பங்கேற்பு ஆகியவற்றின் துடிப்பான மையங்களாகப் பள்ளிகள் விளங்குகின்றன எனக் கருதுகிறது. மேலும், குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கும் அவர்கள் சார்ந்த சமூகத்தின் நிலையான வளர்ச்சிக்கும் இது பங்களிப்பதாக உள்ளது.

**தற்போதைய நிலை**

தமிழ்நாடு, குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-இன் விதிகளின்படி, பள்ளி மேலாண்மைக் குழுக்களை (SMC) ஏற்படுத்தியுள்ளது. பள்ளி அளவிலான திட்டமிடல், மானியங்களின் பயன்பாடு மற்றும் சமுதாயப் பங்கேற்புச் செயல்பாடுகள் ஆகியவற்றை இந்த அமைப்புகள் மேற்பார்வையிடுகின்றன.

உள்ளாட்சி நிருவாகப் பங்களிப்பு (71%), குடிமைச் சமூக அமைப்பு மற்றும் நிபுணத்துவம் பெற்ற தனிநபர்களின் பங்களிப்பு (67%) ஆகியவை ஊக்கமளிப்பதாக இருந்தாலும், சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு (53%), பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) (52%) ஆகிய இரண்டையும் மேலும் வலுப்படுத்த வேண்டியுள்ளது. நிலையான பள்ளி மேம்பாடு மற்றும் சமூக நலவாழ்வை அடைய ஆழ்ந்த ஈடுபாட்டுடன் கூடிய உள்ளூர் தலைமையை உருவாக்கவும் பங்கேற்பு வழிமுறைகளை முறைப்படுத்தவும் தேவையான வாய்ப்புகள் உள்ளன.

**நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி - (NSNOP)**

2022இல் தொடங்கப்பட்ட **நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NSNOP)** முன்னெடுப்பானது தமிழ்நாட்டிலுள்ள அரசுப்பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த, சமுதாயம், முன்னாள் மாணவர்கள், பெருநிறுவனங்கள் ஆகியவற்றின் ஆதரவைத் திரட்டுகிறது. இணையதளம் மற்றும் செயலி வாயிலாகப் பள்ளிகள் தங்கள் தேவைகளைப் பட்டியலிடுகின்றன. அவற்றுக்குப் பள்ளி மேலாண்மைக் குழுக்களால் ஒப்புதல் அளிக்கப்படுகின்றன.



இதுவரை  ரூபாய் 755 கோடி நிதி திரட்டப்பட்டு 7000க்கும் அதிகமான பள்ளிகளில், திறன் வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள், மற்றும் விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட பயன்கள் பெறப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் கொடையாளர் சந்திப்புகள், கல்வி மேலாண்மைத் தகவல் மைய (EMIS) ஒருங்கிணைப்பு, முன்னாள் மாணவர் ஈடுபாடு மற்றும் வழக்கமான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் பள்ளிகளை நவீன, உள்ளடங்கிய மற்றும் சமூகத்திற்குச் சொந்தமான கற்றல் மையங்களாக மாற்றுவதை இந்த கல்விக்கொள்கை இலக்காகக் கொண்டுள்ளது.

**முன்னாள் மாணவர் ஈடுபாடு - விழுதுகள்**

பள்ளிகளின் வளர்ச்சியில் முன்னாள் மாணவர்கள் மாற்றத்தை ஏற்படுத்த வல்லவர்கள் என்பதால் அவர்களின் அறியப்படாத திறன்களை அங்கீகரித்து, தமிழ்நாடு அரசு 2024ஆம் ஆண்டு **'விழுதுகள்'** திட்டத்தைத் தொடங்கியது. முன்னாள் மாணவர்களை அவர்கள் படித்த பள்ளிகளுடன் மீண்டும் இணைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட '**விழுதுகள்'** திட்டம், அரசுப் பள்ளிகளில் வழிகாட்டுதல், வளங்களைத் திரட்டுதல் மற்றும் சமூகமாகப் பெருமிதம் அடைதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. பள்ளிகளை மேம்படுத்துதல் முன்னாள் மாணவர்களைப் பொறுப்பாளர்களாக ஒருங்கிணைப்பதன் மூலம் **நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NSNOP)** முன்னெடுப்பு முழுமையாகிறது.

**செயல்திட்ட வரைவு**

பின்வரும் நடவடிக்கைகள் மூலம் சமூகப்பங்கேற்பு மற்றும் பரவலாக்கப்பட்ட நிருவாகத்தைப் புத்துயிர் பெறச் செய்ய ஒரு விரிவான மற்றும் எதிர்காலத்திற்கான வடிவமைப்பை அரசு முன்மொழிகிறது:

**1. பள்ளி மேலாண்மைக் குழுக்களை (SMCs) வலுப்படுத்துதல்:**

- பள்ளி நிருவாகம், நிதி மேலாண்மை, குழந்தை உரிமைகள் மற்றும் உள்ளடங்கிய கல்வி ஆகியவற்றில் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களின் திறனைத் தொடர்ந்து மேம்படுத்துதல்.
- பன்முகத்தன்மை மற்றும் உள்ளடங்கலை வளர்ப்பதற்காக பள்ளி மேலாண்மைக்குழுக்களில் பெண்கள், நலிவுற்ற பிரிவைச் சார்ந்த பெற்றோர், இளம் தலைவர்கள் மற்றும் உள்ளூர்த் தன்னார்வலர்கள் ஆகியோரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதை ஊக்குவித்தல்.
- பள்ளி மேம்பாட்டுத் திட்டங்கள் (SIPs) தயாரிப்பது, கல்விச் செயல்பாடுகளின் கண்காணிப்பு, உள்கட்டமைப்பு மேலாண்மை மற்றும் நலத்திட்டங்கள் ஆகியவற்றில் பள்ளி மேலாண்மைக் குழுக்களை முழுமையாக ஈடுபடுத்துதல்.

**2. சமூகத் தலைமையிலான பள்ளி மேம்பாட்டு முன்னெடுப்புகளை வளர்த்தல்.**

- சூழல் சார்ந்த கல்வித் தேவைகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள்





மற்றும் குழந்தைப் பாதுகாப்பு சார்ந்த சிக்கல்கள் ஆகியவற்றை நிவர்த்தி செய்ய உள்ளூர்-பள்ளிச் சமூகக் கூட்டாண்மைகளை ஊக்குவித்தல்.

- கிராமங்கள், நகர்ப்புற சுற்றுப்புறங்கள் மற்றும் புலம் பெயர்ந்தோர் சங்கங்கள் ஆகியவை பள்ளிகளைத் தத்தெடுத்து உள்கட்டமைப்பு, நூலகம், பாட-இணைச் செயல்பாடுகள் ஆகியவற்றில் உறுதுணைபுரிய ஊக்குவித்தல்.
- சமூக உரிமைக் கலாச்சாரத்தை நிறுவனமயமாக்க, வட்டார மற்றும் மாவட்ட அளவில் சிறப்பாகச் செயல்படும் பள்ளி மேலாண்மைக்குழுக்கள், சமூகத் தலைமையின் புதுமைகள், பெற்றோர் தன்னார்வலர்கள் ஆகியோரை அங்கீகரித்து, வெகுமதி வழங்குதல்.

### 3. பரவலாக்கப்பட்ட திட்டமிடலையும் முடிவெடுத்தலையும் நிறுவனமயமாக்குதல்

- பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மற்றும் சமுதாயப் பிரதிநிதிகளின் முழுமையான பங்கேற்புடன் பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கப் பள்ளிகளுக்கு அதிகாரமளித்தல்.
- ஒருங்கிணைந்த குழந்தை நலன் மற்றும் கல்விசார் பணிகளுக்காக, பள்ளிகள், ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட மையங்கள் (ICDS) மற்றும் சுகாதாரத்துறை ஆகியவற்றுக்கிடையே செயல்பாட்டில் ஒருங்கிணைப்பை வளர்த்தல்.
- வருடாந்திர பள்ளி செயல்திறன் அறிக்கைகளை, பொறுப்பேற்கும் தன்மைக்காகவும், வெளிப்படைத் தன்மைக்காகவும் சமூகப் பங்கேற்புக் குறியீடுகளுடன் ஒருங்கிணைத்தல்.

### 4. பொது-தனியார் - சமூகக் கூட்டாண்மைகளை உருவாக்குதல்

- பள்ளிகளுக்குத் தேவையான வளங்கள் மற்றும் சேவைகளை அதிகமாகப் பெறுவதற்கு சமூக அமைப்புகள், பெருநிறுவன சமூகப் பொறுப்பு முன்னெடுப்புகள், முன்னாள் மாணவர் கூட்டமைப்பு, சுய உதவிக் குழுக்கள் மற்றும் உள்ளூர் தன்னார்வ அமைப்புகளுடன் கட்டமைக்கப்பட்ட கூட்டாண்மைகளை உருவாக்குதல்.
- **'நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி' (NSNOP)** திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கு தொழிற்துறையினர், முன்னாள் மாணவர்கள் மற்றும் சமூக ஆதரவாளர்களின் பங்கினை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் மாவட்ட மற்றும் மண்டல அளவில் நன்கொடையாளர்களை ஒருங்கிணைக்க வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழுவினை (SMC) வலுப்படுத்துவதன் மூலம், பள்ளி அளவிலான மேம்பாட்டுத் திட்டங்களைத் திறம்பட நிர்வகிக்க முடியும். நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளியை கல்வி மேலாண்மைத் தகவல் மையத்துடன் ஒருங்கிணைப்பது தற்போதைய நிதி மற்றும் திட்டத்தினைக் கண்காணிக்கவும் உதவும்.
- 'விழுதுகள்' என்ற புதிய முயற்சி மூலம் முன்னாள் மாணவர்களைத் திரட்டுவதன்



வாயிலாகப் பள்ளிக்குத் தேவையான நிதி மற்றும் வழிகாட்டுதலைப் பெறுதல். இத்திட்டம் சார்ந்து வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும் வகையில் மாநிலம் தழுவிய விழிப்புணர்வு பிரச்சாரங்களைத் தொடங்கி வைத்தல் மற்றும் தணிக்கைகளை நடத்துதல்.

- ‘விழுதுகள்’ திட்டத்தினை விரிவுபடுத்த, மையமாக்கப்பட்ட முன்னாள் மாணவர் எண்மத் தளத்தை உருவாக்குதல். பள்ளிகளில் முறையான முன்னாள் மாணவர் சங்கங்களை ஊக்குவித்தல் மற்றும் முன்னாள் மாணவர் கூட்டங்களை ஏற்பாடு செய்தல். "நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NSNOP) மூலம் மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் வழங்குதல், பள்ளிக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்பாடு செய்தல். சிறந்த முன்னாள் மாணவர் சங்கங்களை மாநில மற்றும் மாவட்ட அளவில் அங்கீகரிப்பதன் மூலம் அவர்களின் பங்களிப்பை அதிகப்படுத்துதல்.
- முன்னாள் மாணவர் அமைப்புகளை, சமூக ஊடகங்கள், பள்ளி நிகழ்வுகள் மற்றும் விழிப்புணர்வு இயக்கங்கள் மூலம் ஊக்குவிப்பதன் அடிப்படையில் அரசுப் பள்ளிகளுடன் முன்னாள் மாணவர்களை இணைத்தல்.
- சமூகப் பொறுப்பாளர்களால் தொடங்கப்படும் முன்னாள் மாணவர் வழிகாட்டுதல் திட்டங்கள், உயர்கல்வி வழிகாட்டுதல் அமர்வுகள் மற்றும் உள்ளடக்கிய கல்வி முயற்சிகள் ஆகியவற்றை ஊக்குவித்தல்.
- பள்ளி வளாகத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், சாலைப் பாதுகாப்பு இயக்கங்கள் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்புத் திட்டங்களில் சமுதாயம், பெற்றோர் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுக்களை ஈடுபடுத்துதல்.
- தினக்கூலி பெறும் பெண்கள் மற்றும் புதிதாகக் கல்வி அறிவு பெற்றோருக்கு எளிமையான, படங்களுடன் கூடிய சிறு வாசிப்பு புத்தகங்களைப் பள்ளிகள் மற்றும் சுய உதவிக்குழுக்கள் வாயிலாக விநியோகித்தல்.

**குழந்தைப் பாதுகாப்பு மற்றும் இளம் பருவத்தினருக்கான வழிகாட்டுதல் முன்னெடுப்புகள்**

- பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் உள்ளூர் அரசுத்துறைகள் மூலம் குழந்தை உரிமைகள், கல்வி சார்ந்த ஆலோசனைகள் மற்றும் குழந்தைப்பருவத் திருமணத்தின் இடர்கள் குறித்து வளரிளம்பருவப் பெண்களின் பெற்றோருக்கு அவ்வப்போது விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துதல்.
- சமூகக் காவல் மற்றும் விற்பனையாளர்களைக் கொண்டு பள்ளிக்கு அருகில் போதைப்பொருள்கள் நடமாட்டத்தைத் தடுப்பதில் பள்ளி மேலாண்மைக் குழு, உள்ளாட்சி அமைப்புகள், பெற்றோர் மற்றும் சமூக உறுப்பினர்களை ஈடுபடுத்துதல்.
- மருத்துவர்கள், உளவியலாளர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சட்ட அமலாக்கத் துறையுடன் இணைந்து போதைப்பொருள் பயன்பாடு, நலம் மற்றும்





குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு அமர்வுகளுக்கு ஏற்பாடு செய்தல்.

**கண்காணிப்பு மற்றும் பொறுப்புணர்வு**

- பள்ளி மேலாண்மைக்குழு, பள்ளி மேம்பாட்டுத்திட்ட ஒப்புதல், நிதிப் பயன்பாடு மற்றும் சமுதாயப் பங்கேற்பு ஆகியவற்றைக் கண்காணிக்கத் தொழில்நுட்ப உதவியுடன் கூடிய மாநில மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் கட்டமைப்பை நிறுவுதல்.
- பரவாலக்கப்பட்ட கல்வி நிருவாகக் கட்டமைப்புகளில் மூன்றாம் நபர் மதிப்பீடுகளை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்துதல்.
- வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த கல்வி மேலாண்மைத் தகவல் மையம் மற்றும் வருடாந்திர பள்ளி அறிக்கை அட்டைகளில் சமூகப் பங்கேற்பு மற்றும் கூட்டாண்மைக் குறியீடுகளை ஒருங்கிணைத்தல்.

**சமூகப் பங்கேற்பு**

மாநில அடைவு ஆய்வு/தேசிய அடைவு ஆய்வு 2024 இன் தரவுகள் பள்ளிகளுக்குச் சமூகத்தால் வழங்கப்படும் பங்களிப்பை வெளிப்படுத்துகிறது.

| சமூகப் பொறுப்பாளர் | பங்களிப்பு |
|---|---|
| ஊராட்சித் தலைவர் / வார்டு உறுப்பினர் | 71% |
| வல்லுநர்கள் (அரசு சாரா நிறுவனங்கள் NGOs) | 67% |
| சுயஉதவிக் குழுக்கள் | 53% |
| பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) | 52% |

சமுதாய ஈடுபாட்டினை மேலும் வலுப்படுத்த, அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் அனைத்துப் பங்காளர் குழுக்களின் சிறப்பான பங்கேற்பினை 100% ஏற்படுத்துவதை மாநிலக் கல்விக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாவட்ட அளவில் சமூகத்தை ஈடுபடுத்தும் முகாம்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனச் சமூகப் பொறுப்பு (CSR) அமைப்புகளுடன் முறையான கூட்டாண்மைகள், சுயஉதவிக் குழுக்களுக்கான ஊக்கத்தொகை அடிப்படையிலான பங்கேற்பு வடிவமைப்புகளை உருவாக்குதல். மேலும் தமிழ்நாடு முழுவதையும் உள்ளடக்கிய சமூகத் தலைமையிலான பள்ளி மேம்பாட்டு முயற்சிகளை முன்னெடுப்பதில் பள்ளி மேலாண்மைக் குழுக்களை (SMC) ஊக்கப்படுத்துதல்.

**முடிவுரை**

தமிழ்நாட்டில் சமமான, உள்ளடங்கிய மற்றும் சூழலுக்கு உகந்த கல்வியை அடைவதற்கான உத்திகளின் தூண்களாகச் சமூக ஈடுபாடும் பரவலாக்கப்பட்ட



நிருவாகமும் உள்ளன. ஜனநாயகப் பங்கேற்பை அதிகப்படுத்துதல், உள்ளூர்த் தலைவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் துடிப்பான பொது- தனியார்- சமூகக் கூட்டாண்மைகளை வளர்த்தல் ஆகியவற்றின் வாயிலாக, பள்ளிகளை வெறும் கற்றல் மையங்களாக மட்டுமல்லாமல் சமூக மேம்பாடு மற்றும் சமூக நல்லிணக்கத்தினை ஆழமாக நிலைநிறுத்துவதைத் தமிழ்நாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

**இந்த கல்விக் கொள்கையின் தொலைநோக்குப் பார்வை,ஒவ்வொரு பள்ளியையும், அப்பகுதி சார்ந்த மக்களால் வளர்க்கப்பட்ட தங்களின் கூட்டு விருப்பங்களுக்குப் பதிலளிக்கக்கூடிய தமிழ்நாட்டின் கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள குழந்தைகளின் முழுமையான வளர்ச்சி மற்றும் சமூக ஒற்றுமையை உறுதிப்படுத்தும் எழுச்சிமிகு பங்கேற்பு மற்றும் நெகிழ்வுத்தன்மையுள்ள நிறுவனமாக நிலைநிறுத்துகிறது.**





தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு

குறள் - 396

“மணலில் தோண்டத் தோண்ட ஊற்று நீர் கிடைப்பது போல, தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்”

